DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

For Your Rental Needs
HOME Rentals
416-703-7300 | info@ihomerentals.ca

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan Sales Representative
kailain.thillai@gmail.com | homesbyraghu@gmail.com
Ragu Thillainathan Sales Representative

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302. 5748
FULL HD
www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
என்னை அழையுங்கள்
Raj Perampalam
Broker
Direct: 416-897-9155
Office: 416-221-0999

26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்
தித்திக்கும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்
Member of National Ethnic Press and Media Council of Canada
Canada's Other Voices
Canadian Media Circulation Audit
$1.00
416-752-1524 www.uthayannews.ca

PYRAMID GROUP
UTHAYAN 416.301.5555
RAJ 416.843.3333
KUMAR 416.453.7777

வீடு வாங்க விற்க...
Buying? Selling?
மோகன் சுப்பிரமணியம்
Mohan Subramaniyam
Broker / President
416 321 2300
PROPERTY MAX
MohanTeam.com
6888-14th Avenue Markham ON, L6B 1A6

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Family sponsorship;
Super visa for parents and grandparents including health insurance;
Citizenship;
Permanent resident card renewal;
Kokulan Baskaran
Tax Consultant
Tel: 647-344-6600
info@allinoneserves.ca
www.allinoneservices.ca

MORTGAGE
மோட்கேஜ்
NESAN
416-908-5656
SUBRA
subra.com
solutions@subra.com
Toll: 1-844-878-2721 | Fax: 647-351-3099

உதயம் 1391
CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM
Friday December 2, 2022

# ஒன்றாரியோவில் சிறுவர்களை துஸ்பிரயோகம் செய்த குற்றச் சாட்டுக்கள் தொடர்பாக ஒரே வாரத்தில் 107 நபர்கள் மீது வழக்கு




கனடாவின் ஒன்ராறியோ மாகாணத்தில் சிறுவர்களை துஸ்பிரயோகம் செய்த பல குற்றச் சாட்டுக்கள் தொடர்பாக ஒரே வாரத்தில் சுமார் 107 சந்தேக நபர்கள் மீது ஒன்றாரியோ மாகாணப் பொலிசாரும் ரொறன்ரோ போன்ற பிராந்தியப் பொலிசாரும் பல வழக்குப் பதிந்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக மேலும் அறிவித்துள்ள பொலிசார் சிறுவர்களை துஸ்பிரயோகம் செய்தமை மற்றும் தவறான பாலியல் தொடர்பு நோக்கத்துடன் இணையத்தை பயன்படுத்துதல் போன்ற குற்றங்களை தடுக்கும் நோக்கில் பொலிஸார் **Maverick** என்ற பெயரில் இணையத்தள திட்டமொன்றை பயன்படுத்தி வந்தனர்.

இந்த நிலையில் ஒன்றாறியோ பொலிஸாருடன் 27 குழுக்கள் இணைந்து குறித்த திட்டத்தை முன்னெடுத்தது. இதில், அக்டோபர் மாதத்தில் மட்டும் 227 வழக்குகளை விசாரணைக்கு எடுத்துக் கொண்டுள்ளனர். இந்த விடயமானது தங்கள் மாகாணத்திற்கு பெரிய வெற்றியைத் தந்துள்ளது என ஒன்றாரியோ மாகாண சட்டத்துறை நாயகம் பாராட்டுக்களைத் தெரிவித்துள்ளார்.

(தொடர்ச்சி 4ம் பக்கத்தில்)

# நாளை மறுநாள் 3ம் திகதி நடைபெறவுள்ள Keyboard Talent Show

பைரவி இசைக் கல்லூரி வழங்கும் **Keyboard** இசை நிகழ்ச்சி எதிர்வரும் டிசம்பர் மாதம் 3ம் திகதி சனிக்கிழமை அன்று **1120 Tapcott Rd, Unit 3, Scarborough** வில் அமைந்துள்ள தமிழ் இசைக் கலாமன்ற மண்டபத்தில் மாலை 6:00 மணிக்கு நடைபெறவுள்ளது.

நிகழ்ச்சி வழங்குபவர்: அற்ஷானி லினஸ், கேஷினி லினஸ், றேசல் லினஸ்.

அனைவரையும் அன்புடன் அழைக்கப்படுகின்றார்கள்.



Residential & Commercial Real Estate Services
என்னை அழையுங்கள்
பாலா லோகன்
647-447-1562
Bala Logendralingam
Sales Representative
RE/MAX COMMUNITY

JENITA AREVIN
BROKER
DOWNTOWN SPECIALIST
416.320.3201
JENITA@AREVIN.CA
ROYAL LEPAGE IGNITE REALTY, BROKERAGE
INDEPENDENTLY OWNED AND OPERATED
ROYAL LEPAGE ignite

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
107 Dundas St, East, Mississauga, ON, L5A 1W7
23-8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1
905-272-1222
905-794-4404
online service: www.remitbee.com

RE/MAX ACE REALTY INC., BROKERAGE
Baskaran Sinnadurai
Commercial · Industrial · Investment
Dir: 416.880.8585
Off: 416.270.1111
Fax: 416.270.7000
baskaran.toronto@hotmail.com

Krishna Punniyam
MORTGAGE ALLIANCE
RIGHT TEAM
MORTGAGE AGENT
ACCOUNTING
Purchase & Refinance
First Mortgage
Second Mortgage
Commercial Mortgage
Equity Loan
Personal Income Tax
Corporate Income Tax
HST Returns
Bookkeeping Service
Payroll Service
Audit preparation
Business Startup service
Mobile: 416.710.9150

SRI NADARAJASUNDARAM
Broker
416-276-6666
RE/MAX ACE REALTY INC. BROKERAGE
1286 Kennedy Rd, Unit 3 Toronto, ON, M1P 2L5

வீடு வாங்க விற்க...
ANUJA KUMARASAMY
647-267-7482
RE/MAX REALTRON TEAM

INCOME TAX! INCOME TAX! INCOME TAX!
Personal ✓ Corporation ✓ New Home HST Filling
Selva Vettyvel
416.568.4301 , 905.471.4050
204-7 Eastvale Drive, Markham ON. L3S 4N8

RE/MAX REALTRON BLUE FORCE
TEAM BLUE FORCE
வீடு வாங்க விற்க இன்றே அழையுங்கள்
DIRECT 416 2888882
கவாஸ் சச்சிதானந்தன்

tasty தமிழா ™

# தமிழ் மண்ணிலிருந்து நேரடியாக உலகெங்கும்...










இலங்கை மற்றும் தென்னிந்திய மசாலா பொருட்கள் பாரம்பரிய உணவு வகைகள்..

கனடாவில்

**Tasty** தமிழா தயாரிப்புகள் இங்கு கிடைக்கும்..

MAHAANS PICK & PRESS OIL MILL INC
Organic Bulk Store & Water Filling Station
5635 Finch Ave East,
Unit 5, Scarborough M1B 5K9.

Call: 416 293 4010

MAHAANS PICK & PRESS OIL MILL INC

## சிறு விளம்பரங்கள் - CLASSIFIED ADS

### Rich Cakes by Araviram

றிச் கேக் ஆர்டர் செய்ய விரும்பீர்களா?

**Spoil your guests with our delicious Sri Lankan Rich Cakes, they make the perfect treat for any event!**
**Contact:**
**Raguram - 647 648 1154**

### காணி விற்பனைக்கு உள்ளது

யாழ் ராஜ வீதியில் அண்ணளவாக 100m தூரத்தில் 1 1/4 பரப்பு வீடு கட்டக் கூடிய காணி 70 Laks ற்கு விற்பனைக்கு உள்ளது. நல்லூர் கோயிலில் இருந்து 5 நிமிடங்களில் காரில் செல்லக்குடிய இடம்.

**விபரங்களுக்கு:**
BASGARAN (416) 335-9335
WhatsApp (cell): (011) 44 7960 460546
shelliah@indoeuro.net

1 1/4 பரப்பில் இருந்து 5 பரப்பு வரை விற்பனைக்கு உள்ள.

### மணமகன் தேவை

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த, கனடாவில் பிறந்த எனது 29 வயது மகளுக்கு நன்கு படித்த, நற்குணம் கொண்ட மணமகன் தேவை.

**தொடர்புகளுக்கு:** RAJ
(647) 293-2784
(phone or text)

### KITCHEN HELPER & LINE COOK WANTED

Part-time kitchen helper, line cook's, dish washer, South Indian cook, Continental cook, ladies South Indian cook wanted.

Call AMAR:
(416) 988-9518

7370 Woodbine Ave. Unit 9
Woodbine & Denison, Markham

### Basement for Rent

**Denison and Featherstone** சந்திப்பிற்கு அருகில் உள்ள ஒரு அறை கொண்ட **basement with separate entrance** உடனடியான வாடகைக்கு உண்டு. **Laundry separate.** பெண்கள் விரும்பத்தக்கது.
**Call: John**
**647-965-0754**

### இரண்டு அறைகள் வாடகைக்கு விடப்படும்

2 room for rent in Richmond (Elginmills & Yonge)

1) One room is full furnished for rent with one parking on the ground floor.

2) One room is fully furnished for rent to female seniors or female students on the first floor.

CONTACT: RAJAH
(416) 454-1893

## TRADITIONAL CHINESE ACUPUNTRE THERAPY CENTRE

| | |
|---|---|
| எல்லாவிதமான வலிகளுக்கும் ஆஸ்மா, பீனிசம், ஒவ்வாமை மனத்தளர்ச்சி, தலைவலி, நீரிழிவு நோய், வயிற்றுவலி, மாதவிடாய் சம்மந்தமானவையும் உடற்பருமன் குறைத்தல் | All Pain & Aches, Arthritis<br>Asthma, Sinusitis, Rhinitis Allergies<br>Stress, Migraine & All Types of Headaches<br>Diabetes, Gastric Pain, Ulcer<br>Menstruation<br>Weight Loss |

முதலான சகலவிதமான நோய்களுக்கும்
**Mrs. K. Vasanthakumar** ஐ
தொடர்புகொள்ளவும்

**Tel: (416) 754-4024**

Member of College of Traditional Chinese Medicine Practitioners & Acupuncturists of Ontario. R.AC
D.Ac, M.A.C.F, M.Ac.A.M.A, M.CA.CA



3852 Finch Avenue East
Suite 302
Scarborough, ON
M1T 3T9

## Sapphire Banquet & Catering

---------------------------

**Specializing in Videography & Photography**

- Anniversary Party
- Birthday Party
- Bridal Shower
- Engagement Party
- and more...
- Family Get-together
- Graduation Party
- Religious Ceremonies
- Wedding Showers

**SHIVA SUBRAMANIAM**
**(647) 406-4868**

Canada

We acknowledge the financial support of the Government of Canada through the Canada Periodical Fund of the Department of Canadian Heritage.

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் — Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Ganesh.
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah,

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON MIC 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

உதயன் கதிரோட்டம்

# ‘ஆசைகள்’ அதிகமாகிப் போய்விட்டனவா, மாவை சேனாதிராஜாவிற்கு?...

இலங்கையில் தமிழ் மக்களின் அரசியல் எதிர்காலத்தை சூனியமாக்கியவர்கள் யார் என்ற கேள்வி எழுகின்ற போது எம்மில் அறுபது வயதைக் கடந்தவர்களில் அதிகமானவர்கள் ‘ “தமிழ்க் கட்சிகள் தான்” என்று உடனேயே பதிலைத் தந்து விடுவார்கள். அந்தளவிற்கு கடந்த 50 வருடங்களுக்கு மேலாக பாராளுமன்ற அரசியல் பதவிகளையும் அமைச்சர் பதவிகளையும் பெற்று தென்னிலங்கை அரசியல் கட்சிகளுக்கு தூண்களாக விளங்கியும் தங்கள் குடும்பங்களின் பொருளாதார மற்றும் உயர் கல்வி சார்ந்த விடயங்களை கவனித்ததும் தாங்கள் மட்டும் வளர்ச்சியின் குளிர்ச்சியை அனுபவித்தது தான் தமிழ்க் கட்சிகளும் அதன் தலைவர்களாகவும் தொண்டர்களாகவும் விளங்கிய பலரது ‘அரசியல்’ பங்களிப்பாகும்.

ஆனால் தற்போதைய நெருக்கடியாக காலப்பகுதியில் அரசியல் உரிமைகள் மற்றும் அடிப்படை உரிமைகள் என்ற விடயங்களைத் தாண்டி, ‘அரிசியும் அதற்கு தேவையான உணவுப் பொருட்களும் தான் அவசரத் தேவை என்ற நிலைக்கு இலங்கை மக்கள் தள்ளப்பட்டுள்ளார்கள்.

அதற்கு மேலாக. நாட்டு மக்கள் இன. மத மொழிகள் என்ற பேதமற்று படுகுழிகளுக்குள் பொருளாதார ரீதியாக தள்ளப்பட்டுள்ளார்கள்.

வடக்கு தமிழர்களை எடுத்துக்கொண்டால் போரில் நேரடியாகப் பங்கெடுத்த இலட்சக் கணக்கான குடும்பங்களின் நிலை மோசமானதாக உள்ளது. அன்றாடம் காய்ச்சிகள் என்ற நிலைக்கு இன்னும் கீழ் நிலைக்கு தள்ளப்பட்டும். அங்கங்களை இழந்தும் பெற்றாரை இழந்தும். இவ்வாறாக எமது மக்களின் வாழ்வியல் முறைகள் வலுவிழந்து போயுள்ளன.

இவ்வாறான நிலையில் ”தமிழரசுக் கட்சிக்குப் புதிய தலைவர் தெரிவு செய்யப்படுவார். அதன்பின்னர் தமிழரசுக் கட்சியினரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கின்ற ஏனைய பங்காளிக் கட்சியினரும் இணைந்து கூட்டமைப்பின் புதிய தலைவரைத் தெரிவு செய்வார்கள்’ என்ற செய்தியை அறிவிக்கும் அவசியம் மாவை சேனாதிராஜாவிற்கு ஏன் ஏற்பட்டது என்பது தான் இன்றைய சாதாரண தமிழ் மகள் ஒருவரின் கேள்வியாக எழுந்துள்ளது.

மாவை சேனாதிராஜாவின் இந்த கருத்து தொடர்பாக கொழும்பு பத்திரிகையாளர் ஒருவர் கனடா உதயன் ஆசிரிய பீடத்திற்கு எழுதிய குறிப்பு ஒன்றில் “மாவை சேனாதிராஜா தான் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவராக வருவதற்கு தான் ஆசைப்படுகின்றார். அவரது நோக்கங்கள் இரண்டு ஒன்று . தான் வட மாகாண சபையின் முதல்வராக வரவேண்டும். அதற்கான முயற்சியின் முதல்வடிவம் தான் . முதலில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவராக பதவியேற்க வேண்டும் என்ற அறிவிப்பைச் செய்தது’ என்று தெரிவித்துள்ளார்.

மாவை சேனாதிராஜா அவர்களுக்கு தற்போது ஒரு பாராளுமன்ற உறுப்பினராக வருவதிலும் பார்க்க வடக்கு மாகாண சபையின் முதல்வராக வருவதே அதிக விருப்புடன் எதிர்பார்க்கும் விடயமாகும். தன் அரசியல் பயணத்தின் இறுதிக் காலத்தில் அதிகாரமும் தமிழ் மக்களின் ஆசீர்வாதமும் மிக்க ஒரு பதவி அல்ல ஒன்றுக்கு மேற்பட்ட உயர் பதவிகள் ‘மாவைக்கு’ தற்போது ஆசைப்பட்ட விடயங்களாக விளங்குகின்றன. மேலும் எந்தப் பதவியில் எவர் வந்து அமர்ந்தாலும், அந்தப் பதவிகளால் தமிழ் மக்களின் அடிப்படையான பிரச்சனைகளாக விளங்கும் வறுமை. விரக்தி. சுதந்திரம் ஆகியவை கிட்டப் போவதில்லை என்பதே உண்மை.

## திருமறைக் கலாமன்ற தினம் நாளை மறுநாள் சனிக்கிழமை யாழ்ப்பாணம் கலைஞானசுரபி தியான இல்லத்தில் இடம்பெறுகிறது

கலைப்பணியில் 57 ஆண்டுகளை நிறைவு செய்து 58 ஆவது ஆண்டில் கால்பதிக்கும் திருமறைக் கலாமன்றத்தின் தினம் நாளை மறுதினம் சனிக்கிழமை 03.12.2022 அன்று சிறப்பிக்கப்படுவதை முன்னிட்டு பல்வேறு நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

காலை 7.00 மணிக்கு இல.17,மார்ட்டின் வீதி,யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள மன்றத்தின் கலைஞானசுரபி தியான இல்லத்தில் நன்றி வழிபாடு இடம்பெறும்.அதனைத் தொடர்ந்து மு.ப.10.00 மணிக்கு இல.238 ,பிரதான வீதி,யாழ்ப்பாணத்தில் மன்ற அலுவலகம் அருகில் அமைந்துள்ள கலைத்தூது மணிமண்டபத்தில் குருதிக் கொடை வழங்கும் நிகழ்வு இடம்பெறும்.

அதனைத் தொடர்ந்து கலை நிகழ்ச்சிகள் மாலை 4.00 மணிக்கு ஆரம்பமாகும்.இல.286,பிரதான வீதி,யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள மன்றத்தின் கலைத்தூது கலையகத்தில் யாழ்.பல்கலைக்கழக இசைத்துறை முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி திருமதி சுகன்யா அரவிந்தன் தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வுகளுக்கு யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ம.பிரதீபன் பிரதம விருந்தினராகவும்,யாழ்ப்பாண பெட்டக நிழலுரு கலைக்கூட இயக்குநர் மா.அருள்சந்திரன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து சிறப்பிக்கவுள்ளார்கள். நிகழ்வில்

கலைத்தூது அழகியல் கல்லூரி மாணவிகளின் நடனங்கள்,கலைஞர் கௌரவிப்பு என்பனவும்,சிறப்பு நிகழ்ச்சியாக திருமறைக் கலாமன்றக் கலைஞர்கள் வழங்கும் ‘ஏகலைவன்’ தென்கோடி நாட்டுக்கூத்தும் இடம்பெறவுள்ளது.

## ”தமிழ்க்கட்சிகளின் தலைவர்கள் கூட்டத்திற்கு எனக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை”

### — கஜேந்திரகுமார் பொன்னம்பலம், எம்பி தெரிவிப்பு



தமிழ்க்கட்சிகளின் தலைவர்கள் கூட்டத்திற்கு தனக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை எனத் தெரிவித்த அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், சமஸ்டி எனக் கூறி ஒற்றையாட்சிக்குள் முடக்கும் தீர்வை வலியுறுத்தும் தரப்புகளை தமிழ் மக்கள் நிராகரிக்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் இலங்கையின் சமகால நிலை தொடர்பாக யாழ்ப்பாணத்தில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில் “தமிழ் மக்கள் தமிழ்க் கட்சிகள் தொடர்பாக நம்பிக்கைகளை இழந்து தவிக்கின்றனர்” என்றார்.

## யாழ்ப்பாணத்திற்கு அனுப்ப இருந்த 1620 கோடி ரூபா மதிப்புள்ள கொக்கேய்ன் விவகாரத்தில் தி.மு.க "ஆசாமிகள்"

“காலையில் எழுந்தால் தனது கட்சி உறுப்பினர்கள் என்ன திருகுதாளம் செய்திருப்பார்களோ“ என்ற கவலையுடன் தான் நான் எழும்புகிறேன்“ என்று ஸ்டாலின் கூறி முழுதாக 1 வாரம் கூட ஆகவில்லை. மீண்டும் தி.மு.க பெரும் சர்சையில் சிக்கியுள்ளது. கடந்த சனிக்கிழமை 26ம் திகதி ராமேஸ்வரம் அருகே மண்டபம் அருகே பொலிசார் தீவிர சோதனைப் பணிகளை மேற்கொண்ட வண்ணம் இருந்தார்கள். அது பொலிசாருக்கு ஏற்கனவே கிடைத்த தகவல் காரணமாக ஓடும். கார் ஒன்றை அவர்கள் மறித்து சோதனை செய்தவேளை. அதில் சுமார் 30 கொள்கலன்களில் கொக்கேயின் அடைக்கப்பட்டு இருந்தது. இது இந்திய மதிப்பில் 1620 கோடி என்கிறார்கள். அப்படி என்றால் 4 மடங்கால் பெருக்கிப் பார்த்தால் இலங்கை ரூபாவில், 6480 கோடி ரூபா ஆகும். இலங்கை பட்ஜெட்டை, 2 வருடம் கொண்டு செல்லக் கூடிய பணம். விசாரணையில், ராமேஸ்வரத்திலிருந்து படகு மூலம், இந்த போதைப்பொருள், இலங்கைக்கு கொண்டு செல்ல திட்டமிடப்பட்டிருந்தமை தெரியவந்துள்ளது. இதனைக் கடத்தியவர்கள் இருவரும் ஆளும் தி.மு.க கட்சியை சேர்ந்தவர்கள்.

திராவிட முன்னேற்ற கழகத்தின் கீழக்கரை நகராட்சி மன்றத்தின் முன்னாள் உறுப்பினர் ஜெய்னுதீன் (45), தற்போது ராமேஸ்வரம் 19 ஆவது தொகுதி உறுப்பினரான சர்ப்ராஸ் நவாஸ் (42) ஆகியோரை கைது செய்தனர். இதனை அடுத்து விசாரணைகளை மத்திய புலனாய்வுத் துறையினர் தற்போது கையில் எடுத்துள்ளார்கள். சர்வதேச போதைப் பொருள் கடத்தல் கும்பலுக்கும், தி.மு.க உறுப்பினர்களுக்கும் தொடர்பு உள்ளதா என்ற கோணடத்தில் விசாரணை செல்கிறது. இந்த போதைப் பொருட்கள் யாழ்பாணம் கொண்டு செல்லப்பட இருந்தது. பின்னர் இவை பாதுகாப்பாக கொழும்பு சென்று, அங்கே இருந்து கப்பல் மூலம் யாருக்கும் தெரியாமல் குறித்த ஒரு வெளிநாட்டுக்குச் அனுப்ப திட்டமிடப்பட்டதாக அறியப்படுகின்றது.

## தமிழ்த் தேசிய கூட்டமைப்பிற்கும் தமிழரசுக் கட்சிக்கும் புதிய தலைவர்கள் தெரிவு செய்யப்படவுள்ளார்கள்

### — மாவை சேனாதிராஜா அறிவிப்பு



”தமிழரசுக் கட்சிக்குப் புதிய தலைவர் தெரிவு செய்யப்படுவார். அதன்பின்னர் தமிழரசுக் கட்சியினரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கின்ற ஏனைய பங்காளிக் கட்சியினரும் இணைந்து கூட்டமைப்பின் புதிய தலைவரைத் தெரிவு செய்வார்களென இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராஜா தெரிவித்துள்ளார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆகியவற்றின் தலைமைகள் தொடர்பில் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இந்த விடயத்தை தெரிவித்துள்ளார். இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்,

”தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தற்போது உடல் வலிமை குறைந்து இருந்தாலும் அவருடைய அனுபவம், அவருடைய ஆற்றல், அவர் வெளியிடும் சொற்கள் எப்போதும் வலிமையுடையவையாக இருக்கின்றன.

தந்தை செல்வாவும் தனது நீண்ட கால வரலாற்றில் உண்ண முடியாமல், நடக்க முடியாமல், உரத்துப் பேச முடியாமல் இருந்த போதிலும் தமிழ் மக்கள் அவரை அங்கீகரித்திருந்தார்கள். இறுதி வரைக்கும் அவர் அரசியல் தலைமைத்துவத்தைக் கொண்டிருந்தார். தமிழரசுக் கட்சியில் அவர் தலைவராக, செயலாளராக, பெருந்தலைவராகக் கூட இருந்துள்ளார். ஜனநாயக வழியில் அந்தப் பதவிகளுக்கு அவர் தெரிவு செய்யப்பட்டிருந்தார். ஆனாலும், எங்களுடைய தமிழரசுக் கட்சியிலே ஒரு நடைமுறை கடைப்பிடிக்கப்பட்டு வந்தது.

இப்போதும் அது நடக்கப் போகின்றது. கட்சியில் தந்தை செல்வா போல், யார் தலைவராக இருந்தாலும் ஓராண்டு அல்லது ஈராண்டுகளுக்கிடையில் மத்திய செயற்குழுவின் தீர்மானத்துக்கமைய நடைபெறுகின்ற மாநாடுகளில், நாங்கள் அடுத்தடுத்த தலைவர்களையும் தெரிவு செய்து வந்திருக்கின்றோம். ‘ என்றார்.

மாவை சேனாதிராஜாவின் இந்த கருத்து தொடர்பாக கொழும்பு பத்திரிகையாளர் ஒருவர் கனடா உதயன் ஆசிரிய பீடத்திற்கு எழுதிய குறிப்பு ஒன்றில் “மாவை சேனாதிராஜா தான் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவராக வருவதற்கு தான் ஆசைப்படுகின்றார். அவரது நோக்கங்கள் இரண்டு ஒன்று . தான் வட மாகாண சபையின் முதல்வராக வரவேண்டும். அதற்கான முயற்சியின் முதல்வடிவம் தான் . முதலில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவராக பதவியேற்க வேண்டும் என்ற அறிவிப்பைச் செய்தது’ என்று தெரிவித்துள்ளார்.

# ஒன்றாரியோ மாகாணத்தில் சிறுவர்களை துஸ்பிரயோகம் செய்த குற்றச் சாட்டுக்கள் தொடர்பாக ஒரே வாரத்தில் 107 நபர்கள் மீது வழக்கு

கனடிய செய்திகள் Canadian News




கனடாவின் ஒன்றாறியோ மாகாணத்தில் சிறுவர்களை துஸ்பிரயோகம் செய்த பல குற்றச் சாட்டுக்கள் தொடர்பாக ஒரே வாரத்தில் சுமார் 107 சந்தேக நபர்கள் மீது ஒன்றாரியோ மாகாணப் பொலிசாரும் ரொறன்ரோ போன்ற பிராந்தியப் பொலிசாரும் பல வழக்குப் பதிந்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக மேலும் அறிவித்துள்ள பொலிசார் சிறுவர்களை துஸ்பிரயோகம் செய்தமை மற்றும் தவறான பாலியல் தொடர்பு நோக்கத்துடன் இணையத்தை பயன்படுத்துதல் போன்ற குற்றங்களை தடுக்கும் நோக்கில் பொலிஸார் **Maverick** என்ற பெயரில் இணையத்தள திட்டமொன்றை பயன்படுத்தி வந்தனர்.

இந்த நிலையில் ஒன்றாறியோ பொலிஸாருடன் 27 குழுக்கள் இணைந்து குறித்த திட்டத்தை முன்னெடுத்தது. இதில், அக்டோபர் மாதத்தில் மட்டும் 227 வழக்குகளை விசாரணைக்கு எடுத்துக் கொண்டுள்ளனர். இந்த விடயமானது தங்கள் மாகாணத்திற்கு பெரிய வெற்றியைத் தந்துள்ளது என ஒன்றாரியோ மாகாண சட்டத்துறை நாயகம் பாராட்டுக்களைத் தெரிவித்துள்ளார்.

இந்த வழக்குகள் தொடர்பாக 168 தேடுதல் ஆணைகள் சமர்ப்பிக்கப்பெற்று, இந்த விடயம் தொடர்பில் 1,032 தடைசெய்யப்பட்ட உபகரணங்களை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். மேலும், 107 நபர் மீது 428 வழக்குகள் பதியப்பட்டுள்ளதாகவும் பொலிஸ்சார் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அநியாயமான குற்றச் செயல்களில் ஈடுபட்ட குற்றவாளிகளின் எண்ணிக்கையை பார்க்கும் போது ஒன்றாரியோ வாழ் மக்கள் வெட்கப்பட வேண்டும் என்றும் மேலும் எமக்கு அதிர்ச்சியை அளிப்பதாக இருந்தாலும், ஒருமாத காலம் முன்னெடுத்த நடவடிக்கைகளுக்கு பலன் கிடைத்துள்ளதாக பொலிஸ் பிரிவுகளின் முக்கிய அதிகாரிகள் கூறியுள்ளனர்.

இந்த சிறுவர் துஸ்பிரயோக சம்பவங்களில் பாதிக்கப்பட்ட 61 சிறுவர்கள் அடையாளம் காணப்பட்டதுடன், 60 சிறுவர்களை பாதுகாப்பான இடங்களுக்கு அனுப்பியுள்ளதாகவும் சம்பந்தப்பட்ட திணைக்களங்களின் அதிகாரிகள் கூறியுள்ளனர். சிறுவர் துஸ்பிரயோகம் தொடர்பில் மேலும் 175 விசாரணைகள் தொடர்வதாகவும், எதிர்வரும் நாட்களில் வழக்குகள் நீதிமன்றங்களில் ஒப்படைக்கப்படும் எனவும் தெரிவித்துள்ளனர்.

ரொறன்ரோ மாநகரில் மட்டும் 20 இடங்களில் தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதில் 23 பேர் கைதாகியுள்ளதாகவும் அவர்கள் மீது 96 குற்றவியல் வழக்குகள் பதியப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேலும் இவர்களிடமிருந்து ஆபாச புகைப்படங்கள் ஆபாச சஞ்சிகைகள் உள்ளிட்ட 131 கருவிகளை கைப்பற்றியுள்ளதாகவும், இவர்களால் பாதிக்கப்பட்ட 22 சிறுவர்கள் அடையாளம் காணப்பட்டு அதில் 10 சிறுவர்களை பாதுகாப்பான காப்பகங்களில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.

# TUMS என்னும் வர்த்தக் குறியீட்டைக் கொண்ட மாத்திரைகள் கனடாவில் விற்பனையிலிருந்து திரும்பப் பெறப்படுகின்றன




கனடாவின் மருந்துச் சந்தைகளிலிருந்து அவசரமாக மாத்திரையொன்று மீளப் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது என கனடாவின் சுகாதாரத் திணைக்களம் அறிவித்துள்ளது.

TUMS என்னும் வர்த்தக் குறியீட்டைக் கொண்ட நெஞ்சு எரிவிற்கு பயன்படுத்தப்படும் மாத்திரைகளே இவ்வாறு கனடாவில் மக்கள் பாவனையிலிருந்து திரும்பப் பெற்றுக்கொள்ளப்படுகின்றது. என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மாத்திரைகளில் கண்ணாடி துகள்கள் மற்றும் அலுமினியம் தகடுகளின் துண்டுகள் என்பன கலந்திருந்தது கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கனேடிய சுகாதாரத் திணைக்களம் இந்த அறிவிததலை வெளியிட்டுள்ளது. 13 மாத்திரைகளைக் கொண்ட பெட்டி ஒன்றில் விற்பனை செய்யப்பட்ட மாத்திரைகளே இவ்வாறு மருத்துவச் சந்தையிலிருந்து திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது என்றும் அறியப்படுகின்றது.

இந்த மாத்திரைகளை மக்கள் பயன்படுத்தினால் உடல் சமிபாட்டுத் தொகுதியில் கண்ணாடித் துகள்கள் கலக்கும் சந்தர்ப்பங்கள் அதிகம் ஏற்படும் எனவும் எச்சரிக்கப்பட்டுள்ளதுடன் இந்த வகையான மருந்துகள் உற்பத்தி செய்யப்பப்டுவதை சம்பந்தப்பட்டவர்கள் உடனே நிறுத்த வேண்டும் என உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

சத்திர சிகிச்சை மேற்கொண்டவர்கள் உள்ளிட்ட சிலருக்கு இந்த மாத்திரைகள் உட்கொள்வதனால் ஆபத்துக்கள் ஏற்படக்கூடிய சாத்தியம் காணப்படுவதாகவும் மேலும் அறியப்படுகின்றது.

இந்த மாத்திரைகள் பாவனைக்குதவாமல் வரும் நாள் திகதி 2027ம் ஆண்டு வரையில் காணப்படுவதாகவும், கடந்த ஒக்ரோபர் மாத இறுதியில் இந்த மாத்திரைகள் சந்தையில் விநியோகம் செய்யப்பட்டுள்ளதாகவும் எனவே பாவனைக் காலம் வரை இந்த மாத்திரைகளை விற்பனை செய்வதை அனுமதிக்க முடியாது என்ற அறிவுறுத்தல்கள் விடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும். நெஞ்சு எரிவிற்காகவே, அமிலத்தன்மை அகற்றக் கூடியது என்று இந்த மாத்திரை பயன்படுத்தப்பட்டு வருவதாக சம்பந்தப்பட்ட மருத்துவப் பகுதி அதிகாரிகள் செய்தியாளர்களிடம் தெரிவித்தனர்.

# கனடாவில் TikTok நட்சத்திரம் என்று அழைக்கப்பெற்ற மேஹா தக்குர் வாகன விபத்தில் மரணத்தைத் தழுவினார்



கனடாவில் TikTok நட்சத்திரம் என்று அழைக்கப்பெற்ற மேஹா தக்குர் வாகன விபத்தொன்றின் காரணமாக திடீரேன மரணத்தைத் தழுவினார் என அவரது குடும்பத்தினர் இணையத்தளங்கள் மூலமாகவும் சமூக ஊடகங்கள் மூலமாகவும் அறிவித்துள்ளனர்.

சில நாட்களுக்கு முன்னர் மேஹா தக்குர் அவர்களின் பெற்றோர் அல்லது சகோதரர்கள் பதிவிட்ட இன்ஸ்டகிராம் பதிவின் பிரகாரம் கனடாவின் பிராம்ப்டன் மாநகரில் வாழ்ந்து வந்த மக்கள் செல்வாக்குப் பெற்ற இந்த இளம் பெண் தனது 21 வயதில் மரணத்தை தழுவினார் என அறியப்படுகின்றது.

மறைந்த மேஹா தக்குர் அவர்களின் குடும்ப உறுப்பினர்கள் வெளியிட்ட பதிவில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

“எங்கள் வாழ்க்கையில் ஒளியை வீசிக்கொண்டிருந்த எமது அன்பான மகளை இழந்து விட்டோம் என்ற சோகமான செய்தியை எமது கனத்த இதயங்களுடன் அவரை நேசித்த அனைவருடனும் பகிர்ந்து கொள்கிறோம், எங்கள் மீது மிகுந்த அன்பு கொண்டவராகவும், அக்கறையுள்ளவராகவும் இயற்கையான அழகுள்ளவருமான எமது புதல்வி, மேகா தாக்கூர், திடீரென்று எதிர்பாராத விதமாக நவம்பர் 24, 2022 அன்று அதிகாலையில் வாகன விபத்தொன்றில் சிக்கி காலமானார்,” என்றும் மேற்படிஇன்ஸ்டகிராம் பதிவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

“மேஹா தக்குர் ஒரு தன்னம்பிக்கை மிக்க மற்றும் சுதந்திரமான போக்கு கொண்ட ஒரு இளம் பெண். அவரது இழப்பு எம்மை மட்டுமல்ல அவரை நேசித்த அனைவரையும் நன்கு பாதிக்கும் என்பதை நாம் அறிவோம். அவர் தனது ரசிகர்களை நேசித்தார், மேலும் அவர் திடீரென தான் இந்த உலகை விட்ட நீங்கிச் சென்றதை அனைவரும் அறிந்து கொள்ளவும் விரும்புவார். இந்த நேரத்தில், மேகாவுக்கு உங்கள் ஆசீர்வாதங்களையும் பிரார்த்தனைகளையும் வழங்கும் வண்ணம் நாங்கள் கேட்டுக்கொள்கிறோம். உங்கள் எண்ணங்களும் பிரார்த்தனைகளும் அவளுடைய முன்னோக்கிய பயணத்தில்”.

அவளுடன் இருக்கும். என்றும் பல பதிவுகள் சமூக ஊடகங்களில் காணப்படுவதாகவும் அறியப்படுகின்றது. மேஹா தக்குர் அவர்களின் மரணம் தொடர்பாக நடிகை மரிகா சிலா என்பவர் தனது முக நூல் பதிவில் பின்வருமாறு அறிவித்துள்ளார்.

“ஆஹா, நான் பேசாமல் இருக்கிறேன். அவள் வாழ்க்கையில் அவளது நட்பைப் பெறுவதற்கு அதிர்ஷ்டசாலிகளாக விளங்கிய அனைவருக்கும் என் அனுதாபங்களும் உண்டு. அவள் பெரிதும் தவறவிடப்படுவாள், ஒருபோதும் அவளை நேசித்த ஒவ்வொருவராலும் மறக்கப்படமாட்டாள். அவளுடைய ஒளிவீசும் பங்களிப்புக்கள் எனக்கும் இன்னும் என்னைப் போன்ற பலருக்கும் ஊக்கமளித்தது” என்று குறிப்பிட்டுள்ளார்.





Sri Lanka News
இலங்கை செய்திகள்

# வனமே என் இனமே காணொலிப்பாடல் வெளியீடு



வனம் இன்றிப்போனால் எம் இனம் இன்றிப்போகும் என்ற கருப்பொருளில் வனங்களின் முக்கியத்துவத்தை எடுத்துச்சொல்லும் வனமே என் இனமே என்ற காணொலிப்பாடல் தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தால் வெள்ளிக்கிழமை (25.11.2022) வெளியிடப்பட்டுள்ளது. வடமாகாண மரநடுகை மாதத்தை முன்னிட்டு தமிழ்த்தேசியப் பசுமை இயக்கம் நல்லூர் சங்கிலியன் பூங்காவில் ஏற்பாடு செய்துள்ள மலர்க்கண்காட்சியின் போதே இக் காணொலிப்பாடல் வெளியிடப்பட்டுள்ளது. தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் கலை இலக்கிய அணியின் துணைச்செயலாளர் கை. சரவணனின் தலைமையில் நடைபெற்ற வெளியீட்டு நிகழ்ச்சியில் இசைவாணர் கண்ணன் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு காணொலிப்பாடலின் முதல் திரையிடலைத் தொடக்கி வைத்தார். பாடல் திரையிடலைத் தொடர்ந்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் ஊடகக் கற்கைகள் துறையின தலைவர் பேராசிரியர் சி. ரகுராம் கருத்துரையை வழங்கினார்.



வனமே என் இனமே பாடலை பூவன் மதீசன் எழுதிப்பாடி நடிக்க ராஜ் சிவராஜ் இயக்கியுள்ளார். இது தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் ஒரு தயாரிப்பாகும்.

# யாழ் நெடுந்தீவு இளைஞர் யுவதிகளுக்கு கௌரவமான உரிமைகளுடன் கூடிய வழிகாட்டி நிகழ்வு



யாழ் தீவகப் பெண்கள் வலையமைப்பின் ஏற்பாட்டில் நெடுந்தீவு பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட இளைஞர் யுவதிகளுக்கான கௌரவமான உரிமைகளுடன் கூடிய வழிகாட்டி வலுவூட்டல் நிகழ்வு நெடுந்தீவு பிரதேச செயலகத்தின் கேட்போர் கூடத்தில் வெள்ளிக்கிழமை (25) காலை 11 மணி தொடக்கம் மதியம் 3 மணி வரை நடைபெற்றது. இதில் 60க்கும் மேற்பட்ட அப்பகுதி இளைஞர் யுவதிகள் கலந்து கொண்டார்கள்.





இதன் போது தலைமைத்துவம், பால்நிலை சமத்துவம், ஒற்றுமை, குழு செயல்பாடு, விடாமுயற்சி, போன்ற பயிற்சிகள் செயல்முறை விளக்கத்துடன் வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வில் மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் பணிப்பாளர் ஜாட்சன் பிகிராடோ, யாழ் தீவக வலயமைப்பின் நிர்வாகத்தினர், நெடுந்தீவு பிரதேச இளைஞர் சேவைகள் மன்ற அதிகாரிகள், மன்னார் மெசிடோ நிறுவனத்தின் பணியாளர்களும் கலந்து கொண்டனர்.

**- மன்னார் நிருபர்**

# இலங்கையில் கேக் உற்பத்தியாளர்கள் பலர் தொழிலை விட்டு வெளியேற்றம்!



இலங்கையில் கேக் தயாரிப்பதற்கான முட்டை உள்ளிட்ட மூலப்பொருட்களின் விலை உயர்வு மற்றும் அவற்றின் பொருட்களின் விற்பனை இல்லாததால் இனிப்புகள் மற்றும் கேக் உற்பத்தியாளர்கள் பலர் தங்கள் தொழிலை விட்டு வெளியேறியுள்ளனர்.

பல பகுதிகளில் நடுத்தர அளவிலான இனிப்பு வகைகள் மற்றும் கேக் உற்பத்தி நிறுவனங்கள் மூடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

சந்தையில் தற்போது ஒரு கிலோ கேக்கின் விலை ரூபா.1250 ஆக உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

MORTGAGE

- நல்ல ரேட்ல மோட்கேஜ் (OAC*)
- லைன் ஒப் கிரெடிட்(HELOC)
- ரீபைனான்ஸ்,Title Transfer,ரினிவல்
- Private Mortgage (No Income Verification)
- 2வது, 3வது மோட்கேஜ்(Funded within 48hrs)
- பாங்க்ரப்சி, புரபோசல் செய்தோருக்கு மோர்ட்கேஜ்
- பவர் ஒப் சேல் பிரச்சனையிலிருந்து விடுபட
- எல்லாக் கடனையும் ஒரே பேமண்ட்டாக்கா

கடைசி நேரத்தில் மோட்கேஜ் கிடைக்காமல் வாங்கிய வீட்டை கைவிடும் நிலையில் உள்ளீர்களா?

மேலும் அனைத்து மோட்கேஜ், ரியல் எஸ்டேட் தொடர்பான தேவைகளுக்கும்.....

MORTGAGE CLINIC
www.mortgageclinicanada.com
உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது.
416-613-2788 / 416-816-9011

ஜெ (Jey) இராசதுரை MBA. BBA (Hon) AMP
Team Leader/Mortgage & Real Estate Broker
Cell : 416-624-4843
எமது முகவரி
1504 Markham Rd,
Toronto, ON, M1B 2V9
(Markham & HWY 401)



RIGHT AT HOME REALTY INC.
MORTGAGE ALLIANCE
RIGHTBROKER = RIGHTMORTGAGE
Lic # 10530
Brokerage : 112-895 Don Mills Rd, Toronto On M3C 1W3
Corporate office : 2005 Sheppard Ave E, Suit 200 Toronto On M2J 5B4

# மன்னாரில் உள்ள மாவீரர் துயிலும் இல்லங்களில் மாவீரர் தின நினைவேந்தல் முன்னெடுப்பு

இலங்கை செய்திகள்
Sri Lanka News



மாவீரர் தினத்தையொட்டி மன்னாரில் உள்ள மாவீரர் துயிலும் இல்லங்களில் மாவீரர் நினைவு தினம் ஞாயிற்றுக்கிழமை (27) மாலை நினைவு கூறப்பட்டுள்ளது.

தமிழர் தாயகத்திற்கு உயிர் நீத்த உறவுகளை நினைவு கூறும் வகையில் கார்த்திகை மாதம் 27 ஆம் திகதி மாவீரர் தினம் வருடா வருடம் நினைவு கூறப்பட்டு வருகிறது.

அதற்கு அமைவாக மன்னார் மாவட்ட மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள ஆட்காட்டி வெளி மாவீரர் துயிலும் இல்லத்தில் மாவீரர் தின நிகழ்வு ஞாயிற்றுக்கிழமை (27) மாலை உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

மேலும் மடு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள பண்டிவிரிச்சான் மாவீரர் துயிலும் இல்லத்தில் நினைவேந்தல் இடம் பெற்றது.

இதன் போது பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் தலைமையிலான தமிழரசுக்கட்சியின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

- மன்னார் நிருபர்









# கல்முனை பாடசாலை மாணவர்களை கடத்த முயற்சித்த சம்பவம்

## அடையாள அணிவகுப்பில் சந்தேகநபர் வசமாக மாட்டினார்



பாடசாலை மாணவர்களை கடத்த முயற்சித்த குற்றச்சாட்டில் அடையாளம் காணப்பட்ட சந்தேக நபரை விளக்கமறியலில் வைக்குமாறு கல்முனை நீதவான் உத்தரவிட்டார்.

அம்பாறை மாவட்டம் சாய்ந்தமருது பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பிரபல பாடசாலை மாணவர்களான 11 வயது மதிக்கத்தக்க இருவரை இரு வேறு சந்தர்ப்பங்களில் முகமூடி அணிந்த மர்ம நபர்கள் கடத்த முயற்சிப்பதாக பொலிஸ் நிலையத்தில் இம்மாதம் முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றிருந்தன.

இதனை அடுத்து சாய்ந்தமருது பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பிரதம பொலிஸ் பரிசோதகர் எஸ்.எல். சம்சுதீன் தலைமையிலான பொலிஸ் குழுவினர் முன்னெடுத்த அதிரடி நடவடிக்கையின் சம்பவத்துடன் தொடர்புபட்ட சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

அத்துடன் குறித்த கடத்தல் சம்பவம் இடம்பெற்ற பகுதிகளில் உள்ள சிசிடிவி கமராக்களின் உதவிகள் மற்றும் புலன் விசாரணை முடக்கி விடப்பட்ட நிலையில் மாணவர்களை கடத்த முயற்சித்த சந்தேக நபர் கைதாகியுள்ளார்.

இவ்வாறு கைதான சந்தேக நபர் கல்முனை பகுதியை சேர்ந்த 27 வயதுடையவராவார். இச்சம்பவமானது தலைக்கவசம் மற்றும் முகக்கவசம் ஆகியவற்றுடன் முகங்களை மூடியவாறு மோட்டார் சைக்கிளில் வந்த சந்தேக நபர்கள் மாணவர்கள் சிலரை இலக்கு வைத இவ்வாறான கடத்த முயற்சியில் ஈடுபட்டனர் என தெரிவிக்கப்பட்டு கடந்த வாரம் பல முறைப்பாடுகள் பதிவுசெய்யட்டிருந்ததுடன் சாய்ந்தமருது பொலிஸாரும் விசாரணையினை முடக்கி விட்டிருந்தனர்.

இதற்கமைய பொலிஸாரினால் முன்னெடுக்கப்பட்ட இவ்விசாரணையின் போது பாடசாலை மாணவர்களை கடத்த முயற்சித்த சம்பவத்துடன் தொடர்பு பட்ட சந்தேக நபர் கைது செய்யப்படடதுடன் செவ்வாய்க்கிழமை (29) கல்முனை நீதவான் முன்னிலையில் அடையாள அணிவகுப்பிற்கு உட்படுத்தப்பட்டார்.

இவ்வடையாள அணிவகுப்பின் போது அச்சந்தேக நபரை பாதிக்கப்பட்ட மாணவன் அடையாளப்படுத்தியமை குறிப்பிடத்தக்கது. இதனையடுத்து குறித்த சந்தேகநபரை எதிர்வரும் டிசம்பர் 2 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

மேலும் இச்சம்பவம் தொடர்பில் சாய்ந்தமருது பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பிரதம பொலிஸ் பரிசோதகர் எஸ்.எல்.சம்சுதீன் தலைமையிலான பொலிஸ் குழுவினர் மேலதிக விசாரணைகளை தொடர்ச்சியாக முன்னெடுத்துள்ளனர்.

# இலங்கை கடற்படையால் கைது செய்யப்பட்டுச் சிறைப்படுத்தப்பட்டுள்ள 24 மீனவர்களையும் விடுவிக்க வேண்டும்!



**சீமான் அறிக்கை:** இலங்கை கடற்படையால் கைது செய்யப்பட்டுச் சிறைப்படுத்தப்பட்டுள்ள 24 தமிழக மீனவர்களையும் உடனடியாக விடுவிக்க உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும்! - நாம் தமிழர் கட்சி சீமான் வலியுறுத்தல்

தமிழக மீனவர்கள் 24 பேரை இலங்கை கடற்படையினர் அத்துமீறி கைது செய்து சிறைப்படுத்தியிருப்பது அம்மீனவர்களின் குடும்பத்தினரிடையே அச்சத்தையும், கவலையையும் ஏற்படுத்தியிருக்கிறது. கடந்த சில நாட்களுக்கு முன்பு இராமேஸ்வரம் மீனவர்கள் மீது கொடுந்தாக்குதல் நடத்தி விரட்டியடித்த சிங்கள இராணுவம் தற்போது, மீண்டும் புதுக்கோட்டை மாவட்ட மீனவர்கள் 24 பேரை கைது செய்திருப்பதோடு, அவர்களது 5 படகுகளையும் பறிமுதல் செய்திருப்பது வன்மையான கண்டனத்திற்குரியது. தமிழக மீனவர்கள் தொடர்ச்சியாக கைதுசெய்யப்படுவதும், தாக்கப்படுவதும், உடைமைகள் பறிக்கப்படுவதும், சுட்டுக்கொலை செய்யப்படுவதுமென இனவெறி சிங்கள கடற்படையினரின் அத்துமீறிய கொடுமைகளும், அட்டூழியங்களும் தொடர்ந்து வருவது ஆளும் அரசுகளின் கையாலாகாத்தனத்தையே காட்டுகிறது.

தமிழக மீனவர்கள் மீது சிங்கள இராணுவம் நடத்தி வரும் தொடர் வன்முறைத்தாக்குதல்களும், தமிழர் படகுகளைப் பறித்து அரசுடைமையாக்கிக் கொள்ளும் அநீதியும், வலையறுப்பு நிகழ்வுகளும், மீன்பிடிக்கச் செல்லும் தமிழக மீனவர்களை நடுக்கடலிலே வைத்து தாக்குவது, ஆயுதத்தைக் கொண்டு துன்புறுத்துவது, அவர்களது உடைமைகளைப் பறித்துக்கொள்வது, படகுகளைச் சேதப்படுத்துவது, மீனவர்களைச் சிறைப்பிடிப்பது, துப்பாக்கிச்சூடு நடத்துவது என இலங்கை கடற்படை அரங்கேற்றிவரும் கொடுமைகளும் சொல்லி மாளக்கூடியதல்ல. சிங்கள இனவாத இராணுவம் ஈவிரக்கமற்று தொடர்ச்சியாக தமிழக மீனவர்களைச் சிறைப்படுத்தி வருவது தமிழர்கள் மீதான வன்மத்தின் வெளிப்பாடேயாகும்.

இலங்கை கடற்படையினரின் தாக்குதலின் மூலம் இதுவரை பல்லாயிரக்கணக்கான மீனவர்கள் உடல் உறுப்புகளைச் சிதையக் கொடுத்து, முடமாகி நிற்கிறார்கள். 800க்கும் மேற்பட்ட மீனவர்கள் நடுக்கடலிலே கொலைசெய்யப்பட்டிருக்கிறார்கள். தமிழக மீனவர்களின் கோடிக்கணக்கான சொத்துக்கள் சூறையாடப்பட்டிருக்கிறது. இருந்தபோதிலும், இதுவரை தமிழக மீனவர்கள் மீதான இக்கோரத் தாக்குதல்களுக்கும், அநீதிகளுக்கும் எதிராக இந்திய ஒன்றிய அரசு கண்டனம் தெரிவித்ததுமில்லை. எதிர்வினையாற்றி எச்சரித்ததுமில்லை. இதன்விளைவாகத்தான், சிங்கள இராணுவம் தமிழக மீனவர்கள் மீது தாக்குதல்களைத் தொடுப்பது என்பது தொடர்கதையாக மாறி வருகிறது.

தமிழக மீனவர்கள் மீதான இத்தாக்குதல்களுக்கு மறைமுக ஆதரவளிக்கும் இந்திய ஒன்றியத்தை ஆளும் பாஜக அரசின் செயலானது தமிழர்களுக்குச் செய்யும் பச்சைத்துரோகமாகும். பெருமளவு அந்நியச் செலாவணியை ஈட்டித்தரும் தமிழக மீனவர்களின் மீதான தாக்குதல்களை இந்திய பெருநாடு வெட்கமின்றி வேடிக்கைப் பார்ப்பது எட்டுகோடி தமிழர்களின் உணர்வுகளைச் சீண்டிப் பார்ப்பதாகவே உள்ளது. தமிழ்நாட்டில் மீண்டும் ஆட்சிக்கு வந்த பிறகு தமிழக மீனவர்கள் மீதான தாக்குதல் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதை தடுக்க இந்திய ஒன்றிய அரசிற்கு கடிதம் எழுதுவதை தவிர, எவ்வித ஆக்கப்பூர்வமான நடவடிக்கையும் எடுக்காத திமுக அரசின் அலட்சியப்போக்கு தமிழக மீனவர்களிடையே மிகுந்த வேதனையை ஏற்படுத்தியுள்ளது.

ஆகவே, இந்திய ஒன்றிய அரசு இலங்கை கடற்படையால் கைது செய்யப்பட்டு, சிறையிலடைக்கப்பட்டுள்ள புதுக்கோட்டை மாவட்டத்தைச் சேர்ந்த மீனவர்கள் 24 பேரையும் விடுவிக்க உடனடி நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென வலியுறுத்துகிறேன். மேலும், தமிழக மீனவர்கள் பிரச்சனைக்கு நிரந்தர தீர்வுகாண உச்சநீதிமன்றத்தில் உள்ள வழக்கினை விரைவுப்படுத்தி, கட்சத்தீவினை மீட்க விரைந்து நடவடிக்கை வேண்டுமென தமிழ்நாடு அரசினை நாம் தமிழர் கட்சி சார்பாக கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

# மாகாண சபைகள் கலைப்பு குறித்து ரணில் ஊடகப் பிரிவு விளக்கம்



மாகாண சபைகளுக்கு பதிலாக மாவட்ட அபிவிருத்திக் குழுக்களை ஸ்தாபிக்க ஜனாதிபதி தயாராகி வருவதாக ஊடகங்களில் வெளியாகும் செய்திகள் உண்மைக்குப் புறம்பானது என ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி ரணில் நாடாளுமன்றத்தில் தெரிவித்த பதில், அர்த்தத்தை சிதைக்கும் விதத்தில் பல ஊடகங்களில் செய்திகளாக வெளியாகியுள்ளன என அந்தப் பிரிவு தெரிவித்துள்ளது.

எனினும் 2023 ஆம் நிதி ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் மீதான குழு நிலை விவாதத்தில், நாடாளுமன்ற உறுப்பினர் மைத்திரிபால சிறிசேனவின் கருத்துக்கு பதிலளித்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, மாகாண சபைகளில் மாவட்ட அபிவிருத்திக் குழுக்களை ஸ்தாபிக்க தயார் எனத் தெரிவித்ததாக ஜனாதிபதி ஊடகப் பிரிவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதுதவிர மாகாண சபைகள் கலைப்பு தொடர்பாக ஜனாதிபதி எந்த கருத்தையும் வெளியிடவில்லை என்றும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

நிறைவேற்றுத் தீர்மானங்களை அமுல்படுத்துவதில் அரசாங்கம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு இடையில் சரியான ஒருங்கிணைப்பைப் பேணுவதற்கான களமாக மாவட்ட அபிவிருத்திக் குழுக் கள் செயல்படும் என்பதே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் நிலைப்பாடாகும் என்றும் ஜனாதிபதி ஊடகப் பிரிவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன் மூலம், வளர்ச்சிப் பணிகள் முறையாக நடைபெறுவதுடன், நிதி வீண் விரயம் மற்றும் தாமதங்கள் தவிர்க்கப்படும் என அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்தியா செய்திகள்
India News

# வயிறா? உண்டியலா?

## மனநோயாளி விழுங்கிய 187 நாணயங்கள் அறுவை சிகிச்சையில் அகற்றப்பட்டன





கர்நாடக மாநிலம் ராய்ச்சூர் மாவட்டத்தின் லிங்சுகூர் பகுதியைச் சேர்ந்தவர் தியாமப்பா. 58 வயதான இவர், ஒருவகை மனநோயால் பாதிக்கப்பட்டுள்ளார். ஓயாத வயிற்று வலி காரணமாக அவரை அவருடைய குடும்பத்தார் பாகல்கோட் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றனர்.

அவரை பரிசோதித்த மருத்துவர்கள் வயிற்றில் அதிகமாக சில்லரை நாணயங்கள் இருப்பதை கண்டு அதிர்ச்சியடைந்தனர். உடனடியாக அவருக்கு அறுவை சிகிச்சை செய்யப்பட்டது. அவரது வயிற்றில் சுமார் 1.5 கிலோ அளவிற்கு நாணயங்கள் இருந்தன.

5 ரூபாய் நாணயங்கள் 56-ம் 2 ரூபாய் நாணயங்கள் 51-ம் 1 ரூபாய் நாணயங்கள் 80-ம் என 187 நாணயங்கள் இருந்தன.

மன நோயால் பாதிக்கப்பட்டு இருந்த தியாமப்பா நாணயங்களை விழுங்கியுள்ளார்.

கிட்டத்தட்ட இரண்டு மணிநேர அறுவை சிகிச்சைக்குப் பின் அனைத்து நாணயங்களையும் மருத்துவர்கள் அகற்றிவிட்டதால் தியாமப்பா தற்போது நலமாக உள்ளதாக மருத்துவர்கள் தெரிவித்தனர்.

# இந்தியாவின் முக்கிய நகரங்களில் வெளியானது, டிஜிட்டல் ரூபாய்




இந்தியாவில் தற்போது நாணயங்கள் மற்றும் காகித வடிவத்தில் பணம் புழக்கத்தில் உள்ளது. மாறி வரும் நவீன யுகத்தில் கிரிப்டோகரன்சியின் பயன்பாடு உலக அளவில் அதிகரித்து வருகிறது.

“மெய் நிகர் நாணயம்” என்று அழைக்கப்படும் இந்த கிரிப்டோகரன்சி இன்றைய இளைய தலைமுறையினர் மத்தியில் நல்ல வரவேற்பை பெற்றுத் திகழ்கிறது. நைஜீரியா, ஜமைக்கா உள்ளிட்ட 10 நாடுகளில் ஏற்கனவே டிஜிட்டல் கரன்சி புழக்கத்தில் உள்ளது. இதன் தொடர்ச்சியாக 100க்கும் மேற்பட்ட நாடுகளில் இதனை அறிமுகப்படுத்த திட்டமிடப்பட்டு உள்ளது.

இந்தநிலையில் மத்திய அமைச்சர் நிர்மலா சீதாராமன் 2022-23ம் ஆண்டு பட்ஜெட்டின்போது ரிசர்வ் வங்கி ஆதரவுடன் இந்தியாவில் டிஜிட்டல் ரூபாய் அறிமுகப்படுத்தப்படும் என்று அறிவித்து இருந்தார். அதன்படி சில்லரை வர்த்தகத்தில் சோதனை அடிப்படையில் டெல்லி, மும்பை, பெங்களூர், புவனேசுவர் ஆகிய 4 நகரங்களில் டிஜிட்டல் ரூபாய் இன்று (டிச 1) வெளியானது.

ரூ.1, ரூ.2, ரூ5, ரூ.10, ரூ.20, ரூ.50, ரூ.100, ரூ.200, ரூ.2000 மதிப்பிலான டிஜிட்டல் ரூபாய் சோதனை அடிப்படையில் புழக்கத்தில் விடப்பட்டு உள்ளது.

முதல் கட்டமாக ஸ்டேட் பாங்க், ஐசிஐசிஐ வங்கி, யெஸ் வங்கி, ஐடிஎப்சி. ஆகிய 4 வங்கிகள் இந்த டிஜிட்டல் ரூபாயை வெளியிட்டு உள்ளன.

இதன் தொடர்ச்சியாக, பரோடா வங்கி, யூனியன் பாங்க் ஆப் இந்தியா, எச்டிஎப்சி. கோட்டக் மகேந்திரா ஆகிய வங்கிகளும் டிஜிட்டல் ரூபாயை வெளியிட உள்ளன. டிஜிட்டல் நாணயமான இ-ரூபாய் இரண்டு வடிவமைப்பை கொண்டது.

முதலாவது டோக்கன் அடிப்படையிலும் 2-வது கணக்கு அடிப்படையிலும் இருக்கும். டோக்கன் முறையிலான டிஜிட்டல் நாணயம் என்பது வங்கியின் ரூபாய் நோட்டு போன்றது. இந்த டோக்கனை வைத்து இருப்பவர்கள் அதன் மதிப்புக்கு உரிமையாளராக இருப்பார்கள். கணக்கு முறையிலான அமைப்பில் டிஜிட்டல் ரூபாய் வைத்து இருப்பவர்கள் இருப்பு மற்றும் பரிவர்த்தனைகளின் பதிவுகளை வைத்து இருக்க வேண்டும்.

குறிப்பிட்ட வணிக நிறுவனங்கள், வாடிக்கையாளர்கள் மட்டுமே தற்போது இதனை பயன்படுத்த முடியும். மொபைல் செயலி மூலம் “இ-வாலட்” உருவாக்கி டிஜிட்டல் ரூபாயை பயன்படுத்தலாம்.



இலங்கை செய்திகள்
Sri Lanka News

# மன்னார் "சதொச" மனிதப் புதைகுழி வழக்கு: அகழ்வுப் பணிகளை முன்னெடுப்பதில் சிக்கல்



மன்னார் சதொச மனித புதைகுழி தொடர்பான வழக்கு விசாரணை மீண்டும் ஒத்திவைக்கப்பட்டது. மன்னார் நீதவான் முன்னிலையில் வழக்கு புதன்கிழமை (30) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

மன்னார் சதொச மனித புதைகுழி அகழ்வுப் பணிகள் தொடர்பில் கடந்த வழக்கு விசாரணையின் போது பிறப்பிக்கப்பட்ட உத்தரவுக்கு அமைய முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகள் குறித்து நீதவானால் பொலிஸாரிடம் புதன்கிழமை (30) வினவப்பட்டது.

இவ்விடயம் தொடர்பாக காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் சார்பாக மன்றில் ஆஜரான சட்டத்தரணி வி.எஸ்.நிறைஞ்சன் கருத்து தெரிவிக்கையில், மனிதப் புதைகுழியில் அகழ்வுப் பணிகளை முன் னெடுப்பதாயின், புதைகுழிக்கு அருகே உள்ள கடைத்தொகுதிகள் உடைக்கப்பட வேண்டும் எனவும் பிரதான வீதி மற்றும் மன்னார் தீவு பகுதிக்கு குடிநீர் வழங்கும் நீர்க்குழாய் தோண்டப்பட வேண்டுமெனவும் பொலிஸார் பதில் வழங்கினர்.

இதற்கேற்ற நடவடிக்கைகளை எடுப்பதற்கான இயலுமை தமக்கில்லை எனவும் இது தொடர்பில் பொலிஸ் திணைக்களத்தின் சட்டப்பிரிவு உள்ளிட்ட தரப்பினருக்கு அறிவிக்கப்பட்டுள்ள தாகவும் பொலிஸார் கூறினர்.

எனவே, அகழ்வுப் பணிகள் தொடர்பாக நீதிமன்றத்தின் உத்தரவை நடைமுறைப்படுத்த மேலதிக தவணைக் காலம் தேவைப்படுவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.




இதையடுத்து, புதைகுழி மீதான அகழ்வுப் பணிகள் தொடர்பில் அடுத்த வருடம் ஜனவரி மாதம் 27 ஆம் திகதி அறிவிக்க பொலிஸாருக்கு நீதவானால் உத்தரவிடப்பட்டது.

இதனிடையே, ஏற்கனவே கண்டெடுக்கப்பட்ட மனித எச்சங்கள் மற்றும் சான்றுப் பொருட்கள் என்பன இதுவரை நீதிமன்றத்தில் கை அளிக்கப்படவில்லை என்பதால், அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என காணாமல் போனவர்களின் உறவினர்கள் சார்பில் மன்றில் ஆஜரான சட்டத்தரணிகள் தெரிவித்தனர்.

அத்துடன், இது தொடர்பில் வவுனியா மேல் நீதிமன்றத்தால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ள மையினால், அனைத்து நடவடிக்கைகளும் உடனடியாக மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் அவர்கள் கூறினர்.

இந்த விடயங்களை கவனத்தில் கொண்ட நீதவான் இதற்கான நடவடிக்கைகள் வெகுவிரைவில் முன்னெடுக்கப்படும் என அறிவித்தார்.

இதையடுத்து, வழக்கு விசாரணைகள் அடுத்த வருடம் ஜனவரி மாதம் 27 ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டது.

- மன்னார் நிருபர்

# வெளிநாடுகளில் இருந்து இங்குள்ள உறவுகளுக்கு அனுப்பப்படும் நிதி எமது பொருளாதாரத்திற்கு அடித்தளமாக இருந்துள்ளது

## மன்னாரில் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன்



நாட்டில் போர் முடிவடைந்த பிறகு போரின் தாக்கத்திலிருந்து மீண்டு எழுந்து கொள்ள முடியாத சூழ்நிலையில் தற்போது பொருளாதார வீழ்ச்சி நாடு பூராகவும் ஏற்பட்டுள்ளது.ஆனால் பொருளாதார வீழ்ச்சி ஏற்படுவதற்கு முன்னதாக எங்களுடைய பிரதேசங்களில் மக்களுக்கு வேலைவாய்ப்பு இல்லாமை, இளைஞர்கள் படித்துவிட்டு வேலை வாய்ப்பு இன்றி காணப்படும் சூழ்நிலைகள் உள்ளடங்களாக இவ்வாறு பலவிதமான பிரச்சனைகள் இருந்து கொண்டே உள்ளது என பாராளுமன்ற உறுப்பினர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

வடக்கு கிழக்கு புனர்வாழ்வின் அமைப்பின் ஊடாக மன்னார் மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட ஒரு தொகுதி பாடசாலை மாணவர்களுக்கு துவிச்சக்கர வண்டிகள் வழங்கும் நிகழ்வு புதன்கிழமை (30) மாலை மன்னார் நகர சபை மண்டபத்தில் இடம்பெற்றது.

நானாட்டான் பிரதேச சபையின் தவிசாளர் திருச்செல்வம் பரஞ்சோதி தலைமையில் இடம்பெற்ற குறித்த நிகழ்வில் மன்னார் நகர சபையின் உப தலைவர் ஜான்சன் பிகிராடோ, வடமாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் சுகிர்தன், தமிழரசுக் கட்சியின் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

இதன் போது கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், பாடசாலைக்குச் செல்லுகின்ற மாணவர்களின் போக்குவரத்து வசதி பல்வேறு இடங்களில் இல்லாத காரணத்தால் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றமை அறிந்த விடையம்.

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவிகளை மேற்கொள்ள பலர் எங்களுடன் தொடர்பு கொண்டு சில உதவிகளை மேற்கொள்ள முன் வந்துள்ளார்கள். அந்த வகையில் வட கிழக்கு புனர்வாழ்வு அமைப்பு இவ்வாறான உதவிகளை வழங்க முன் வந்துள்ளார்.

இவ்வாறான கொடையாளி களிடம் இருந்து அவற்றை பெற்று தேவைப்படுகின்ற மக்களுக்கு மற்றும் பாடசாலை மாணவர்களுக்கு உதவிகளை மேற்கொள்ளும் வேலைத்திட்டத்தை ஆரம்பித்துள்ளோம்.

குறித்த உதவிகள் இலங்கை தமிழரசுக்கட்சி ஊடாக வழங்குமாறு கோரியுள்ளனர். அதனால் நான் அவர்களுடன் தொடர்பில் இருந்து இந்த உதவிகளை நேரடியாக எமது கட்சி உறுப்பினர்கள் ஊடாக தேவையுடையவர்கள் அடையாளம் கண்டு வழங்கி வருகிறோம்.



கிடைக்கின்ற உதவிகளை வழங்கி வைப்பதோடு, வேறு தேவைகளையும் எதிர் காலத்தில் வழங்க கூடியதாக இருக்கும் என நம்புகிறோம். மாணவர்களுக்கு விசேடமாக இந்த உதவிகளை செய்து கொடுப்பதற்கு காரணம் பொருளாதார நெருக்கடி காரணமாக மாணவர்களின் கல்வி வளர்ச்சி விழுந்து விடக்கூடாது என்பதே.

பொருளாதார நெருக்கடியில் இருந்து நாங்கள் மீண்டு எழுவதற்கு பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. விசேடமாக வடக்கு கிழக்கில் நாட்டின் ஏனைய பிரதேசங்களை விட சற்று வித்தியாசமான ஒரு சூழ்நிலை காணப்படுகிறது.

போர் முடிவடைந்த பிறகு போரின் தாக்கத்திலிருந்து மீண்டு எழுந்து கொள்ள முடியாத சூழ்நிலையில், தற்போது பொருளாதார வீழ்ச்சி நாடு பூராகவும் ஏற்பட்டுள்ளது.

ஆனால் பொருளாதார வீழ்ச்சி ஏற்படுவதற்கு முன்னதாக எங்களுடைய பிரதேசங்களில் மக்களுக்கு வேலைவாய்ப்பு இல்லாமை, இளைஞர்கள் படித்துவிட்டு வேலை வாய்ப்பு இன்றி காணப்படும் சூழ்நிலைகள் உள்ளடங்களாக இவ்வாறு பல விதமான பிரச்சனைகள் இருந்து கொண்டே உள்ளது.

வெளிநாடுகளுக்கு போயுள்ள எமது உறவுகள் பலர் தமது உறவுகளுக்கு நிதி உதவிகளை மேற்கொள்வதன் காரணமாக சில தேவைகள் அவர்களுக்கு நிவர்த்தி செய்யப்பட்டு வந்தது.

அந்த வகையில் வடக்கு கிழக்கின் பொருளாதாரம் என்றால் வெளிநாடுகளில் இருந்து இங்குள்ள உறவுகளுக்கு அனுப்பும் பணம் தான் பிரதான காரணமாக உள்ளது.இங்கே தொழில் வாய்ப்புக்களை மேற்கொண்டு வருவாயை தேடுவதை விட உறவினர்கள் ஊடாக இங்கு அனுப்பப்படும் நிதி எமது பொருளாதாரத்திற்கு அடித்தளமாக இருந்துள்ளது.

நாட்டில் அந்நிய செலாவானி இல்லாத சூழ்நிலையில் காணப்படும் நிலையில் வடக்கு கிழக்கில் சற்று மாறுபட்டதாக சில மாதங்களில் காணக்கூடியதாக உள்ளது. ஏற்கனவே பொருளாதார ரீதியில் வீழ்ச்சியடைந்துள்ள மாகாணங்கள் என்ற அடிப்படையில் இந்த பொருளாதார வீழ்ச்சியும் எங்களை மிக வெகுவாகவும் மோசமாகவும் பாதிக்கும். அதற்கு முகம் கொடுக்கும் வகையில் சில திட்டங்களையும், நாங்கள் மேற்கொண்டு வருகிறோம்.

சில விடையங்கள் குறித்து நாங்கள் அரசாங்கத்துடன் பேசுகின்றோம். வெளிநாட்டு முதலீடுகள் தேவை என்று அரசாங்கம் கேட்டுக் கொண்டுள்ள இந்த சூழ்நிலையில் புலம் பெயர்ந்த மக்களிடம் இருந்து எங்களின் பிரதேசத்திற்கு அவ்வாறான முதலீடுகளை பெற்றுக் கொள்வதற்கு பாரிய முயற்சியும் இடம் பெற்று வருகிறது.

இவ்வாறு மேற்கொள்கின்ற போது நாட்டிற்கும், எமது பிரதேசத்திற்கும் பொருளாதார மீள் எழுச்சிக்கு முக்கிய விடையமாக அமையும்.

இவ்வாறான விடயங்கள் எமக்கு கை கொடுக்கும் வரை எமது பிள்ளைகளின் கல்வி வளர்ச்சியில் வீழ்ச்சி அடைந்து விடக்கூடாது என்பதன் காரணத்தினால் நாங்கள் சில விடையங்களை முன்னெடுக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு, மாணவர்களுக்கு இவ்வாறான உதவிகளை மேற்கொண்டு வருகிறோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

- மன்னார் நிருபர்



# மன்னார் சென் செபஸ்ரியன் றோ.க.த.க பாடசாலையின் சாதனையாளர்கள் கௌரவிப்பு

மன்னார் சென் செபஸ்ரியன் றோ.க.த.க பாடசாலையில் கடந்த 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டு க.பொ.த சாதாரண தர பரீட்சைக்கு தோற்றி சாதனை படைத்த மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு புதன்கிழமை (30) காலை பாடசாலையின் அதிபர் மரியான் ஜெரால்ட் டயஸ் தலைமையில் இடம்பெற்றது.

இதன் போது சூரிய கட்டைக்காடு பிரதான வீதியில் இருந்து சாதனையாளர்கள் கௌரவிக்கப்பட்டு, மாலை அணிவித்து பேண்ட் இசை வாத்தியம் முழங்க ஊர்வலமாக பாடசாலைக்கு அழைத்து வரப்பட்டனர்.

அதனைத்தொடர்ந்து பாடசாலையில் கௌரவிப்பு நிகழ்வு இடம்பெற்றது.



இதன் போது கடந்த 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டு க.பொ.த சாதாரண தர பரீட்சைக்கு தோற்றி சாதனை படைத்த மாணவர்கள் கௌரவிக்கப்பட்டதோடு, சாதனை படைத்த மாணவர்களின் பெற்றோர்களும் கௌரவிக்கப்பட்டனர்.



குறித்த நிகழ்வில் பங்குத்தந்தை, பெற்றோர், ஆசிரியர்கள் பழைய மாணவர்கள் மற்றும் அழைக்கப்பட்ட அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

கனடிய செய்திகள் Canadian News

# "FINDER" திரைப்படத்திற்கான பூஜைகள் கனடா, தமிழகம் மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் கடந்த திங்கட்கிழமையன்று சிறப்பாக நடைபெற்றன

கனடாவில் இயங்கிவரும் "ஆரபி புரடக்ஷன்ஸ்" அதிபர் ரஜீவ் சுப்பிரமணியம் அவர்களும் தமிழ்நாட்டைச் சேர்ந்த திரைப்பட இயக்குனர் வினோத் அவர்களும் இணைந்து தயாரிக்கும் ''FINDER'' திரைப்படத்திற்கான பூஜைகள் கனடா, தமிழகம் மற்றும் எமது தாயகமான யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் கடந்த திங்கட்கிழமையன்று சிறப்பாக நடைபெற்றன.

இங்கே காணப்படும் படங்கள் கனடா ஸ்காபுறோ ஸ்ரீ வரசித்தி விநாயகர் ஆலயத்தில் சிவஸ்ரீ பஞ்சாட்சர விஜயகுமாரக் குருக்கள் அவர்கள் தலைமையில் நடைபெற்ற சிறப்பு பூஜையின் போது எடுக்கப்பட்டவையாகும். அத்துடன் யாழ்ப்பாணம் மற்றும் சென்னை பிரசாத் ஸ்ரூடியோ ஆகியவற்றில் எடுக்கப்பெற்ற படங்களும் காணப்படுகின்றன.

''FINDER'' திரைப்படத்திற்கான பதாகையை கனடா பைரவி நுண்கலைக் கூடத்தின் அதிபர் ஜெயச்சந்திரன் மாஸ்டர் மற்றும் அவரது பாரியார் சத்தியா ஆகியோர் இணைந்து திரை நீக்கம் செய்துவைத்தனர்.


தொடர்ந்து ரஜீவ் சுப்பிரமணியம் அவர்கள் இந்த திரைப்படத்தை தயாரிக்க தாங்கள் திட்டமிட்ட விபரங்களை அங்கு கூடியிருந்த அனைவருக்கும் எடுத்துரைத்தார்.

பல துறைகளைச் சார்ந்த நண்பர்கள் மற்றும் கலைஞர்கள் பத்திரிகையாளர்கள் என அங்கு கலந்து கொண்ட அனைவருக்கும் ''FINDER'' திரைப்படத்தின் இணைத் தயாரிப்பானர் ரஜீவ் சுப்பிரமணியம் நன்றி தெரிவித்தார்.
















# கனடா தமிழ்க் கலைக் கல்விச்சாலை நடத்திய இவ்வாண்டிற்குரிய "மருதம்" பல்சுவைக் கலைவிழா சிறப்பாக நடைபெற்றது



ஸ்காபுறோவில் திருமதி. மகேந்திரன் அவர்களின் நிர்வாகத்தின் கீழ இயங்கும் "கனடா தமிழ்க் கலைக் கல்விச்சாலை" நடத்திய இவ்வாண்டிற்குரிய "மருதம்" பல்சுவைக் கலைவிழா அண்மையில் கனடா கந்தசுவாமி ஆலய கலாச்சார மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது.

மேற்படி விழாவில் இங்குள்ள பல்வேறு நுண்கலை ஆசிரிய ஆசிரியைகள் தங்கள் மாணவர்களின் இசை நடன மற்றும் வாத்திய இசை நிகழ்ச்சிகளை மேடையேற்றினர்.

இங்கு காணப்படும் படங்களில் மிருதங்க வித்துவான் குகேந்திரன் கனகேந்திரன் அவர்களின் மாணவர்கள் வழங்கிய சிறப்பு இசை நிகழ்ச்சியில் முக்கிய பங்கு வகித்த குரு குகேந்திரன் கனகேந்திரன் அவர்கள் மற்றும் புகழ்பெற்ற வாத்திய இசைக் கலைஞர் பயாஸ் ஜவாஹிர் ஆகி-யோர் நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள் சார்பில் கௌரவிக்கப்படுவதையும். அத்தடன் கனடாவில் பல ஆண்டு காலம் இயங்கிவரும் "அமிர்தாலயா நுண்கலைக் கல்லூரி அதிபர் ஸ்ரீமதி லலிதாஞ்சனா கதிர்காமன் அவர்களின் மாணவிகள் வழங்கிய துர்க்கையின் சிறப்புக்களை எடுத்துக் கூறும் அழகிய நடனத் தோற்றங்களையும் கர்நாடக இசைக் கச்சேரி நடைபெறுவதையும் காணலாம்.

இந்த "மருதம்" வருடாந்த விழாவின் மூலம் சேகரிக்கப்பெறும் நிதியானது வட இலங்கையில் வாழ்வாதார உதவிகள் தேவைப்படும் சேவை நிறுவனங்களிடம் ஒப்படைக்கப்படுகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

**செய்தியும் படங்களும் - சத்தியன்**












**உதயனின் பிரத்தியேகச் செய்தி**

# நீர் வளம், நில வளம் உள்ள முல்லை மண்ணில் நிம்மதி ஏன் இல்லை?

(கனடா உதயனின் சிறப்புக் கட்டுரைத் தொடர் பாகம்-06)

- யாழ்ப்பாணத்திலிருந்து நடராசா லோகதயாளன்



இலங்கையில் தமிழர்கள் மனிதர்களிடமிருந்து மட்டுமல்ல மிருகங்களிடமும் நீண்ட காலமாகச் சிக்கித் தவிக்கின்றனர். அதிலும் குறிப்பாக யானையிடம் அவர்கள் சிக்கி சின்னபின்னமாகி உயிரையும் உடைமைகளையும் இழந்து நிர்கதியாக நிற்பதெல்லாம் வரலாற்றின் கருப்புப் பக்கங்கள்.

அண்மையில் தென்னிலங்கையில் தமிழர்கள்பால் பற்றுள்ள ஒரு மூத்த செய்தியாளர் மற்றும் செயற்பாட்டாளரிடம் பேசும் வாய்ப்பு கிடைத்தது. அவர் சொன்னார், “மல்லி, நாட்டிலுள்ள தமிழர்களின் துன்பங்களுக்கு காட்டிலுள்ள யானைகள் மட்டுமல்ல நாட்டின் அரசியல் யாப்பில் “யானை பலத்தைக் கொண்டு” மாற்றங்களைக் கொண்டு வந்தது யானை தானே! 83 கலவரங்களும் யானையால் தானே ஏற்பட்டது, அதேபோன்று சிங்கம் சரியாக நான்கு கால்களில் நின்றிருந்தால் நாட்டில் அவலங்கள் தோன்றியிருக்காதே. சிங்கம் சீறியதாலும், யானை பிளிறியதாலும் தானே உறுமலும் ஏற்பட்டது என அடுக்கிக்கொண்டே போனார்.

இந்த கட்டுரைத் தொடரின் இறுதி பாகத்தை எழுத ஆரம்பித்த போது அவர் கூறியது நினைவிற்கு வந்தது.

முல்லைத்தீவு மாவட்டம் அரச இயந்திரங்களால் அவலத்தை சந்திக்கும் அதேநேரம் வன விலங்குகளாலும் அவலத்தையே சந்திக்கின்றன. போரினால் மிகவும் மோசமாக பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள மக்கள் இன்னும் தமது வாழ்வாதாரங்களை முற்றாக மீட்டெடுக்காத மக்களுக்கு “பட்ட காலிலேயே படும்-கெட்ட குடியே கெடும்” என்ற பழமொழிக்கு ஏற்ப மனிதர்களால் மட்டுமின்றி வன விலங்குகளால் ஏற்படும் பாதிப்புகளையும் எதிர்கொள்ள வேண்டிய துர்ப்பாக்கிய நிலையில் உள்ளனர்.

தென்னிலங்கையின் அநுராதபுரம், புத்தளம் ஆனைமடுவ, மொனராகலை போன்ற பகுதிகளில் மக்கள் குடியிருப்பை அண்டிய பகுதிகளிற்குள் ஊடுருவி நாசம் செய்யும் யானைகளை மயக்க ஊசி அடித்து வாகனங்களில் ஏற்றிவரும் வனஜீவராசித் திணைக்கள அதிகாரிகள் அவற்றினை முல்லைத்தீவின் எல்லைப் பகுதிகளிலும் வவுனியா வடக்கு நெடுங்கேணியை அண்டிய பிரதேசத்திலேயே இறக்கி விட்டுச் செல்கின்றனர்.

அதனைக் கேட்டால் குழப்பம் விளைவிக்கும் யானைகளை காடு மாற்றி விட்டால் குழப்பத்தை ஏற்படுத்த மாட்டாது என்கின்றனர். இப்படியான ஒரு விளக்கத்தை கேட்கவே சிரிப்பாகவுள்ளது. எந்த விலங்கினமும் தனது அடிப்படை குணாம்சங்களை மாற்றிக்கொள்ளாது என்கிற அடிப்படை புரிதல் வனஜீவராசி திணைக்கள அதிகாரிகளுக்கு இல்லையோ என்கிற கவலை எழுகிறது.

சிங்கத்தை இடம் மாற்றி வீட்டில் வைத்துப் பராமரித்தால் அது இடியப்பமும் பிட்டும் சாப்பிட்டு சாந்தமாக இருக்குமா என்ற கேள்வி எனக்குள்ளேயே எழுகிறது. அப்படித்தான் உள்ளது யானைகளை காடு மாற்றிவிடும் எண்ணமும் உள்ளதாக எனக்குள் தோன்றுகிறது.

முல்லைத்தீவு மற்றும் நெடுங்கேணிப் பகுதியில் ஊருக்குள் மட்டுமன்றி, வைத்தியசாலைக்குள்ளும் உட்புகும் நிலையில் யானைகள் உள்ளபோதும் எந்தவொரு யானையினையாவது வேறு காட்டிற்கு மாற்றி விட்டீர்களா என மக்கள் கேட்கும் கேள்விக்கு எந்த அதிகாரிகளிடமும் பதில் இல்லை.

சரி, யானைகளை இடம்மாற்றி தராவிட்டால் யானை வேலியாவது அமைத்து தாருங்கள் என 10 ஆண்டுகளாகக் கோரியும் இன்றுவரை பலன் கிட்டவில்லை என்று காடுகளுக்கு அருகாமையில் வசிக்கும் மக்கள் ஆதங்கப்படுகின்றனர். எனினும் சிங்கள மக்கள் வாழும் வெலிஓயா, பொபஸ்வேவாவை பாதுகாக்க முல்லைத்தீவு மாவட்டத்தின் வெலிஓயா பிரதேச செயலாளர் பிரிவைச் சுற்றி கொக்குத்தொடுவாய் கடல்நீர் ஏரியை அண்டிய பகுதியில் இருந்து ஆண்டாங்குளம் வன ஒதுக்க எல்லை ஊடாக ஒதியமலை, தனிக்கல் வழியாக அரியகுண்டான் மற்றும் கம்பிலிவெவவின் எல்லைவரை 25 கிலோ மீற்றருக்கு யானைப் பாதுகாப்பு வேலி அமைத்து சிங்கள மக்கள் காக்கப்பட்டுள்ளனர் என்கின்றனர் அப்பகுதி மக்கள்.

“இது சிங்கமும் யானையும் செய்யும் கூட்டுச் சதியல்லவா?” என்று எல்லையோர கிராமவாசிகள் ஆவேசமாகக் கேட்கின்றனர்.

இதேசமயம் தென்பகுதியில் பல்வேறு தேவைகளிற்காக வளர்க்கப்படும் யானைகள் வயது முதிர்ந்தால் அல்லது மதம் கொண்டால் அவையும் வாகனம் மூலம் ஏற்றிவரப்பட்டு இரவு வேளைகளில் வடக்கு காடுகளிலேயே இறக்கும் அவலம் இன்றும் தொடர்வதாகவும் மக்கள் ஆதாரத்துடன் சுட்டிக்காட்டுகின்றனர்.

அதுமட்டுமின்றி முல்லைத்தீவு மாவட்டத்திலே - 1962 ஆம் ஆண்டு வவுனியா மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்கள் இரண்டுமே ஒரே நிர்வாக மாவட்டமாக இருந்த காலத்திலேயே இரு மாவட்டத்திலும் - 105 இடங்களை மட்டும் உரிமைகோரிய தொல்லியல் திணைக்களம் தற்போது முல்லைத்தீவில் மட்டும் 164 இடங்களை தமது இடங்கள் என்று கூறி உரிமை கோருகின்றனர்.

இத்தனை அவலங்களின் மத்தியிலும் அதிலிருந்து மீண்டு அபிவிருத்தி அல்லது வளர்ச்சி அடையத் தவிக்கும் அந்த மாவட்ட மக்களிற்கு போதிய வளங்கள் இருந்தபோதும் வாய்ப்புக்கள் இன்றியே தவிக்கின்றனர்.

மாவட்டத்தின் மிகப் பெரும் தொழிற்சாலையான கூழாமுறிப்பு ஓட்டுத் தொழிற்சாலை அடுத்த ஆண்டு (2023) மார்ச் மாதத்திற்கு முன்னதாக முழுமையாக இயங்க வைக்கும் வகையில் அதன் திருத்தப் பணிகள் ஆரம்பித்து விட்டதாக மாவட்ட அரச அதிபர் கதிர்காமத்தம்பி விமலநாதன் தெரிவித்தார்.

மாவட்ட அரச அதிபர் கூறியபடி எல்லாம் திட்டமிட்டபடி முன்னேறி அந்த தொழிற்சாலை மீண்டும் இயங்கத் தொடங்கினால், அதனால் யார் பயனடைவார்கள் - அந்த மாவட்டம் அல்லது வடக்கு மாகாணத்தில் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட நிலையிலுள்ள தமிழ் மக்களா அல்லது அவர்களுக்கு போதிய தகுதிகள் இல்லை என்று கூறப்பட்டு இதை ஒரு சாட்டாகக் கொண்டு தென்னிலங்கையிலிருந்து யானைகளைக் கொண்டு இறக்கிவிடுவது போன்று ஆட்களையும் கொண்டுவந்து இறக்குவார்களா என்ற கேள்வி எழுவதை தவிர்க்க முடியவில்லை.

அதேவேளை மாவட்டத்தின் எல்லைக் கிராமங்களாகத் திகழும் கொக்குளாய், கொக்குத்தொடுவாய், கருநாட்டக்கேணி போன்ற கிராமங்களில் 1983ம் ஆண்டிற்கு முன்னர் சுமார் 3 ஆயிரம் தமழ்க் குடும்பங்கள் வாழ்ந்த நிலையில் போர் முடிந்த 12 ஆண்டு கடந்துவிட்ட பின்னர் இப்போது ஆயிரத்திற்கும் குறைவான குடும்பங்களே உள்ளன மற்றும் அப்பகுதியின் அபிவிருத்தியை எவருமே கண்டுகொல்லவில்லை.




அவர்களுக்காக குரல் கொடுக்கவும் யாருமில்லை என்று வருந்துகின்றனர். தமிழ் அரசியல்வாதிகள் கூட தங்களது தேவைகளை உணர்ந்து உரிய நடவடிக்கைகளை போதியளவில் எடுப்பதில்லை என்று என்னிடம் பேசிய போது கண்ணீருடன் தெரிவித்தனர்.

இப்போது இந்தப் பகுதியை வடக்கு மாகாணத்தின் எல்லையாகப் பாதுகாக்க போராடும் அதேநேரம் மறுபுறத்தில் நெருங்கி அண்மித்து வரும் சிங்களக்குடியேற்றத்தை தடுத்து நிறுத்தும் கிராமங்களாகவும் இருக்கும் இந்த கிராமத்தில் வாழும் தமிழ் மக்கள் மாகாணத்தின் இருப்பை நிலை நிறுத்திக் காக்கவேண்டும் என்பதற்காக இன்றும் எல்லையில் ஆக்கிரமிப்பிற்கு எதிராகப் போராட்டங்களை எதிர்கொண்டே வருகின்றனர். தமிழர்கள் தாயகப் பிரதேசத்தை காக்க வேண்டும் என தாயகத்திலும் புலம்பெயர் தேசத்திலும் இருந்து குரல் எழுப்பினாலும் தாயகத்தைக் காக்க வேண்டும் என்பதற்காக எல்லைக் கிராமங்களில் எந்த அடிப்படை வசதிகளும் அற்று வாழும் இந்த மக்களைத் திரும்பிப் பார்க்கத் தவறுகின்றனர்.

இதேநேரம் நாட்டின் ஏனைய வளமான பகுதிகளிற்கோ அல்லது வெளிநாடுகளிற்குச் செல்லும் சந்தர்ப்பமோ அற்ற இவர்கள் பிறரின் உதவியின்றி தமது அடிப்படை வாழ்வியலையேனும் கொண்டு செல்ல மாவிலங்கம் வெளியில் உள்ள வயல்ப் பிரதேசத்தில் வயல் விதைப்பு நடவடிக்கையில் ஈடுபடவும் முடியாதவாறு சிங்கள மக்களின் தொழில் முயற்சி தடையாகவுள்ளது. அதாவது அருகே உள்ள சிங்கள மக்கள் தமது வாழ்வாதாரமாக ஆயிரக் கணக்கான பன்றிகளை வளர்ப்பதனால் தமது விவசாயம் அழிவடைவதாக விவசாய அமைப்புக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

மாவட்டத்தின் தமிழர் பிரதேசமான முகத்துவாரத்தில் அத்துமீறி வசிக்கும் தென்னிலங்கையர்கள் தமது வாழ்வாதாரமாக அதிக பண்றிகளை வளர்க்கின்றனர். அவ்வாறு வளர்க்கும் பண்றிகளை மற்றவர்களுக்கு பாதிப்பு ஏற்படுத்தாத வகையில் பாதுகாப்பான முறைகளில் வளர்ப்பது கிடையாது. அவற்றை பட்டிகளில் அடைத்து வளர்க்காமல் திறந்த இடங்களில் வளர்ப்பதனால் அவை இரவு பகலின்றி எவ்வேளைகளிலும் மக்கள் நடமாட்டப் பகுதிகளிற்குள்ளும் வாழ் விடங்கள் நோக்கியும் படை எடுக்கின்றன. இந்த வகைப் பன்றிகள் வளர்ப்பு இனத்தைச் சேர்ந்தமையால் மக்கள் நடமாட்டத்திற்கோ அல்லது நாய்களிற்கோ அஞ்சுவது கிடையாது.

“இவற்றின் காரணமாக 24 மணிநேரமும் காவல் இருக்கவேண்டிய நிலைமையில் உள்ளோம். காட்டுப் பண்றிகள் எனில் இரவுவேளைகள் மட்டுமே நடமாடும். அவையும் மனித நடமாட்டம் அல்லது நாய்களின் நடமாட்டத்தை கண்டால் அகன்றுவிடும். ஆனால் இங்கே சிங்களவர்கள் வளர்க்கும் பன்றிகளை எம்மால் கட்டுப்படுத்த முடியவில்லை என்பதனால் வயல் நிலங்களும் விதைக்க முடியவில்லை எனக் கவலை தெரிவிக்கின்றனர்”.



மேலும் இந்தப் பன்றிகள் சுகாதாரமற்ற முறையில் வளர்க்கப்படுவதால், நோய் பரவும் வாய்ப்புகளும் அதிகமாகவுள்ளன என்று வைத்தியர்கள் அச்சப்படுகின்றனர். அவ்வாறு பன்றிக்காய்ச்சல் ஏற்பட்டு அது பரவினால் பெரும் ஆபத்துக்களை ஏற்படுத்தும் என்றும் அவர்கள் எச்சரிக்கின்றனர்.

தமிழ் மண்ணில் வலிகளையும் அவலங்களையும் மட்டுமே சுமந்து வாழும் இப்பகுதி மக்களின் துயரைத் துடைக்கும் பணிக்கு யார் பொறுப்பு, அதிலும் குறிப்பாக பன்றிகளின் தொல்லை தொடர்பில் சுகாதாரத் திணைக்களத்தினரிடம் கேட்டால் நாம் அதனால் எழும் பிரச்சனைகள் தொடர்பிலும் அதன்மூலம் தொற்று வருத்தம் ஏதும் ஏற்படுகின்றதா என்பதனை மட்டுமே பார்வையிடமுடியும் என்கின்றனர். பிரதேச சபையுடன் தொடர்பு கொண்டால் “எமது பொதுச் சுகாதார உத்தியோகத்தர் கண்காணிக்கின்றார். சுகாதார முறைமையும் வளர்ப்பு முறையும் அறிவுறுத்தப்படுகின்றது என்கின்றனர்”. ஆனால் இங்கே எந்த முறைமையும் பின்பற்றப்படுவதாகத் தெரியவே இல்லை என மக்கள் கூறுகின்றனர்.

நாம் எல்லையில் நெருக்கடிகளையும் வன விலங்குகளின் அச்சத்தையும் சிங்களவர்களின் நில ஆக்கிரமிப்பையும் தடுத்து உயிரை துச்சமாக எண்ணி வாழ்வதனாலேயே இன்றும் இப் பிரதேசம் சிங்களத்தால் முழுமையாக விழுங்கப்படவில்லை. இருப்பினும் எம்மை போன்று அடுத்த சந்ததியும் இவ்வாறு நெருக்கடியை சந்திக்க விரும்பாது விட்டால் இன்னும் 10 வருடத்தில் முல்லைத்தீவு மாவட்டமும் சிங்கள மக்களை பெரும்பான்மையாக கொண்ட மாவட்டமாக மாறும். நாம் வாக்களிப்பவர்களும். வெறுமனே வாய் கிழிய கத்துபவர்களாகவே இருப்பர். எம்மை தூக்கிவிடுவதற்கு மட்டும் யாரும் இல்லை என்கின்றனர் அப்பகுதி மக்கள்.

முல்லைத்தீவு மக்களின் துன்பங்களும் துயரங்களும் முடிவில்லா தொடர்கதை போன்றவை. கனடா உதயன் மூலம் அவற்றை வெளியுலகிற்கு கொண்டு வந்து ஓரளவேனும் அவர்களுக்கு விமோசனத்தைத் தேடித்தருவதே இந்த தொடரின் நோக்கமாக இருந்தது. எனினும் ஐந்து வாரங்கள் தொடர்ச்சியாகக் கட்டுரை வெளியாகி அது உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் ஏற்படுத்திய தாக்கம் காரணமாக சில நெருக்கடிகளையும்



அழுத்தங்களையும் சந்திக்க வேண்டிய சூழல் ஏற்படுகின்றது அதனால் அந்த மக்களின் அவலங்கள் ஏராளம் என்றாலும், தவிர்க்க முடியாத சில காரணங்களால் இந்த தொடரை இத்துடன் முடித்துக்கொள்கின்றேன்.



# முல்லைத்தீவில் விடுதலைப்புலிகளின் சயனட், இலக்கத்தகடு மனித எச்சங்கள் மீட்கப்பட்டுள்ளன!

இலங்கை செய்திகள்
Sri Lanka News

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவுக்குட்ப்பட்ட உடையார்கட்டு குரவில் கிராமத்தில் தனியார் காணி ஒன்றின் இனம் காணப்பட்ட மனித எச்சங்கள் இன்று மீட்கப்பட்டுள்ளன!

புதுக்குடியிருப்பு பொலீஸ் பிரிவிற்கு உட்பட்ட உடையார் கட்டு குரவில் கிராமத்தில் தனியார் ஒருவரின் காணியினை பண்படுத்தும் போது கடந்த 20.11.22 அன்று மனித எச்சங்கள் இனம் காணப்பட்டுள்ளன.

இது குறித்து புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்தினால் நீதிமன்றில் பதிவுசெய்யப்பட்ட முறைப்பாட்டிற்கு அமைய இன்று தோண்டும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்ற நீதிபதி ரி.சரவணராஜா முன்னிலையில் சட்டவைத்திய அதிகாரி றொகான் தடையவியல் பொலிசார், பொலிசார் ஆகியோர் தோண்டப்பட்டுள்ளது.

இதன்போது மூன்று வகையான மனித எச்சங்களின் மாதிரிகள் மீட்கப்பட்டுள்ளதாக சட்டவைத்திய அதிகாரி தெரிவித்துள்ளார்.

மனித எச்சங்களுடன் துப்பாக்கி இரவைகள் மற்றும் உடைகள், என்பன காணப்பட்டுள்ளன விடுதலைப்புலிகளின் சயனட், இலக்கத்தகடு என்பனவும் இதன்போது குறித்த பகுதியில் இருந்து மீட்னப்பட்டுள்ளன.



மீட்கப்பட்ட மனித எச்சங்களை சட்டவைத்திய அதிகாரி மரபணுசரிசோதனையின் பின்னர் நீதிமன்றில் அறிக்கை சமர்ப்பிக்குமாறு நீதிபதி பணித்துள்ளார்.

# மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் அடிப்படை குறைபாடுகள் — சார்ள்ஸ் நிர்மலநாதன்



மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் அடிப்படை குறைபாடுகளால் மன்னார் மாவட்ட மக்கள் பல அசௌகரியங்களை எதிர் கொண்டுள்ளார்கள்.

இந்த வைத்தியசாலைக்கு கணினிமயமாக்கப்பட்ட டோமோகிராபி ஸ்கேன் இயந்திரத்தை வழங்க நடவடிக்கை எடுக்குமாறும், குறைபாடுகளுக்கு தீர்வு வழங்குமாறும் தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் சுகாதார துறை அமைச்சரிடம் கோரிக்கை விடுத்தார்.

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (29) இடம்பெற்ற 2023 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தில் சுகாதாரத்துறை மற்றும் புத்தசாசனம் மற்றும் மத விவகாரங்கள், கலாசார அலுவல்கள் அமைச்சு ஆகியவற்றுக்கான நிதி ஒதுக்கீட்டு குழு நிலை விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது, மன்னார் மாவட்டத்தில் வாழும் சுமார் ஒன்றரை இலட்ச மக்கள் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலைகளில் மருத்துவ சேவைகளை பெற்றுக் கொள்கிறார்கள். இந்த வைத்தியசாலை பல சேவை குறைப்பாடுகளுக்கு மத்தியில் இயங்குகிறது.

நல்லாட்சி அரசாங்கத்தில் இந்த வைத்தியசாலைக்கு கணினிமயமாக்கப்பட்ட டோமோகிராபி ஸ்கேன் (சி.டி.சி ) இயந்திரத்தை வழங்க தீர்மானிக்கப்பட்டது.


இருப்பினும் இந்த இயந்திரத்தை பொருத்துவதற்கு மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் பிரத்தியேக கட்டடம் இல்லாத காரணத்தினால் இந்த இயந்திரம் பிறிதொரு மாவட்ட வைத்தியசாலைக்கு வழங்கப்பட்டது.

மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் சி.டி.சி இயந்திரத்தை பொருத்துவதற்கு பிரத்தியேக கட்டடம் நிர்மாணிக்க பட்டுள்ளது. இருப்பினும் இதுவரை இயந்திரம் வழங்கப்படவில்லை.

மன்னார் மாவட்ட வைத்தியசாலையில் இந்த சேவை இல்லாத காரணத்தினால் மன்னார் மாவட்ட மக்கள் யாழ்ப்பாணம், அனுராதபுர மாவட்ட வைத்தியசாலைகளுக்கு செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. ஆகவே இந்த இயந்திரத்தை மன்னார் மாவட்ட வைத்தியசாலைக்கு வழங்குமாறு சுகாதாரத்துறை அமைச்சரிடம் வலியுறுத்துகிறேன் என்றார்.

# ரணில் விக்ரமசிங்க அழைப்பு விடுத்த தேசிய இனப் பிரச்சினைக்கான தீர்வு பேச்சுவார்த்தையில் நிபந்தனை இன்றி பங்கேற்றால், அது அர்த்தமற்றதாகவே இருக்கும்

## தமிழ் மக்கள் தேசிய கூட்டணி சி.வி.விக்னேஸ்வரன்



பேச்சுவார்த்தை மேசையில் கலந்துரையாடி, தீர்வு தொடர்பில் முடிவு எடுப்போம் எனவும் என்ன பிரச்சினை என்றாலும் பேச்சு மூலமே சிறந்த தீர்வு கிடைக்கும் என ரணில் விக்ரமசிங்கசுட்டிக்காட்டியுள்ளார்.

கிடைக்கும் சிறந்த சந்தர்ப்பங்களைப் பயன்படுத்த தமிழ்த் தலைவர்கள் முன்வர வேண்டும் எனவும் கடந்த காலத் தவறுகளை மீண்டும் இழைக்காதீர்கள் எனவும் ஊடகமொன்றுக்கு வழங்கிய மின்னஞ்சல் ஊடான பதிலில் ரணில் விக்ரமசிங்க மேலும் குறிப்பிட்டுள்ளார். இது தொடர்பில் தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் தலைவரும், முன்னாள் நீதியரசருமான சி.வி.விக்னேஸ்வரன் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

"ரணில் விக்ரமசிங்க அழைப்பு விடுத்துள்ள தேசிய இனப் பிரச்சினைக்கான தீர்வு பேச்சுவார்த்தையில் நிபந்தனை இன்றி பங்கேற்றால், அது கடந்த காலங்களைப் போன்று அர்த்தமற்றதாகவே இருக்கும்.

சமஷ்டி அடிப்படையிலான தீர்வை நிபந்தனையாக முன்வைத்தே இனப் பிரச்சினை தீர்வு பேச்சுக்கு செல்ல வேண்டும் என கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கோரிக்கை முன்வைப்பதற்கு முன்பதாகவே இது தொடர்பில் இரா.சம்பந்தனுக்கு தாம் கடிதமொன்றை அனுப்பியுள்ளேன்" சி.வி.விக்னேஸ்வரன் குறிப்பிட்டுள்ளார்.

எனினும் தேசிய இனப்பிரச்சினைத் தீர்வுக்கான பேச்சு ஆரம்பமாவற்கு முன்னரே நிபந்தனைகளை தமிழர் தரப்பு விதிக்கக் கூடாது எனவும், முதலில் பேச்சு மேசைக்கு வாருங்கள் எனவும் ரணில் விக்ரமசிங்க தமிழ் அரசியல் தரப்புக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

வரவு - செலவுத் திட்ட விவாதம் முடிவடைந்த பின்னர் இனப்பிரச்சினை தீர்வு தொடர்பில் சர்வகட்சி கூட்டம் நடத்தப்படும் என நாடாளுமன்றில் ரணில் விக்ரமசிங்க தெரிவித்திருந்த நிலையில், தமிழ் தேசியக் கட்சிகள் சில நிபந்தனைகளை விதித்துள்ளனர். என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

# மன்னார் அரச பேருந்து சாரதிகள் பணி புறக்கணிப்பு



மன்னார் அரச பேருந்து சாரதிகள் செவ்வாய்க்கிழமை (29) பணி புறக்கணிப்பு போராட்டம் ஒன்றை முன்னெடுத்துள்ளனர்.

அரச போக்குவரத்து பேருந்து சாரதி ஒருவரை தனியார் பேருந்து சாரதி கூரிய ஆயுதங்களால் தாக்கிய நிலையில் குறித்த சாரதி ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.



இருப்பினும் பொலிஸார் உரிய சட்ட நடவடிக்கை மேற்கொள்ளவில்லை என கூறியும் தாக்குதலை மேற்கொண்ட சாரதிக்கு உடனடியாக பிணை வழங்கியமைக்கு எதிர்ப்பு தெரிவித்து நேற்றைய தினம் யாழ்ப்பாணத்திலும் இன்றைய தினம் வடமாகாணம் முழுவதும் அரச போக்குவரத்து சாரதிகள் பணிப்புறக்கணிப்பு போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

குறித்த சம்பவத்திற்கு காரணமானவர் சட்டத்தின் மூலம் உரிய விதமாக தண்டிக்கக் கோரியும் அரச போக்குவரத்து சாரதிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்த கோரியும் இல்லாவிட்டால் தொடர்ச்சியாக நாடளாவிய ரீதியில் அரச போக்குவரத்து சாரதிகள் பணி புறக்கணிப்பு போராட்டம் மேற்கொள்ள உள்ளதாக தெரிவித்துள்ளனர்.

- மன்னார் நிருபர்

# மன்னாரில் "மாவீரர் தின வியாபாரிகள்" என்ற தலைப்பில் சுவரொட்டி

மன்னார் மாவட்டத்தின் சில பகுதிகளில் "மாவீரர் தின வியாபாரிகள்" என சில பாராளுமன்ற உறுப்பினர்களின் பெயர் குறிப்பிடப்பட்டு ஒட்டப்பட்டுள்ள சுவரொட்டிகள் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

குறிப்பாக 2009 ஆம் ஆண்டுக்கு பின்னர் ஒவ்வொரு மாவீரர் தினமும் வியபாரமாக்கப்பட்டுள்ளதாகவும் மாவீரர்களை வைத்து வியாபாரம் இடம்பெறுவதாகவும் அதற்கு உதாரணமாக பாராளுமன்ற உறுப்பினர் சிறிதரன் மாவீரர் தினத்திற்கு என ஐரோப்பிய நாடுகளுக்கு சென்று பணம் வசூலிப்பதாக குறித்த சுவரொட்டியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் லண்டன் தமிழர் ஒருங்கிணைப்பு குழு பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திர குமார் பொன்னம்பலத்திற்கு சில கோடிகளை அனுப்பி வைத்துள்ளதாக சுவரொட்டியில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

குறித்த பணத்தில் சிறிது அளவு பணத்தை மாவீரர் தினத்திற்கு செலவழித்துவிட்டு மிகுதியை தங்கள் சொந்த செலவுகளுக்கு பயன்படுத்துவதாகவும் இவ்வாறு மாவீரர் தினத்தை சுட்டி காட்டி ஒவ்வொரு முறையும் வியாபாரம் செய்வதாக அந்த சுவரொட்டியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# ஜனாதிபதியின் பேச்சுவார்த்தைக்கான அழைப்பை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஏற்றுக்கொள்கிறது! கூட்டாட்சி பற்றிப் பேசக் கட்சி தயாராக இருப்பாதாக நா.உறுப்பினர் அறிவிப்பு!

**ECONOMYNEXT** - இனச்சிக்கலுக்குத் தீர்வு காண்பதற்கான நேர்மையான முயற்சிகளில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஆக்கப்பூர்வமாக ஈடுபடும் என ஜனாதிபதி இரணில் விக்கிரமசிங்க எதிர்க்கட்சிகளுக்கு விடுத்த வேண்டுகளுக்கு ததேகூ பேச்சுவார்த்தைக்கு எப்போதும் தயாராக இருக்கிறது என சட்டமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் பதிலளித்துள்ளார். கூட்டாட்சித் தீர்வுக்குத் தமிழ் தேசியக் கூட்டமைப்பு தயாராக இருப்பதாக அவர் தெரிவித்தார்.
நொவெம்பர் 24 வியாழன் பிற்பகல் “நாங்கள் எப்போதும் நடந்து கொண்டது போல ஒவ்வொரு நேர்மையான முயற்சியிலும் ஆக்கப்பூர்வமாக ஈடுபடுவோம், ஆனால் எந்தவொரு கேலிக்கூத்து நடவடிக்கையையும் அனுமதிக்க மாட்டோம்,” என்று சுமந்திரன் ட்வீட் செய்தார். முந்தைய நாள் நாடாளுமன்றத்தில் ஆற்றிய உரையில், “உண்மையை மற்றவர்களிடமிருந்து மறைக்க அல்லது அதனைச் சமாளிக்கும் நோக்கத்துடன் அணுகினால் நல்லிணக்கம் சாத்தியப்படாது” என யாழ் மாவட்ட நா.உ. கூறினார்.

“உண்மையை உறுதிப்படுத்துவதன் மூலம் மட்டுமே உண்மையான நல்லிணக்கம் இருக்க முடியும்” என்று அவர் கூறினார்.

“உங்கள் செயல்கள் சொற்களை விட ஓங்கி ஒலிக்க வேண்டும். இப்போது நாம் பார்ப்பது சொற்கள், சொற்கள் மற்றும் சொற்கள் மட்டுமே. நான் பேசிக் கொண்டிருக்கும் போது தமிழ்மக்களுக்குச் சொந்தமான பெருமளவு நிலங்கள் (முப்படையினரால்) கையகப்படுத்தப் படுகின்றன” என்று அவர் மேலும் கூறினார். அப்போது இடை மறித்துப் பேசிய ஜனாதிபதி விக்கிரமசிங்க தான் அது பற்றிக் கவனிப்பதாகச் சொன்னார்.

இலங்கையின் பல தசாப்தங்களாக நீடித்து வரும் இனச்சிக்கலுக்கு நிரந்தர தீர்வு காண்பதற்கான உரையாடலுக்கு எதிர்க்கட்சிகளுக்கு ஒரு வெளிப்படையான அழைப்பை விக்கிரமசிங்க கடந்த புதன்கிழமை அன்று மீண்டும் விடுத்தார். இலங்கைத் தீவு பிரித்தானியரிடம் இருந்து சுதந்திரம் அடைந்து 75 ஆண்டுகள் நிறைவடைவதைக் கொண்டாடும் போது, 2023 பெப்ரவரி 04 க்குள் தீர்வுக்கு உடன்பாடு காணும் நோக்கில், டிசம்பர் 11 க்குப் பிறகு பேச்சுவார்த்தைகள் தொடங்கும் என்று அவர் கூறினார்.

“ஜனாதிபதியின் முன்முயற்சியை நாங்கள் வரவேற்கிறோம். தீர்வை எட்ட அனைவரும் உடன்பட வேண்டும். இந்த நாட்டிலுள்ள அனைத்து மக்களும் இது தமது நாடு என்பதில் மனநிறைவு மற்றும் திருப்தியடைவதுடன், பாதுகாப்பாகவும் இருக்க வேண்டும் என்று நாங்கள் விரும்புகின்றோம்” என்று நா.உ கூறினார். இந்த விடயத்தில் ஏற்கனவே பரந்த ஒருமித்த கருத்து இருப்பதாகவும், சில விடயங்களுக்கு மட்டுமே தீர்வுகாண வேண்டியிருக்கும் என்றும் நா. உ எடுத்துரைத்தார்.

“அதனை ஒரு நாள் அமர்வில் செய்யலாம். உங்களுக்கு மூன்று மாதங்கள் தேவையில்லை” என்று (சுமந்திரன்) கூறினார்.

ஜனாதிபதி விக்ரமசிங்க தனது உரையில் புதிதாகப் பேசுவதற்கு எதுவுமில்லை என்பதை ஒப்புக்கொண்டுள்ளார். தென்னாபிரிக்காவின் முன்மாதிரியை ஜனாதிபதி நோக்கினால், அந்த நாடு “பொறுப்புக்கூறல் சிக்கல்களைப் பார்ப்பதற்கு முன்னரே” அரசியல் மாற்றத்திற்கு உள்ளாகியிருந்ததை கவனத்தில் கொள்ள வேண்டும்” என சுமந்திரன் தெரிவித்தார்.

“அந்த அடிப்படை மாற்றம் நிகழ வேண்டும் மற்றும் பிற நடவடிக்கைகளுக்கு முன்னதாக இருக்க வேண்டும்” என்று அவர் (சுமந்திரன்) கூறினார்.
சமூகங்களுக்கிடையிலான நல்லிணக்கம் தொடர்பாக இலங்கை எதிர்கொள்ளும் சிக்கல்களில் மனித உரிமை மீறல்கள் இடம்பெற்றதாகக் கூறப்படும், குறிப்பாக 26 ஆண்டுகால ஆயுத மோதலின் இறுதிக் கட்டத்தில் இடம்பெற்தாகக் கூறப்படும், மனித உரிமை மீறல்கள் விடயமாகும். வலிந்து காணாமல் போனவர்கள், இராணுவமயமாக்கல் மற்றும் நில அபகரிப்பு ஆகியவை தொடர்பாக இலங்கையின் மனித உரிமைகள் பற்றிய விவாதங்கள் பல்வேறு சர்வதேச அரங்குகளில் முக்கிய இடத்தைப் பெற்றுள்ளன.

”நிச்சயமாக நீங்கள் பல நம்பிக்கையைக் கட்டியெழுப்பும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும், ஏனென்றால் நீண்ட வரலாறு மற்றும் என்ன நடந்தது என்பதன் காரணமாக நம்பிக்கையில் பற்றாக்குறை உள்ளது” என்று சுமந்திரான் கூறினார்.
நீதி மற்றும் பொறுப்புக் கூறல் சிக்கல்களைப் கருத்தில் கொள்வதற்கு முன் அடிப்படைச் சிக்கல்களை முதலில் தீர்த்து வைப்பது மிகவும் அவசியமானது என்று நா. உ கூறினார். இது மக்களுக்கு ஒரு வேறுபட்ட கண்ணோட்டத்தை வழங்கும் என்றும் அவர் கூறினார். ஜனாதிபதி விக்கிரமசிங்கவுக்கு அண்மைக் காலத்தில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு வழங்கிய அரிய பாராட்டு இதுவாகும்.

“இன்று இந்த அவையில் உள்ள ஒரே ஆள் நீங்கள் மட்டுமே என்பதை நாங்கள் ஏற்றுக் கொள்கிறோம் - நீங்கள் இந்த அவையின் உறுப்பினராக இல்லாவிட்டாலும் - இந்த விடயத்தில் மிக நீண்ட அனுபவம் உடையவர் நீங்கள் மட்டுமே. இந்திய - இலங்கை உடன்படிக்கையுடன் முடிவடைந்த 1986 ஆம் ஆண்டின் இடையில் இருந்து இறுதி வரை தமிழர் விடுதலைக் கூட்டணி உடன் பேச்சுவார்த்தை நடத்திய அரசாங்க பேச்சுவார்த்தைக் குழுவில் ஒரு உறுப்பினராக நீங்கள் இருந்தீர்கள். இருந்தும் 13 வது சட்ட திருத்தம் அதிகாரப் பகிர்வுக்கான ஒரு அர்த்தமுள்ள அதிகாரத் திட்டமாக நாங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை ”என்று அவர் கூறினார்.

*(தொடர்ச்சி அடுத்த வாரம்)*

(ஆங்கில மூலம் **https://economynext.com/sri-lanka-ethnic-issue-tna-accepts-presidents-overture-mp-suggests-party-ready-to-talk-federal-104106/.** தமிழாக்கம் - கனடா நக்கீரன்)


MONEY PROBLEMS?
பணச்சிக்கலா?

ALL DEBT SOLUTIONS CR PLAN

0%வட்டி

அனைத்து மாதாந்த கொடுப்பனவுகளுக்கும் ஒரு செலுத்தல்

No Need to file for Bankruptcy

One Small Monthly Payment for all your Bills



வசந்தி சிவராஜா

நீங்கள் மேலதிகப்பற்றை எப்போதும் பயன்படுத்துகிறீர்களா?

நீங்கள் ஒரு காசோலையில் இருந்து மறு காசோலை என வாழ்கிறீர்களா?

நீங்கள் சம்பள நாள் கடன்கொடுப்போரிடம் இருந்து கடன் வாங்குகிறீர்களா?

உங்களைக் கடன் கொடுக்க வேண்டியவர்கள் அல்லது கடன் அறவிடும்-முகவர் நிலையங்கள் தொந்தரவு செய்கிறார்களா?

உங்களது மகிழுந்து, வீடு, ஆர்ஆர்எஸ்பி, பங்குகள் அல்லது வேறு சொத்துக்களை இழக்கப்போகிறோமா என அச்சப்படுகிறீர்களா?

நீங்கள் உங்களது கடன் மதிப்பீடு இடர்ப்பாட்டுக்கு உடையதாக நினைக்கிறீர்களா அல்லது கெட்ட கடன் வைத்திருக்கிறீர்களா?

நாங்கள் உங்களைக் காப்பாற்ற முடியும்

உங்களது மகிழுந்து, வீடு, ஆர்ஆர்எஸ்பி மற்றும் ஏனைய-சொத்துக்களை வைத்திருங்கள்.

நாங்கள் உங்களது நிலைமையைப் பொறுத்து உங்களது-விருப்புகளுக்கு இடமளிப்போம்.

நாங்கள் உங்களது கடனை 80 விழுக்காடு குறைப்போம்.

நாங்கள் உங்களுக்கு தொலைபேசி அழைப்புக்கள் மற்றும்-சொத்துமுடக்கை உடனடியாக நிறுத்துவோம்.

நாங்கள் உங்களுக்கு உதவமுடியும்

நாங்கள் உங்களது கடன் நம்பிக்கையை மீள்கட்டி எழுப்ப உதவுவோம்.

நாங்கள் எங்களது கடன் திட்டத்தின் கீழ் நீங்கள் கடன் வாங்குவதையும்-அதனைப் புத்திசாலித்தனமாகப் பயன்படுத்துவற்கும் உதவுவோம்.

தனிப்பட்ட மற்றும் அந்தரங்கமான சந்திப்புக்கு எங்களை அழையுங்கள்.



எல்லாக் கடன்களுக்கும் தீர்வும் மற்றும் ஆலோசனை சேவைகள்

உங்கள் வாழ்க்கையில் நிரந்தரமான மாறுதலுக்கு மற்றும் இலவச ஆலோசனைக்கு உடனே அழையுங்கள்

416-671-0577

4 இடங்களில் சேவை
ரொறன்ரோ, ஸ்காபறோ, றிச்மோன்ட்கில், மிசிசாகா
வார இறுதி - இரவு நேரங்களிலம் சேவை உண்டு

MISSISSAUGA OFFICE
1090 Dundas St. East
Suite #103
L4Y 2B8
Mississauga

SCAROBOROUGH OFFICE
2100 Ellesmere Rd, Suit # 211 E
Scarborough, ON
M1H 3B7

HEAD OFFICE - TORONTO
155 Rexdale Blvd. Suite # 704
M9W 5Z8
Toronto

RICHMONDHILL OFFICE
10255 Yonge St. Suite # 204
Richmondhill

NORTH YORK OFFICE
298 Sheppard Ave., W. # 200
M2N 1N5 North York

தமிழில் தொடர்புகளுக்கு:
வசந்தி சிவராஜா - 416-616-3077

இலங்கை செய்திகள் Sri Lanka News

# மன்னாரில் எயிட்ஸ் நோய் ஏற்படுவதற்கு போதைப்பொருள் பாவனையே காரணம்

## வைத்திய நிபுணர் தக்ஸாயினி மகேந்திரநாதன்




மன்னார் மாவட்டத்தில் எயிட்ஸ் நோயாளர்கள் உருவாகுவதற்கு அதிகரித்துள்ள போதைப்பொருள் பாவனையே காரணம் என பாலியல் நோய் மற்றும் எயிட்ஸ் கட்டுப்பாட்டு விசேட வைத்திய நிபுணர் வைத்தியர் தக்சாயினி மகேந்திரநாதன் தெரிவித்துள்ளார்.

மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் தர்மராஜா வினோதன் தலைமையில் வியாழக்கிழமை (1) மதியம் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் போது இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், உலக எயிட்ஸ் தினமானது 1988ம் ஆண்டு முதல் கொண்டாடப்பட்டு வருகிறது. அந்த வகையில் இந்த வருடம் டிசம்பர் முதலாம் திகதி "சமத்துவத்தை உருவாக்குவோம்" எனும் தொனிப் பொருளில் இலங்கையில் கொண்டாடப்பட்டு வரும் அதே வேளையில் 4686 எச்.ஐ.வி நோயாளர்கள் 2022 ஆம் ஆண்டின் இரண்டாவது காலாண்டு வரை அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதில் 3377 பேர் ஆண்களாகவும் 1309 பேர் பெண்களாகவும் காணப்படுகின்றார்கள். ஆண் பெண் விகிதாசாரத்தை எடுத்துக் கொண்டால் 7க்கு ஒன்றாக காணப்படுகின்றது. வடமாகாணத்தில் 137 பேர், மன்னார் மாவட்டத்தில் 11 பேர் எச் .ஐ .வி நோயாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளார்கள்.

குறிப்பாக மன்னார் மாவட்டத்தில் அதிகரித்துவரும் போதைப் பொருள் பாவனையும் ஆண்களுக்கிடையேயான பாலியல் தொடர்பு காரணமாக எச்.ஐ.வி .தொற்று ஏற்படுகிறது.

இதனைத் தடுக்கும் முகமாக பாலியல் நோய் மற்றும் எயிட்ஸ் தடுப்புப் பிரிவினர் இது தொடர்பான விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்தும் முகமாக பல்வேறுபட்ட மட்டங்களில் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்துள்ளனர்.

அதனைத் தவிர எச்.ஐ.வி நோயாளிகளுக்கு சிகிச்சை அவர்களுக்கான இரத்தப்பரிசோதனை ஆகியவற்றையும் வழங்கி வருகிறார்கள்.

இதேவேளை கருத்து தெரிவித்த மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ரி.வினோதன், 2022 டிசம்பர் 1 உலக எயிட்ஸ் தினம் சமத்துவத்தை உருவாக்குகின்ற தொனிப்பொருளோடு உலக எயிட்ஸ் தினம் அனுஷ்டிக்கப்படுகிறது.

உலகளாவிய ரீதியில் எயிட்ஸ் நோயானது பாரதூரமான அச்சுறுத்தலாக இருந்து வருகிறது. கடந்த வருடம் உலகளாவிய ரீதியில் 48 மில்லியனுக்கு மேற்பட்டவர்கள் எயிட்ஸ் தொற்றோடு வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

இவர்களில் 1.5 மில்லியன் பேர் புதிதாக 2001 ஆம் ஆண்டின் பின் உலகளாவிய ரீதியில் அடையாளம் காணப்பட்டவர்கள்.

இலங்கையை பொறுத்தவரையில் கடந்த ஆண்டு 400க்கு மேற்பட்டவர்கள் எயிட்ஸ் நோய் தொற்றுக்கு உள்ளாகி இருக்கின்றனர். அந்த சந்தர்ப்பத்தில் மன்னார் மாவட்டத்திலும் ஒருவர் எயிட்ஸ் நோயோடு அடையாளம் காணப்பட்டிருக்கிறார்.

எய்ட்ஸ் நோயைப் பொறுத்தவரையில் (ART) ஆன்ட்டி ரெக்கவரி தெரபி தற்போது புதிய நம்பிக்கையை உருவாக்கி இருக்கின்ற போதிலும் எயிட்ஸ் நோயை தடுப்பதற்கான வழிமுறைகள், எயிட்ஸ் நோயாளிகளை எவ்வாறு பராமரிக்கலாம், அவர்களுடைய தேவைப்பாடு எவ்வாறு உள்ளது, போன்றவற்றில் இன்னும் விழிப்புணர்வும் போதிய நடவடிக்கையில் அவசியமாக இருக்கிறது என அவர் மேலும் தெரிவித்தார்.

# சாமிமலை கவரவில தேசிய பாடசாலைக்கு திறன் வகுப்பறை




ஹட்டன் கல்வி வலயத்திற்குட்பட்ட மிகவும் பின்தங்கிய பாடசாலைகளில் ஒன்றாக காணப்படுகின்ற சாமிமலை கவரவில தேசிய பாடசாலைக்கு புதிதாக நிர்மாணிக்கப்பட்ட திறன் வகுப்பறை அங்குரார்பண நிகழ்வு பாடசாலையின் அதிபர் திரு. ஜெயபாலன் தலைமையில் கடந்த புதன்கிழமை (30.11.2022) இடம்பெற்றது.

பெருந்தோட்ட கல்விக்கான இணைப்பாளர் திரு. M.P.சந்ரசேகரன் அவர்களின் ஆலோசனைக்கு அமைவாக அனைத்துலக மருத்துவ நல அமைப்பு (IMHO) மற்றும் இரட்ணம் அறகட்டளை நிறுவனங்களின் பூரண நிதியோதிகீடில் இந்த திறன் வகுப்பறையானது சாமிமலை கவரவில தேசிய பாடசாலை மாணவர்களின் பயன்பாடிட்காக வழங்கிவைகப்பட்டது.

இந்நிகழ்வில், அதிதியாக ஹட்டன் கல்வி வலயத்தின் பணிப்பாளர் திருமதி. எ.சத்தியேந்ரா,ஐஆர்டீ நிறுவன திட்ட பணிப்பாளர் திரு. கந்தையா விக்னேஸ்வரன், IMHO நிறுவனத்தின் பெருந்தோட்ட கல்விக்கான இணைப்பாளர் திரு. M.P. சந்ரசேகரன், IMHO நிறுவன உத்தியோகஸ்தர்கள், அயல் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் பாடசாலையின் பழைய மாணவர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

இந்த திறன் வகுப்பறை மூலமாக கவரவில தேசிய பாடசாலையில் கல்விபயில்கின்ற 570 மாணவர்கள் இன்றைய நவீன கற்கையினை தடையின்றி இந்த திறன் வகுப்பறையின் மூலம் கற்க முடியும் எனவும் இந்த திறன் வகுப்பறையினை சிறந்த முறையில் பயன்படுத்துவதன் மூலமாக தேசியரீதியிலான பொது பரீட்சைகளில் சிறந்த பெருபேறுகளை பெற வேண்டும் என ஹட்டன் கல்வி வலயத்தின் பணிப்பாளர் திருமதி. எ.சத்தியேந்ரா அவர்கள் தனது உரையில் தெரிவித்தார்.

மேலும் இந் நிகழ்வில் உரையாற்றிய பாடசாலை அதிபர் தனது பாடசாலைக்கு என்ன தேவை என்பதினை அறிந்து இவ்வாறான திறன் வகுப்பறையினை மாணவர்களின் கற்றல் தேவைக்காக வழங்கியது மிகவும் போற்றத்தக்கது எனவும் எதிர்கால நவீன உலகினை மாணவர்கள் திறன் வகுப்பறையினை பயன்படுத்தி வெற்றிக்கொள்ள வேண்டும் எனவும் திறன் வகுப்பறையினை வழங்கிய IMHO மற்றும் இரட்ணம் அறக்கட்டளை அமைப்புகளுக்கு நன்றியினை தெரிவிப்பதாக தனது உரையில் தெரிவித்தார்.

சில மாணவர்கள் இவ்வாறான திறன் வகுப்பறை இன்றைய நவீன கணினி மயமான கற்கைக்கு மிகவும் பயனுள்ளதாக அமைந்துள்ளதாகவும் இவ்வாறான திறன் வகுப்பறையினை தமது பாடசாலைக்கு வழங்கியமைக்கு IMHO மற்றும் இரட்ணம் அறக்கட்டளை அமைப்புகளுக்கு பாடசாலை சார்பாகவும் மாணவர்கள் சார்பாகவும் நன்றியினை தெரிவிப்பதாகவும் இந் திறன் பலகையினை பயன்படுத்தி எதிர்காலத்தில் சிறந்த பெறுபேறுகளை பாடசாலைக்கு பெற்றுத்தருவதகவும் தெரிவித்தனர்.





சினிமா

# டிசம்பர் 9ல் திரைக்கு வரும் வடிவேலுவின் நாய் சேகர் ரிட்டர்ன்ஸ்






நீண்ட இடைவெளிக்கு பிறகு வடிவேலு நாயகனாக நடித்துள்ள படம் "நாய் சேகர் ரிட்டர்ன்ஸ்". சுராஜ் இயக்கி உள்ள இந்த படத்தை லைகா நிறுவனம் தயாரித்து இருக்கிறது. வடிவேலுவுடன் ஷிவாங்கி, ஷிவானி நாராயணன், சஞ்சனா சிங், ஆனந்தராஜ், முனீஸ்காந்த், ரெடிங் கிங்ஸ்லி உள்பட பலர் நடிக்க, சந்தோஷ் நாராயணன் இசையமைத்திருக்கிறார். சமீபத்தில் இந்த படத்தில் வடிவேலு பாடிய அப்பத்தா என்ற பாடல் வெளியாகி ரசிகர்களின் வரவேற்பை பெற்றது. இந்த நிலையில் தற்போது நாய் சேகர் ரிட்டர்ன்ஸ் படம் டிசம்பர் மாதம் ஒன்பதாம் தேதி திரைக்கு வருவதாக அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளது லைகா நிறுவனம்.


# 7.5 கோடி பார்வைகளைக் கடந்தது "ரஞ்சிதமே" பாடல்



வாரிசு படத்தில் இடம்பெற்ற பாடல் யூடியூப்பில் இதுவரை 7.5 கோடி பார்வைகளைக் கடந்துள்ளது. வாரிசு படத்தில் இடம்பெற்ற "ரஞ்சிதமே" பாடல் யூடியூப்பில் இதுவரை 7.5 கோடி பார்வைகளைக் கடந்துள்ளது. பிரபல தெலுங்கு இயக்குநர் வம்சி இயக்கத்தில் "வாரிசு" என்கிற படத்தில் நடித்து வருகிறார் விஜய். ராஷ்மிகாமந்தனா கதாநாயகியாக நடிக்கிறார். இப்படத்துக்கு இசை - தமன். இந்த படம் 2023 பொங்கலுக்கு வெளியாகவுள்ளது.

சமீபத்தில் "வாரிசு" படத்தில் இடம்பெற்றுள்ள "ரஞ்சிதமே" பாடலின் லிரிக்கல் விடியோ வெளியாகி நல்ல வரவேற்பைப் பெற்று வருகிறது. இந்நிலையில், விஜய் பாடிய இப்பாடல் இதுவரை யூடியூப்பில் 7.5 கோடி பார்வைகளைக் கடந்து சாதனை படைத்து வருகிறது. இதனால், விஜய் ரசிகர்கள் உற்சாகத்தில் உள்ளனர்.

# கண்ணீர் அஞ்சலியும், அறிவித்தலும்



தோற்றம்:
16 - 12 - 1934

மறைவு:
25 - 11 - 2022

# திரு. சோமசேகரசுந்தரம் விஸ்வலிங்கம்

(முன்னாள் ஆசிரியர் புத்தூர் சோமஸ்கந்தக் கல்லூரி மற்றும் யாழ்ப்பாணம்,இந்துக் கல்லூரி)

யாழ்ப்பாணம் கோப்பாயைப் பிறப்பிடமாகவும், கந்தர்மடத்தை வாழ்விடமாகவும், நைஜீரியா, கனடா ஸ்காரோ ஆகிய இடங்களில் வசித்துவந்தவருமான திரு. சோமசேகரசுந்தரம் விஸ்வலிங்கம் அவர்கள் 25-11-2022வெள்ளிக்கிழமை அன்று ஸ்காபரோவில் இறைபதமடைந்தார்.

அன்னார் இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும், சிவானுஜாவின் அன்புத் தந்தையும், முரளிதரனின் அன்பு மருமகனும், ஓவியா, வீணாவின் அன்புத் தாத்தாவும் ஆவார்.

*அன்னாரின் பூதவுடல் 3280 Sheppard Ave. East என்னும் விலாசத்தில் அமைந்துள்ள Highland Funeral Home Scarborough Chapel ல் புதன்கிழமை 30-11-2022 அன்று மாலை 4:00 மணி தொடக்கம் 8.00 மணிவரை பார்வைக்கு வைக்கப்பட்டு, மறுநாள் வியாழக்கிழமை 01-12-2022 அன்று மதியம் 12:00 மணி தொடக்கம் பிற்பகல் 2:00 மணிவரை கிரியைகள் நடைபெற்று பின்னர், Highland Hills Memorial Garden ல் மாலை 3:00 மணி தொடக்கம் 3:30 வரை தகனம் செய்யப்பட்டது.*

அன்னை ஆதிபராசக்தியின் நீண்டகால தொண்டரும், பக்தரும் விசுவாசமான சக்தியுமான அன்னாரின் ஆன்மா சாந்திபெற அன்னையை பிரார்த்திக்கின்றோம்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

------------------------

நாஸ்டீன் வீதி ஆதிபராசக்தி குருமன்ற சக்திகள், ஸ்காபுறோ
(647) 436-9647

# ஆண்டுகள் எத்தனை கடந்தாலும் என்றும் எம் அருகினில் நீயிருப்பாய் பவானே!

சுருவில் ஐயனார் கோவிலடியைப் பிறப்பிடமாகவும், கனடாவில் வசித்து வந்தவருமான

## திரு. சத்தியபவான் சத்தியசீலன் (பவான்)

அவர்களின் 8ம் ஆண்டு நினைவாஞ்சலி.

(தமிழ்வண் தொலைக்காட்சி படப்பிடிப்பாளரும், தொழில்நுட்பக் கலைஞரும்)



**மண்ணில்:**
**29-02-1968**

**விண்ணில்:**
**03-12-2014**



*'ஐயுணர் வெய்தியக் கணணும் பயமின்றே*
*மெய்யுணர் வில்லா தவர்க்கு'*

உண்மையை உணரும் மெய்யறி வில்லாதவர்க்கு
ஐம்புலன்களால் பெற்ற அறிவினால் என்னபயன்...

---

எங்கள் மீது அளவு கடந்த
பாசத்தைப் பொழிந்தவனே
ஆண்டு எட்டு ஓடி மறைந்தாலும்
நினைவுகள் ஒருநாளும்
எம்மை விட்டு மறையாது
வைகுந்தா!!! வைகுந்தா
என்று அடிக்கடி கூறும் நீ
வைகுந்தமே சென்று விட்டாய்!!

சுத்த வெள்ளைச் சேட்டும், சந்தனப்பொட்டும்
நிமிர்ந்த நடையுடைய ஆண் அழகன்
எந்நேரமும் எம்முன் உன் உருவம்
கனவில் உன்னை காண்கின்றோம்
கண்டவுடன் களிப்படைகின்றோம்...
உன் நாமத்தை உச்சரிக்கின்றோம்
பொறுமையாய் உன் வாழ்வை மௌனித்ததால்
பூமித்தாயும், உன்தாயும் மௌனமாய்
உன்னை அழைத்தனரோ!

உயர்வான உன் உள்ளத்தால் சீருடனும் சிற-
ப்புடனும் சென்றாயோ

**என்றும் உன் நினைவோடு வாழும்**
**குடும்பத்தினர்**



# 'வாழைக்குலைச் சங்கம்', 'கடல்விளை அமுதம்', 'மைதானம்' 'வன்னியின் ஆவுடையூர்'

- எமது யாழ் செய்தியாளர் நடராசா லோகதயாளன்

இளைய தலைமுறையினர் பல்துறைகளில் புதுமைகளைச் செய்து புதிய தடங்களைப் பதித்து வருகின்றனர். அவர்களின் சிந்தனையோட்டம் நிகழ்காலத்தை சிறப்பாக சித்தரிப்பதுடன் எதிர்காலத்திற்கான புதிய பாதை மற்றும் அதற்கான வழிகளையும் காட்டுகிறது.

அவ்வகையில் ஆவணப் படங்கள் மூலம் அவர்கள் சமூகத்தில் நிலவும் பல அவலங்கள் மற்றும் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகளை வெளியுலகிற்கு எளிமையான ஆனால் அதே நேரம் காத்திரமாக வெளிக்கொண்டு வருகிறார்கள். அந்த இளைஞர்கள் பட்டாளத்திற்கு யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்களும் விதிவிலக்கல்ல.

அந்த பல்கலைக்கழக ஊடகக் கற்கைகள் துறை மாணவர்களால் தயாரிக்கப்பட்ட ஆவணப்படங்கள் நவம்பர் மாதம் 22ஆம் திகதி திரையிடப்பட்டன. கதிரவன் இளம் வெயிலை வீச, அமைதியான ஆரவாரமற்ற செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் திரையிடப்பட்டன. அந்த இளைஞர்களின் படைப்புகளைப் பார்க்கும் வாய்ப்பு எனக்கும் கிட்டியது.

பார்த்தேன் - பிரமித்தேன் என்று சொல்வதே யதார்த்தமாக இருக்கும். எமது மாணவர்களின் திறமை உலகத்தரம் வாய்ந்தது. கல்வியில் யாழ் மாணவர்கள் என்றும் சிறப்பு வாய்ந்தவர்கள் எமது மாணவர்கள் மீண்டும் நிரூபித்தனர். இந்த மாணவர்கள் ஊடக உலகில் சர்வதேச மட்டத்தில் பரிமளிப்பார்கள் என்பதில் எவ்விதமான ஐயப்படும் இருக்க முடியாது.

யாழ் பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற இந்த ஆவணப்பட விழாவில் சமூகத்தின் பல்வேறு விடயங்களைப் பற்றிப் பேசுகின்ற பதினான்கு ஆவணப்படங்கள் திரையிடப்பட்டன.

அவற்றுள் ஆனையிறவு உப்பளத்தின் தற்போதைய நிலை சொல்லும் "கடல்விளை அமுதம்", மலையகக் கிராமமொன்றின் விளையாட்டு மைதானத் தேவையைப் பற்றிப் பேசும் "மைதானம்", நீர்வேலி வாழை உற்பத்தியாளர் கூட்டுறவுச்சங்கத்தின் செயற்பாடுகள் பற்றி பேசும் "வாழைக்குலைச் சங்கம்", சூழல் மாசடைவதை ஏதோ ஒரு வகையில் குறைக்கும் வண்ணம் பழமையை வழமைக்குக் கொண்டுவரும் சிறிய முயற்சி பற்றிப் பேசும் "மிதியுந்து", சிற்பக்கலையில் அருகி வரும் உளிப்பயன்பாடு மற்றும் அதிகரித்து வரும் இயந்திரங்களின் பயன்பாடு பற்றிப் பேசும் "உளி தொடாக்கலை", வழக்கொழிந்து போயிருக்கும் சூத்திரக் கிணறு நீர்ப்பாசன முறை பற்றிப் பேசும் "அழிவடைந்து போன பழமை", ஆழக்கடலின் ஆபத்து அறியாது அதில் நீராடச்சென்று மரணித்துப்போன மூன்று சகோதரர்களின் கதை சொல்லும் "செம்மலையின் கண்ணீர்", மரபு ரீதியான கால்நடை வளர்ப்பு மூலமான தற்கால தன்னிறைவுப் பொருளாதாரம் நோக்கிய நகர்வு பற்றிப் பேசும் "வன்னியின் ஆவுடையூர்", நீடித்த வனையுடனான பலவர்ண "பற்றிக்" உள்ளூர் உற்பத்தி பற்றிப் பேசும் "வானவில்", நந்திக்கடல் மீன்பிடியின் தற்போதைய நிலை பற்றிப் பேசும் "நந்திக்கடல் மீன்பிடி", மலையகப் பெண்கள் நாளாந்தம் எதிர்கொள்ளும் வாழ்வியல் சிக்கல்களைச் சொல்லும் "அம்மா", வரலாற்றுச் சின்னங்களில் ஒன்றாக இருந்து இன்று சிதைவடைந்திருக்கும் கீரிமலை வெளவால் புறாக்குகையின் கதைசொல்லும் "மறைந்திருக்கும் தொன்மம்", மாற்றுத்திறனாளிக் கலைஞர் ஒருவரின் கலைத்துறைப் பயணம் பற்றிப் பேசும் "இருளொளி", தமிழர்களின் பாரம்பரிய இயந்திரப் பொறிமுறை பற்றிப் பேசும் "தூய மரச்செக்கு எண்ணெய்" ஆகிய ஆவணப்படங்கள் திரையிடப்பட்டன.

இதன்போது யாழ் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், மாணவர்கள், திரைப்பட துறைசார் வல்லுநர்கள் என பலர் கலந்துகொண்டு அவற்றை திறனாய்வு செய்தனர்.

இந்த ஆவணப் படங்கள் 5-10 நிமிடங்கள் நேரம் ஓடக் கூடியவை.



அவ்வகையில் வெளியிடப்பட்ட 10 நிமிட ஆவணப் படங்களில் ஆனையிறவு உப்பளத்தின் தற்போதைய நிலை சொல்லும் "கடல்விளை அமுதம்" பலரின் வரவேற்பை பெற்றதனைக் காணக்கூடியதாக இருந்தது.

"கடல்விளை அமுதம்" ஆவணப் படத்தை உருவாக்கியவர் சுன்னகத்தைச் சேர்ந்த மாணவி பி.சிறீவித்தியா. பலரின் பாராட்டு பெற்ற அவரது படைப்பு குறித்து கனடா உதயனுக்காக அவரிடம் பேசினேன்.

"தற்போது 200றக்கும் குறைவானோர் அங்கு பணியாற்றினாலும் முன்பு 5,000 பேர் வரையில் பணியாற்றிய இடத்தினை தேர்வு செய்தபோது யாழில் வளங்கள் மிக குறைவாகக் காணப்படும் நிலையில் இனம் காணக்கூடிய வளமாக அதாவது அனைத்துப் பக்கமும் கடல் இருப்பதனால் அதனைத் தேர்வு செய்தேன்" எனத் தெரிவித்த மாணவி சிறீவித்தியா போதைப் பொருள் ஒழிப்பு தொடர்பான குறும்படத் தயாரிப்பு போட்டியில் பரிசையும் வென்ற மாணவியாவார்.

இந்த ஆவணப்படம் 25 ஆயிரம் ரூபா செலவில் தயாரிக்கப்பட்டதாகவும் தெரிவித்ததோடு இதனைத் தொடர்ந்து பல ஆவணப்படங்களை ஆய்வு மூலமும் வெளியிட வேண்டும் என்பதே விருப்பமாகவுள்ளது எனவும் அந்த "அய்யர்" வீடுப் பெண் கூறினார்.

இதேநேரம் ஆழகடலின் ஆபத்து அறியாது அதில் நீராடச்சென்று மரணித்துப்போன மூன்று சகோதரர்களின் கதை சொல்லும் "செம்மலையின் கண்ணீர்" கதையைத் தயாரித்து ஆவணப்படுத்திய கல்கி ஜெகநாதன் என்னும் முள்ளியவளையைச் சேர்ந்த மாணவியிடமும் பேச்சுக் கொடுத்தேன்.

"இந்த கதை தனது மனதை பாதித்த காரணத்தினால் தேர்வு செய்ததாகவும் அதேநேரம் இது எதிர்கால இளைஞர்களிற்கு விழிப்புணர்வு ஏற்படும் வகையில் இருக்கும் என்று கருதியே இந்த விடயத்தை தேர்வு செய்தேன் என்றார். மேலும் இதே போன்று விழிப்புணர்வு ஆவணங்கள் தயார் செய்வதை எதிர்பார்க்கின்றேன். ஆனால் அதற்கான ஒத்துழைப்புக்களே முக்கியமானது" என்றார்.




பலரின் கவனத்தை வெகுவாக ஈர்த்த நீர்வேலி வாழை உற்பத்தியாளர் கூட்டுறவுச்சங்கத்தின் செயற்பாடுகள் பற்றிப் பேசும் "வாழைக்குலைச் சங்கம்", என்னும் ஆவணத்தை உருவாக்கிய பி.துலக்ஷா தனது படைப்பிற்கு கிடைத்த வரவேற்பில் மகிழ்ந்தார்.

"எனது பல்வேறு தேவைக்குச் சென்று வந்த சமயம் இதை கண்ணுற்றேன். இதிலிருந்த தனித்துவம் கருதி இதனை ஆவணமாக்க எண்ணி 3 வார கால முயற்சியில் இதனை உருவாக்கினேன். இதனையே தொடர்ந்தும் செய்ய விரும்பினாலும் கற்றல் காலத்தில் இலங்கையிலேயே உள்ள ஒரேயொரு வாழைக்குலை உற்பத்தி சங்கத்தின் கதையை ஆவணப்படுத்தினோம்".

இது ஒரு புறம் எனில் ஆவணப்படத்தைத் தயாரிக்க நண்பரின் கமராவும் ஒரு மடிக் கணினியின் உதவியுடன் மட்டுமே மேற்கொண்டதாகவும் அந்த வாய்ப்புகளைப் பெற பொருளாதார நெருக்கடி இடமளிக்கவில்லை என்றும் தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தினார் துலக்ஷா.

போரின் பின்னர் மாணவர்களின் முயற்சியில் வெளியான கதையில் மலையகத்தின் அவலங்களை அல்லது தேவைகளை எடுத்துக்கூற முனையும் 3 கதைகளில் "மைதானம்" திறமையாகத் தயார் செய்யப்பட்டுள்ள போதிலும் மிகத் தரமான தலைப்பின் கதையை மேலும் சிறப்பாக வெளிப்படுத்த முடியாமல் போய் விட்டது. தமது சமூகப் பொருளாதார நெருக்கடி காரணமாக அந்த ஆவணத்தை மேலும் சிறப்பாக எடுக்க முடியாமல் போயிற்று என்று அதை உருவாக்கியவர் வருந்தினார்.

அரங்கில் இருந்த பலரின் கவனத்தை வாழைக்குலைச் சங்கம் வெகுவாக ஈர்த்ததை அவதானிக்க முடிந்தது. நாட்டில் "ஒன்றே ஒன்று கண்ணே கண்ணு" என்று சவால்களுக்கு இடையே செயற்படும் அந்த கூட்டுறவுச் சங்கத்தின் கதை ஆவணப்படுத்தப்பட்டிருந்த விதம் தரமாகவும் பாராட்டும்படியும் இருந்தன. அதில் ஒரு தனித்துவம் இருந்ததை உணர முடிந்தது.

இதிலே அனைத்தும் மாறுபட்ட எண்ணமும் வேறுபட்ட கதைகளாக இருந்தபோதும் மூன்று இடங்களினது கதைகளைக் கருத்திட்ட மூன்று மாணவர்களை இங்கே இணைத்துள்ளோம்.

மாணவர்களின் ஆவணப் படங்கள் வெளியீடு தொடர்பில் ஊடக கற்கைத்துறை பேராசிரியரான ரகுராமுடன் உரையாடி அவரது எண்ணவோட்டங்கள் மற்றும் கருத்தை அறிந்தேன்.

"மாணவர்களின் முயற்சிக்கு மட்டுமே நாம் வழிகாட்டியாக இருந்தோமே அன்றி அவர்களின் உருவாக்கம், கதை தேர்வு அத்தனையும் மாணவர்களிற்கே உரியது. அத்தோடு இந்த ஆவணப்படங்கள் வெறுமனே தரத்தை மட்டும் கருதியிருந்தால் முன்கூட்டியே பரிசீலித்து உணர்வுகளிற்கு முன்னுரிமை அளித்திருக்க முடியும். ஆனால் மாணவர்களின் வளர்ச்சியை சுய ஊக்கத்தையும் கருதியதனால் எந்தவொரு மாணவர்களின் முயற்சியிலும் எமது பங்கு இருக்கவில்லை" என்றார்.



கடந்த காலத்தில் இதேபோன்று உருவாக்கிய ஆவணப் படத்தில் 2016 உருவாக்கிய யாழ் சர்வதேச திரைப்பட விராவில் சிறந்த அறிமுக திரைப்படத்திற்கான விருதை தமது மாணவரான திருச்செல்வம் திவாகர் பெற்றுக்கொண்டார் எனவும் பேராசிரியர் ரகுராம் தெரிவித்தார்.

பண்டாரநாயக்க ஞாபகார்த்த மண்டபத்தில் காட்சிப்படுத்திய பிறைநிலா கிருஸ்ணராயாவின் "நாங்களும் இருக்கிறம்" கதை பெரும் வரவேற்பைப் பெற்றது. இதனைச் சர்வதேச திரைப்பட விழாவிற்குக் கொண்டு செல்ல முயற்சிக்கப்படுகின்றது எனவும் அவர் மேலும் பகிர்ந்து கொண்டார்.

"இவ்வாவணப் படங்களின் காட்சிப்படுத்தில் இடம்பெற்ற 14 ஆவணப்படங்களில் 12ஐ தயாரித்தவர்கள் பெண்கள் என்பது அவர்கள் அனைத்து துறைகளிலும் சீரிய வகையில் சிறப்பாக முன்னேறி வருவதை பறைசாற்றுவதாக இருந்தது. இதேநேரம் இந்த மாணவர்களிற்கு தற்போது தேவையாக இருப்பது அவர்கள் உருவாக்கிய ஆவணப் படங்களைக் காட்சிப் படுத்தும் காட்சிக்கூட வசதிகளே ஆகும்" என்றார்.

யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் தமது படைப்பாற்றலை தமது பொருளாதார சக்திக்கு உட்பட்டு காட்சிப்படுத்தியுள்ளது வரவேற்கத்தக்கது என்றாலும், அவர்களின் ஆழ்மனதிலுள்ள ஏக்கங்களையும் என்னால் உணர முடிந்தது. போருக்குப் பின்னரான காலத்தில் தமிழ்ச் சமூகம் தொடர்ந்து பாரிய நெருக்கடிகளைச் சந்திக்கிறது என்பதை அவர்களின் படைப்புகள் எடுத்துக்காட்டுவதாகவே உள்ளன.

இந்த மாதிரியான ஆவணப்படுத்தலை வெளிநாடுகளிலும் காட்சிப் காட்சிப்படுத்த விருப்பினாலும் அதற்கான சந்தர்ப்பம் இந்த மாணவர்களுக்கு கிடைப்பதில்லை.



புலம் பெயர்ந்த தமிழர்கள் குறிப்பாகக் கனடா, பிரித்தானியா, பிரான்ஸ், அவுஸ்திரேலியா போன்ற நாடுகளில் வாழ்பவர்கள் இந்த மாணவர்களுக்குப் பொருளாதார உதவிகளை "ஸ்கொலர்ஷிப்" வாயிலாக அளித்தால் அது அவர்களுக்கு ஊக்கத்தையும் மேலும் படைப்பு ஆக்கத்தையும் அளிக்கும்.

உதயன் வாசகர்கள் இவர்களைப் போன்ற படைப்பாளிகளை ஊக்குவித்து தாயகத்தில் நிலவும் பிரச்சனைகள், தேவைகள், நெருக்கடிகள் போன்றவைகளை மேலும் சிறந்த படைப்புகள் மூலம் வெளிக்கொண்டு வந்து பாரிய பங்களிப்பை அளிப்பார்கள் என்கிற நம்பிக்கை பலரின் மனதிலும் உள்ளது.

# மாவட்டசபை நோக்கிய அதிகாரப்பகிர்வு?



வி.தேவராஜ்
மூத்த ஊடகவியலாளர்

• டிசம்பர் 31க்குள் 13ஐ முழுமையாக அமுல்படுத்தி நல்லெண்ண சமிக்ஞையைக் காட்டட்டும்.

• தமிழர்தரப்பில் நிபுணத்துவக் குழுவும்உள்வாங்கப்பட வேண்டும்.

இன விவகாரத் தீர்வுக்கான பேச்சு வார்த்தை "தேனீர் விருந்து தேனிலவாக" மீண்டும் மாறிவிடக் கூடாது என எதிர்பார்த்தவர்கள் பலர். துரதிஸ்டவசமாக பேச்சுவார்த்தை ஆரம்பிப்பதற்கு முன்பே விவாகரத்தை நோக்கி பயணிக்கத் தொடங்கிவிட்டது.

இது எதிர்பார்த்ததொன்றே. தமிழரசுக்கட்சியும் ஜனாதிபதி ரணில் விகரமசிங்கவும் ஏற்படுத்திய அரசியல் நாடகம் இவ்வளவு வேகமாக பிசுபிசுத்துப் போகும் என அவர்கள் எதிர்பார்த்திருக்கமாட்டார்கள் என கூறுவதற்கில்லை.

• 13க்கு சமாதிகட்டும் இலங்கையின் நகர்வு

இந்தியாவுக்கான இலங்கைத் தூதுவர் மிலிந்த மொரகொட அவர்கள் 1987 இல் செய்து கொள்ளப்பட்ட இலங்கை - இந்திய உடன்படிக்கைக்கு அப்பால் இன்றைய கள நிலவரத்திற்கேற்ப புதிய உடன்படிக்கை அவசியம் என ஏற்கனவே இந்திய ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளார். இந்தப் புதிய உடன்படிக்கை 13வது திருத்தத்திற்கு சமாதிகட்டி எழுதப்படப் போகும் புதிய உடன்படிக்கையாகும். அதனையே இலங்கை எதிர்பார்க்கின்றது.

அதாவது இந்தியாவின் பிடியில் இருந்து இலங்கையை மீட்டெடுக்கும் ஒரு உபாயமாகும். 1987 இலங்கை இந்திய உடன்படிக்கை 13வது சட்ட திருத்தம் என்பன தமிழர் விவகாரத்தை மையமாகக் கொண்டு இந்தியா இலங்கையில் தலையீடு செய்கின்றது. 1987 ஒப்பந்தத்திற்கு அப்பால் சென்றுவிட்டால் இந்தத் தலையீடு இருக்காது என்பது இலங்கையின் எதிர்பார்ப்பு.

• மாவட்ட அபிவிருத்தி சபை நோக்கி சிங்களத் தரப்பு

இந்த ஒரு பின்னணியிலேயே ஜனாதிபதி வடக்கு தமிழ்க் கட்சிகளுக்கு அழைப்புவிடுத்த அதேவேளையில் தற்போது மாவட்ட அபிவிருத்தி சபைகளை மீண்டும் அறிமுகப்படுத்த தயாரென அறிவித்துள்ளார். அதாவது மாகாண சபை முறைமையில் இருந்து கீழிறங்கி மாவட்ட அபிவிருத்தி சபை நோக்கி அதிகாரப்பரவலாக்களை ஜனாதிபதி நகர்த்த முற்படுகின்றார். 1981இல் அறிமுகப்படுத்தப்பட்டு தோல்விகண்ட மாவட்ட அபிவிருத்தி சபைக்கு புத்துயிர் அளிக்க ஜளாதிபதி வரலாற்றில் பின்னோக்கி பயணிக்க முயல்கின்றார்.

• முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்மொழிவு

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மாவட்ட சபையை அமைக்க நாடாளுமன்றத்தில் முன்மொழிந்தபோதே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இதனைத் தெரிவித்துள்ளார்.

"இது நல்லது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் உள்ள நாங்கள் இதற்கு முழுமையாக ஆதரவளிப்போம்" என்று நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபாலசிறிசேனபதிலளித்துள்ளார்.

• பந்துகள் வழங்கிய கதை

உதை பந்தாட்ட விளையாட்டில் அணைத்து வீரர்களுக்கும் பந்து வழங்கிய கதையாக தற்போது ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க முன்னாள் மைத்திரிபால சிறிசேனவின் முன்மொழிவை ஆமோதித்துப் பேசுகின்றார்.

• கூட்டமைப்பு வரவு செலவுத் திட்டத்திற்கு வாக்களிக்க முடிவு

இன விவகாரத்துக்கான தீர்வுகுறித்த அழைப்பு விடுத்தமையினால் வரவு செலவுத் திட்டத்திற்கு வாக்களிக்க முடிவு செய்துள்ளதாக ஜனாதிபதி சட்டத்தரணியும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ. சுமந்திரன் நாடாளுமன்றில் குறிப்பிட்டுள்ளார்.

இவ்விடயத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மேற் கூறிய நிலைப்பாடு ஆச்சரியத்துக்குரியதல்ல. கடந்த காலங்களில் இவ்வாறான பல சம்பவங்களை தமிழ் மக்கள் கண்டுள்ளனர்.

மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்தபோது பல சுற்றுப் பேச்சு வார்த்தைகளை கூட்டமைப்பு நடத்தியது. பேச்சுவார்த்தைகள் சுமுகமாக நடைபெறுவதாக அடிக்கடி செய்திகளும் வெளிவந்தன. இந்தப் பேச்சு வார்த்தையின்போது கிராம சபைகளுக்கு மேல் அதிகாரப்பரவலாக்கள் இல்லை என்ற நிலைப்பாட்டை அரசதரப்பு தெளிவாகக் கூறியிருந்த நிலையிலும் தொடர்ந்தும் கூட்டமைப்பு பேச்சுவார்த்தையில் கலந்து கொண்டதாக அவ்வேளையில் செய்திகள் வெளிவந்தன.

ஆனால் பேச்சு வார்த்தை வெற்றிகரமாக பல சுற்றுக்களைக் கடந்தது. இறுதியில் பேச்சு வார்த்தை ஒரு அங்குலம்தானும் நகரவில்லை என கூட்டமைப்பின் சார்பில் தெரிவிக்கப்பட்டது.

இவ்வாறு கூட்டமைப்பு தமிழ் மக்களுக்கு நம்பிக்கையூட்டுவதாக நகர்வுகளை மேற் கொள்வதும் பிறகு ஏமாற்றுவதும் வழமை. அதேபோல் தற்போது பேச்சுவார்த்தைக்கு அழைத்த ரணில் விக்ரமசிங்க மற்றும் சிங்களத்தரப்புகள் மாகாண சபை முறைமையில் இருந்து மாவட்ட அபிவிருத்திசபைக்கு வழிகாட்டி நிற்கின்றனர்.

• ஆளும் தரப்புக்கு தமிழர் தரப்புடனான பேச்சு வார்த்தை தேவை

தற்போதைக்கு சிங்கள ஆளும் தரப்புக்கு தமிழர் தரப்புடனான பேச்சு வார்த்தை தேவை. ரோவின் தலைவருடனான பேச்சு வார்த்தையின்போது இது பேசு பொருளாக அரசதரப்பில் முன்வைக்கப்பட்டுள்ளது.

• இன விவகாரத் தீர்வு நோக்கிய பயணத்தில்

* 1990 களில் மங்கள மூனசிங்க குழு அறிக்கை.
* 2000 ஆம் ஆண்டின் சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க அரசியலமைப்பு வரைவு.
* 2006 ஆம் ஆண்டு மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தின் கீழ் நியமிக்கப்பட்ட பல இன நிபுணர் குழுவொன்றுநடைமுறைப்படுத்தப்பட்ட அறிக்கையை சமர்பிக்கவில்லை.
* அனைத்து கட்சிப் பிரதிநிதிகள் குழு (APRC,) அறிக்கை. 2010 அரசாங்கத்தால் கிடப்பில் போடப்பட்டது.
* 2015 இல் ஏற்பட்ட ஆட்சி மாற்றத்துடன் செயல்முறைக்கு புத்துயிர் அளிக்க முயன்றது.
* 2016 இல் ஒரு புதிய அரசியலமைப்பை உருவாக்குவதற்காக ஒரு அரசியலமைப்பு சபை உருவாக்கப்பட்டது என அணைத்துமே ஆரவாரத்துடன்தான் ஆரம்பித்தன.

ஆனால் இறுதியில் இவை அணைத்தும் புஸ்வானமாகியதுதான் கதை.

• நூலகத்தில் ஆவணப்படுத்தவே அறிக்கைகள்!

இந்த அறிக்கைகள்குறித்து ராஜபக்ஷ அரசாங்கத்தின் காலத்தில் தமிழ்நாடாளுமன்ற உறுப்பினர் கேள்வி எழுப்பியபோது அரசதரப்பில் இருந்து "அந்த அறிக்கைகள் நூலகத்தில் ஆவணப்படுத்தி வைப்பதற்கானவை" என பதில் அளித்தார்.

• ஏனவே பேச்சு வார்த்தை நடைபெறுவதாயின் அது வெளிப்படைத் தன்மையுடன் நடத்தப்பட வேண்டும். பேச்சு வார்த்தையின் போக்கு முடிவுகள் பகிரங்கப்படுத்தப்பட வேண்டும்.

• கூட்டமைப்பு மற்றும் தமிழ்த் தலைமைகளுடன் நிபுணத்துவம் கொண்ட தமிழ் புத்திஜீவிகளும் பேச்சு வார்த்தைகளில் இணைத்துக் கொள்ளப்பட வேண்டும். இந்த எண்ணிக்கை சம அளவில் இருக்க வேண்டும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வரவு செலவுத் திட்டத்திற்கு வாக்களித்தாலும் வெற்றி பெறும். வாக்களிக்காவிட்டாலும் வெற்றி பெறும். ஆனால் அரச தரப்பைப் பொருத்து "கூட்டமைப்பும் ஆதரவு" என்ற பட்டயம் வேண்டும் அவ்வளவுதான்.

• சிங்கள இராஜதந்திரம் பதுங்குவது பாய்வதற்கே.

• தமிழர்களை அழிப்பதற்கு எந்தப் பேயுடனும் கூட்டுச் சேர சிங்களத் தரப்பு தயங்காது.

• 2030க்குள் தாயகக் கோட்பாட்டை தகர்த்துவிடுவதே திட்டம்.

• தென்னிலங்கை மக்களின் நியாயமான கோரிக்கைக்கே பயங்கரவாத முத்திரை குத்தி இரும்புக் கரம் கொண்டு அடக்கும் ஆளும் வர்க்கம் இன விவகாரத்துக்கு டிசம்பர் 31க்குள் தீர்வு கண்டுவிடுவார்களா என்பதுகுறித்து இவர்களது நல்லெண்ண சமிக்ஞைகளுக்காக அரசியல்வாதிகள்போல் ஜோசியர்களிடம் போகத் தேவையில்லை.

• ஏனெனில் கடந்தகாலங்களில் இனவிவகாரத் தீர்வுகுறித்த நகர்வுகளில் இவர்கள் வெளிப்படுத்திய நல்லெண்ண சமிக்ஞைகள் உத்தரவாதங்கள் வாக்குறுதிகள் என அணைத்துமே இலவம் பஞ்சைப்போல் ஊதித் தள்ளப்பட்ட வரலாற்றுச் சம்பவங்கள் நிறைந்து கிடக்கின்றன.

• இவர்களால் ஏமாற்றப்பட்டவர்கள் தமிழர் மாத்திரமல்ல இந்தியா மற்றும் சர்வதேசமும்தான்.

• எனவே டிசம்பர் 31க்குள் 13ஐ முழுமையாக அமல்படுத்தி சிங்கள ஆளும் வர்க்கம் நல்லெண்ண சமிக்ஞையைக் காட்டட்டும்.

Email : vathevaraj@gmail.com

ஒரு கோப்பை
கொஞ்சம் ☕ தேநீர் - 292
***** ***** ***** *****

கவிஞர் தியாரூ

தென்றலெனும் தேரேறித்
தேன்தமிழாள் வருகின்றாள்!
பொன்மலர்கள் பூத்தாற்போல்
பூங்கவிகள் தருகின்றாள்!
என்னுள்ளம் கொண்டாட
என்னோடு இணைகின்றாள்!
என்றென்றும் எழில்நங்கை
என்பாட்டில் நனைகின்றாள்!

செந்தமிழை எண்ணுகையில்
சித்தமெலாம் தித்திக்கும்!
எந்தமிழின் பாடல்கள்
எதிரொலிக்கும் எத்திக்கும்!
விந்தைபுரி மாகவிஞன்
வளர்புகழின் சீர்கவிஞன்
இந்நாளில் வாழ்த்துகின்றான்;
இனியோரே வாழியவே!





# றொறன்ரோவில் விவசாய, மின் அலங்காரக் கண்காட்சிகள்

- குரு அரவிந்தன்

**ச**மீபத்தில் றொறன்ரோவில் உள்ள எக்ஸ ிபிஷன் பிளேஸில் விவசாயக் கண்காட்சியும், மிஸ சாகா 7174 டெரிகிறிஸ்ட் ட்ரைவில் மின்விளக்கு அலங்காரக் காட்சியும், வெவ்வேறு இடங்களில் நடைபெற்றன. குடும்பமாகச் சென்று பொழுது போக்குவதற்கு ஏற்ற இடமாக இந்த இடங்கள் இருந்தன. இதில் மாலை 6 மணிக்குத் தொடங்கி டெரிகிறிஸ்ட் ட்ரைவில் நடக்கும் மின்விளக்கு அலங்காரக் காட்சி 2023 ஜனவரி மாதம் வரையும் நீடிக்கும் என்று அறிவித்திருந்தார்கள். விவசாயக் கண்காட்சி ஒவ்வொரு வருடமும் நவெம்பர் மாதத்தில் 2 வாரங்களுக்கு நடைபெறுவதாக அறிவித்தார்கள். இந்த இரண்டு காட்சிகளுமே பிள்ளைகளுக்கு ஏற்றதாக, அவர்கள் பார்த்து மகிழக்கூடியதாக அமைந்திருந்தது மட்டுமல்ல, பிள்ளைகள் அறிந்து கொள்ள வேண்டிய பல விடயங்களும் இவற்றில் அடங்கி இருப்பதைக் காணமுடிந்தது.

முதலாவதாக விவசாயக் கண்காட்சியை எடுத்துக் கொள்வோம். ஒன்ராறியோவின் பல பாகங்களில் இருந்தும் விவசாயிகள் வந்து கலந்து கொண்டார்கள். உள்ளகக் கண்காட்சி என்பதால் குளிருக்குப் பாதுகாப்பாக இருந்தது. விவசாயப் பொருட்களும், விவசாயத்திற்கு உதவும் பொருட்களும் மற்றும் உயிருள்ள பண்ணை மிருகங்கள், பறவைகளும் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. இங்குள்ள பழங்குடி மக்களும், பல வருடங்களுக்கு முன் இங்கு வந்து குடியேறிய அனேகமான குடும்பங்களும் விவசாயத்தில்தான் ஈடுபட்டார்கள். அதனால் அவர்களின் பரம்பரையினர் பலர் குடும்பத்தோடு அங்கு வந்து போட்டிகளிலும் கலந்து கொண்டு சிறப்பித்ததைக் காணமுடிந்தது.

மாடுகள், ஆடுகள், குதிரைகள், செம்மறிகள், பன்றிகள், நாய்கள், வாத்துக்கள், கோழி வகைகள், முயல்கள், கினிக்கோழிகள் போன்றவைகளும் காட்சிக்கும், விற்பனைக்கும் வைக்கப்பட்டிருந்தன. மாடுகளில் இருந்து எப்படிப் பால் கறப்பது போன்ற செய்கை முறைகளும் செய்து காட்டினார்கள். விவசாயிகளின் பாரம்பரிய உணவு வகைகளும் விற்பனைக்கு இருந்தன. குறிப்பாக மேபிள்சிறெப், தேன், தயிர், வெண்ணெய் மற்றும், அரிசி, சோளம், மாவகைகள், உருளைக்கிழங்கு உணவுகள், அப்பிள் உணவுகள், மரக்கறிகள், கிராமத்து மருத்துவ இயற்கைத் தாவரவகைகள் போன்றவைகளும் இருந்தன. பூசணிக் கொடி வளர்க்கும் போட்டியில் பரிசு பெற்ற பூசணிக்காய்களும் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. பரிசு பெற்ற மொத்தம் ஐந்து பூசணிக்காய்களும் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. இதில் முதல் பரிசு பெற்ற பூசணிக்காய் 1634.2 இறாத்தல் நிறையுள்ளதாக இருந்தது. நோமன் கைய்லி என்ற ஒன்ராறியோ விவசாயிக்கு இந்தப் பரிசு கிடைத்தது. உலகிலே அதிக நிறைகொண்ட பரிசு பெற்ற பூசணிக்காய் 2,702 இறாத்தல் நிறையுள்ள இத்தாலியில் விளைந்த பூசணிக்காயாகும்.

தினமும் நாங்கள் உண்ணும் உணவு வீடு தேடிவருவதற்கு இந்த விவசாயிகள் வியர்வை சிந்துவதுதான் காரணம் என்பதை மறந்து விடாதீர்கள். மனிதன் வாழ்வதற்குத் தேவையான முக்கியமான பொருட்களில் உணவும் ஒன்று. அவர்கள் வெய்யில், மழை மட்டுமல்ல, இங்கே பனிக்குளிரில் நின்று பாடுபடாவிட்டால் எங்களுக்கு உணவு கிடைக்காது. குழந்தைகளுக்கு ஊட்டச்சத்தான பசுப்பால் கிடைக்காது. ஆனாலும் அவர்கள் தங்கள் கஷ்டத்தை எடுத்துச் சொல்லவில்லை, எங்கள் மண்ணில் விளைந்ததைக் கொண்டு வந்திருக்கின்றோம், வந்து பாருங்கள் என்றுதான் உங்களை அன்போடு அழைத்து அதைக் காட்சிப் படுத்தி இருக்கிறார்கள். இதை நாங்கள் மட்டுமல்ல, அடுத்த தலைமுறையினரும் புரிந்து கொள்ள வேண்டும். எனவேதான் உங்கள் குடும்பத்தை அழைத்துச் சென்று எங்களைச் சுற்றிவர என்ன நடக்கிறது என்பதை அவர்களுக்கும் தெரியப் படுத்துங்கள். இந்த நாட்டிற்கு எங்களை வரவேற்று, எங்களை இங்கே வாழவைப்பதற்கு அவர்களின் பங்களிப்பும் இருந்தது என்பதை மறந்து விடாதீர்கள். இந்த நிகழ்வுகளில் எம்மவர்களில் ஒருசிலரைத் தவிர வேறு எம்மவரின் முகங்களை நான் காணவேவில்லை. அடுத்த வருடமும் நவெம்பர் மாதம் இது போன்ற விவசாயக் கண்காட்சி நிகழ்வு நடக்க இருக்கின்றது.

அடுத்து நான் பார்த்தது மின்விளக்கு அலங்காரம். மின் விளக்குகளைக் கொண்டு எப்படி எல்லாம் அலங்காரம் செய்யலாம் என்பதை அங்கே சென்று பார்த்த போது, எனக்கு ஆச்சரியாக இருந்தது. பல இடங்களில் இது போன்ற சில மின்விளக்கு அலங்காரங்களைப் பார்த்திருந்தாலும், இது போன்று ஓரிடத்தில் எல்லாவற்றையும் நான் பார்த்ததில்லை. சின்ன வயதிலே வெசாக் பந்தல்களில் மின்விளக்குகளைப் பார்த்து வியந்திருக்கின்றேன், ஆனால் நவீன தொழில் நுட்ப வளர்ச்சியை இங்கே நேரடியாகக் காணமுடிந்தது. காட்சிப் பொருட்களை, கண்டங்களுக்கு ஏற்பப் பதின்நான்கு பிரிவுகளாகப் பிரித்திருக்கிறார்கள். அதிலும் ஆபிரிக்க மிருகங்கள், பாலைவன மிருகங்கள், பனிப்பிரதேச மிருகங்கள், டைனஸோக்கள், பெங்குவின்கள், திமிங்கிலங்கள், கலோவீன், கிறிஸ்மஸ், மற்றும் முக்கியமான நினைவுச் சின்னங்கள் என்று பலவிதமான பிரிவுகள் இங்கே இருக்கின்றன. பிள்ளைகள் மட்டுமல்ல, பெரியவர்களும் புரிந்து கொள்ளவேண்டிய பல விடயங்கள் இந்தக் கண்காட்சியில் இடம் பெற்றிருக்கின்றன.







சுமார் 600,000 ஆயிரம் சதுர அடிப்பரப்பில், அதாவது 10 உதைபந்தாட்ட மைதானமளவு இடத்தில் இந்த மின்விளக்கு அலங்காரம் காட்சிப் படுத்தப் பட்டிருக்கின்றது. இதற்காகச் சுமார் 20 மில்லியன் சிறிய எல்ஈடி மின் விளக்குகள் பாவிக்கப்பட்டிருக்கின்றன. சுமார் 40,000 மின்னலங்கார காட்சிப் பொருட்கள் இடம் பெற்றிருக்கின்றன. அனிமல் கிங்டம், கிட்ஸ் பரடைஸ், ரனல் ஆவ் லவ், பயங்கரமான சிலந்திகள், கவாலியா குதிரைகள், பனிபடர்ந்த துருவம், மந்திர விளக்குகள், டைனஸோக்கள் என்று சிறுவர், சிறுமியர் பார்த்து மகிழ்வதற்கான இடமாக மட்டுமல்ல, அறிவூட்டும் இடமாகவும் இதை மாற்றி இருக்கிறார்கள்.

மின் விளக்குக் காட்சி என்பதால் இருட்டும் போதுதான் ஆரம்பிக்கிறார்கள். பிள்ளைகளுக்கு ஏற்ற இடம் என்பதால், அக்கறை உள்ள பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை அழைத்து வந்து அவர்களுடன் பார்த்து, ரசித்து, குடும்பமாக நின்று புகைப்படங்களும் எடுத்து தாங்களும் மகிழும் காட்சிகளை அங்கே கண்டேன். குழந்தைகள் வளர்ந்ததும், தங்களை எங்கெல்லாம் அழைத்துச் சென்றீர்கள் என்று கட்டாயம் உங்களிடம் கேட்பார்கள், அப்பொழுது எடுத்துக் காட்ட இதுபோன்ற அரிய படங்கள் உங்களுக்கு மிகவும் உதவியாக இருக்கும். நாங்கள் யுத்தம் காரணமாக இது போன்ற ஆவணங்கள் எல்லாவற்றையும் இழந்திருந்தோம், அந்த வலியும், குறையும் உங்கள் குழந்தைகளும் ஏற்படாமல் பார்த்துக் கொள்ளுங்கள்.

"நான் பெற்ற இன்பம் பெறுக வையகமே" என்பது போல நான் பார்த்த, ரசித்த இடங்களை மற்றவர்களும் பார்க்க வேண்டும் என்பதற்காக இது போன்ற கட்டுரைகளை எழுதுகின்றேன். பிள்ளைகளுக்குப் பொது அறிவு முக்கியமானது மட்டுமல்ல, மகிழ்ச்சியான சூழ்நிலையிலும் அவர்கள் வளரவும் வேண்டும். அப்பொழுதுதான் அவர்கள் உடல், உள ஆரோக்கியமாக வளர்வார்கள். அவர்களின் அறிவை ஆரோக்கியமான முறையில் தூண்டுவதற்கு இதுபோன்ற கண்காட்சிகள் காரணியாக அமையலாம். அப்படி வளரும் பிள்ளைகள்தான் இந்த நாட்டின் சிறந்த பிரசைகளாக எதிர்காலத்தில் வரமுடியும். பொதுவாக இப்படியான இடங்களை நாங்கள் தான் பல மைல்கள் தேடிச் சென்றுதான் பார்க்க வேண்டும், ஆனால் அவர்களே உங்கள் வசதிக்காக இங்கே அருகே கொண்டு வந்திருக்கிறார்கள். எனவே உங்கள் பிள்ளைகளை அழைத்துச் சென்று இப்படியான நிகழ்வுகளைக் காட்டுங்கள். கிடைத்த சந்தர்ப்பத்தைத் தவறவிடாதீர்கள்!

## முக்கனியில் மாங்கனி
### (கலி வெண்பா)

------------------------------

கந்தையா வாத்திக் கறுத்தைக் கொழும்பனோ
சந்தைக்குப் போனதாய்ச் சாட்சி இருக்குதா?
செல்லையா வீட்டிலே செம்பாட்டு மாம்பழம்
சொல்லில் அடங்காச் சுவையைத் தருமே.!
விமலா வளர்த்த விலாட்டுக் கனிகள்
கமலா கணவனின் காவலில் தொங்கும்.
அருமை மகளது அம்பலவிக் காயின்
பெருமை அறிந்தே பெறுவர் பலரும்.
முருகதாஸ் அண்ணையின் முற்றிய பாண்டி
வருவோர் பலருமே வாங்கிச் சுவைத்தனர்.
செல்லன் தருகின்ற சேலம் பழத்தையே!
சொல்லி மகிழ்ந்தே சுவைபடத் தின்றோம்.
கொழும்பு வணிகரின் கொல்லைக் கிளிமா
பழுத்துக் குலுங்குதே பார்க்க அழகுடன்.
பிட்டுடன் மாங்கனி பின்னி அருந்தினால்
கட்டுடல் தந்தே களைப்பை அகற்றிடும்
முக்கனி என்பதில் முக்கியம் மாங்கனி
இக்கனி என்றே இயம்பு.

------------------------------

ஆக்கம்... கவிஞர் மார்க்கம் சந்திரன்
(416) 844-7453

# அளவிற்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சாகும்

- கலாநிதி முருகேசு கணேசமூர்த்தி & சிவா பரமேஸ்வரன்




வெள்ளை யானையை காலத்திற்கும் கட்டி தீனி போட முடியுமா?

அதற்கு முன்னதாக ஒரு சிறிய பாடலையும் அதற்கான பொருளையும் பார்ப்போம். சமாளிக்க முடியாத ஒரு பொருளைப் பரிசாகப் பெற்ற கவிஞரை அவரது மனைவி இடித்துரைப்பதை தமிழகத்தின் அந்தகக்கவி வீரராகவர் இப்படிப் பாடியுள்ளார்.

"இம்பர்வான் எல்லைரா மனையே பாடி
என்கொணர்ந்தாய் பாணாநீ?" என்றாள் பாணி!
"வம்பதாம் களபம்" என்றேன் "பூசும்" என்றாள்!
"மாதங்கம்" என்றேன்யாம் "வாழ்ந்தேம்" என்றாள்!
"பம்புசீர் வேழமெ"ன்றேன் "தின்னும்" என்றாள்!
"பகடெ"ன்றேன் "உழும்" என்றாள் பழனந்தன்னை!
"கம்பமா" என்றேன்"நற் களி"யாம் என்றாள்!
"கைம்மா" என்றேன் சும்மா கலங்கினாளே!"

இராமன் என்னும் செல்வந்தனைப் பாடி யானையைப் பரிசாகப் பெற்று வந்தான் பாணன். "அவனைப் பாடி "என்ன கொண்டு வந்தாய்?" என்று பாணனின் மனைவி பாணினி கேட்டாள். அதற்குப் பாணன் "களபம்" என்றான். "களபம்" என்பது சந்தனத்திற்கும் யானைக்குமான பொதுச்சொல். பாணினி சந்தனம் எனக் கருதி தனக்குப் பூசிவிடச் சொல்கிறாள்.

பாணினிக்குத் தெளிவாகப் புரியவைக்க "மாதங்கம்" என்றான் பாணன். "மாதங்கம்" என்பது யானைக்கு மற்றொரு பெயர். பாணினி மா தங்கம் எனப் பிரித்துத் தங்கக் குவியல் என எண்ணி "வாழ்க்கைக்குப் போதும்" என்றாள்.

குழப்பத்தைத் தீர்க்க எண்ணிய பாணன் தொடர்ந்து "பம்புசீர் வேழம்" என்றான். "வேழம்" என்றால் யானைக்கும் கரும்புக்கும் பொதுச்சொல். பாணினி அதனை "கரும்பு" என்று எண்ணி "உண்ணலாம்" என்றாள்.

பாணன் மீண்டும் தான் பெற்று வந்தது "பகடு" என்றான். பகடு என்பது யானைக்கும் உழுமாட்டிற்கும் பொதுச்சொல். பாணினி அதனை "உழுமாடு" எனக் கருதி "நிலத்தை உழலாம்" என்றாள்.



பாணினிக்குப் புரியவைத்துவிட வேண்டும் என எண்ணிய பாணன் "கம்பமா" என்றான். "கம்பம்" என்றால் கட்டுத்தறி. "கட்டுத்தறியில் கட்டக்கூடிய விலங்காகிய யானை" என்று அவன் கூறினான். அப்போதும் இவள் "கம்பு மாவு" எனக் கருதி அதனைக் கொண்டு களிசெய்து சாப்பிடலாம் என்றாள்.

இறுதியாகப் பாணன் "கையை உடைய விலங்கான யானை என்பதை "கைம்மா" என்றான். வீட்டிலிருந்து வெளியே வந்து பார்த்த பாணினி யானையைக் கண்டு அதிர்ச்சியுற்று இதற்கு யார் காலம் முழுவதும் தீனி போடுவது என்று கண்கலங்கினாள் என்று பொருள்படுவதாக அவர் சிந்திக்கும் வகையில் எழுதியுள்ளார்.

ஒரு யானையைக் கட்டி தீனி போடுவதே இவ்வளவு கடினம் என்றால் தேவைக்கு அதிகமான வெள்ளையானைகளைக் கட்டி தீனி போட அரசால் முடியுமா?

இலங்கையில் இடம் பெற்ற கொடிய யுத்தம் முடிவுற்று 13 வருடங்கள் கடந்துள்ள நிலையில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி மறுக்கப்பட்டு வருவது மட்டுமல்லாமல் யுத்தத்திற்கு என்று உருவாக்கப்பட்ட படையணி என்ற வெள்ளை யானையைத் தொடர்ந்து பந்தியில் கட்டி வருடாவருடம் தீனி போட்டுக் கொண்டு வருகிறது அரசு. யுத்தம் முடிவுற்றாலும் நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் என்ற ஒன்றும் பலம் வாய்ந்த டயஸ்போரா இயங்குவதாலும்- பலம் வாய்ந்த பாதுகாப்புக் கட்டமைப்பு இயங்குவது அவசியமானது என்று நியாயம் கற்பிக்கப்படுகிறது.

ஆனால், யுத்தம் முடிவுற்றகாலத்திற்கு பிறகான காலப்பகுதியில் பெரிதாக ஊதிப்பெருத்திருந்த இராணுவ ஆளணியில் தேவைக்கதிகமானவர்களின் சேவையை முன்கூட்டியே முடிவுறுத்தி கட்டாய ஓய்வுபெற அனுமதித்து படைகளின் எண்ணிக்கையை உடனடியாகக் குறைக்கலாமா என ஆலோசிக்கப்பட்ட போது, அவ்வாறு வெளியேறுவோர் மாற்று வாய்ப்புகள் அற்ற நிலையில் தாம் பெற்ற ஆயுதப் பயிற்சியை வைத்துக்கொண்டு சமூகரீதியில் தீய நடவடிக்கைகளில் ஈடுபடலாம் என்ற அச்சத்தினால் அது கைவிடப்பட்டு வழமையான வயதில் ஓய்வு பெறும் வரை காத்திருக்கலாமெனவும் சுயவிருப்பின் பெயரில் விலக விரும்புவோர் விலகலாமெனவும் முடிவானது.




இடைப்பட்ட காலப்பகுதியில் பாதுகாப்பு படைகள் பாதை அமைப்பு, கட்டட நிர்மாணத்துறை போன்ற துறைகளிலும் வடக்கு கிழக்கு பகுதிகளில் விவசாயப்பண்ணைகளை அமைத்து விவசாயம் செய்வது சுற்றுலாத்துறை விடுதிகளை அமைத்து உழைப்பது, பொதுமக்களுக்கு மரக்கறி விற்கும் நடவடிக்கைகள் ஆகியவற்றில் ஈடுபடுத்தப்பட்டனர்.

இவை எதுவுமே படையினர் செய்ய வேண்டிய வேலை அல்ல என்பதுடன் சிவிலியன்களின் உற்பத்தி நடவடிக்கைகளுடன் நேரடிப் போட்டியாகவும் இருந்தது. பாதுகாப்புத் துறையினர் செய்யும் உற்பத்திப்பொருட்களில் தயாரிப்புச் செலவு மிகவும் குறைவாக இருந்தமையால் தனியாரைவிடக் அவர்களால் பொருட்களை குறைந்த விலைக்கு விற்க முடிகிறது.



படையினரின் பணி நாட்டைப் பாதுகாப்பதா அல்லது காய்கறி விற்பதா?

ஆனால் தென்னிலங்கையில் சிவில் அமைப்புகள் இதற்கெதிராக போராடியபடியால் அங்கு சிவிலியன்களுக்குப் போட்டியாக இருந்த பாதுகாப்பு தரப்பினரின் பொருளாதார முயற்சிகள் பெருமளவுக்கு குறைந்தன. ஆனால், வடக்கில் அவை தொடர்ந்து இயங்குகின்றன. இது மட்டுமன்றி கப்பல்களுக்கு பாதுகாப்பு வழங்கவென்று உருவாக்கப்பட்ட அவன்கார்ட் விவகாரம் பின்னர் சர்ச்சையாக மாறியதும் தெரிந்ததே. அத்துடன் ஐ நா அமைதிகாக்கும் படையிலும் இணைந்து பணம் உழைக்கவும் ஈடுபாடு காட்டப்பட்டது. படையினருடன் நேரடியாகத் தொடர்புடைய கொழும்பு டொக்யார்ட் நிறுவனம் ஆழம் குறைந்த நீர்நிலைகளில் தாக்குதல் நடத்தவல்ல அரோ எனப்படும் (Arrow) சிறுபடகுகளை தயாரித்து ஏற்றுமதி செய்து அந்நியச் செலாவணி உழைக்கும் நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

எந்த ஒரு படைத்துறை அலுவலரிடமும் பாதுகாப்புத்துறையின் அளவு நாட்டுக்குச் சுமை என்று என்று கூறினால் உடனடியாக வரும் விடை "நாம் நாட்டுக்குச் சுமையல்ல நாம் நாட்டிற்குப் பணம் ஈட்டித்தருகிறோம். சிவிலியன்கள் பணமீட்ட உகந்த அமைதிச் சூழலையும் நாமே உருவாக்கித்தருகிறோம் ஆகவே பாதுகாப்புச் செலவினங்கள் நாட்டுக்குச் சுமையல்ல மாறாக அதை ஒரு முதலீடாகக் கருத வேண்டும்" என்பதாகும்.

நாட்டின் பாதுகாப்புச் செலவினங்களில் சுமார் 80% படைவீரர்களுக்கான ஊதியமாகும். இது அரசதுறை ஊழியர்களுக்கான மொத்த சம்பளங்களுக்கான செலவீட்டில் சுமார் 4 சதவீதமாகும். மொத்த அரச துறை ஊழியர்களின் எண்ணிக்கையாகிய 14.5 இலட்சம் பேரில் 3 இலட்சத்து 17 ஆயிரம் பேர் பாதுகாப்புத் தரப்பினராவர். நாட்டின் மொத்த சனத் தொகையில் இது 1.46 சதவீதமாகும். இஸ்ரேலுக்கு அடுத்தபடியாக (2%) மொத்த சனத்தொகையில் கூடுதலான பாதுகாப்புத் தரப்பைக் கொண்டுள்ள நாடு இலங்கை. ஆகவே இது ஒரு வெள்ளையானை என்பதி ஐயமில்லை.



புலிப்பூச்சாண்டி காட்டப்பட்டு நியாயம் கற்பிக்க முற்பட்டாலுங்கூட அல்லது அண்மையில் வரவு செலவுதிட்டத்தில் கூறப்பட்டது போல சர்வதேச வர்த்தகத்திற்கு பாதுகாப்பு வழங்க படைத்துறை செலவினங்களை அதிகரிப்பது அவசியம் என நியாயங்கற்பித்தாலும் இலங்கைக்கு உள்நாட்டிலோ வெளிநாட்டிலிருந்தோ பாதுகாப்பு அச்சுறுத்தல்கள் இல்லை என தனிப்பட்ட கலந்துரையாடல்களின் போது படைத்துறை சார்ந்தோர் ஒப்புக்கொள்கிறார்கள். அச்சுறுத்தல் இருப்பது போலக் காட்டிக் கொள்ள வேண்டிய தேவை பதவியில் உள்ள அரசாங்கங்களுக்கு அவசியம் உள்ளது. ஒரு புறம் நாட்டில் மிகப் பெரிய பூதமாக வளர்ந்துள்ள பாதுகாப்புத்துறையின் தயவு பதவிக்கு வருகிற ஆட்சியாளருக்கு கட்டாயம் தேவைப்படுகிறது. பாக்கிஸ்தான் போன்றதொரு தெற்காசிய நாடுகளில் இலங்கையில் இவ்வாண்டின் ஆரம்பத்தில் ஏற்பட்டது போன்றதொரு அசாதாரண சூழ்நிலை ஏற்பட்டிருந்தால் இராணுவம் ஆட்சியைக் கைப்பற்றியிருக்கக் கூடிய வாய்ப்பு மிகவும் அதிகம்.

இலங்கையில் இராணுவம் அப்படி ஒன்றைச் செய்யாது என்று உடனடியாக அறிவித்தமையை நாம் கவனிக்க வேண்டும். அத்துடன் ராஜபக்சக்களின் ஆபத்பாந்தவனாகிய ரணில், ஜனாதிபதி பதவியேற்று உடனேயே முதலாவதாக ராணுவத்தை சந்தித்துப் பேசவேண்டிய அவசியம் குறித்தும் சிந்திக்க வேண்டும். இப்போது இராணுவத்தைக் கொண்டு அரகலயவை அடக்குவேன் என்று அவர் தொடைகளைத்தட்டி சவால் விடுப்பதையும் ஒரே நேர்கோட்டில் வைத்து அவதானிக்க வேண்டும். பாதுகாப்புத் தரப்பினரின் தயவு இல்லாமல் ஆட்சியில் நிலைப்பது கடினம் என்பதுடன் பாதுகாப்புச் செலவினங்களை சிவில் சமூகம் கேட்பது போல குறைக்கப்பட முடியாதமைக்கும் இதுவே காரணமாகும்.

இது மட்டுமன்றி அரச துறையின் உயர்பதவிகளில் இராணுவ உயர் அதிகாரிகளை நியமனம் செய்வதன் மூலம் அவர்கள் மத்தியில் ஏற்படக்கூடிய வெறுப்புணர்வைத்தவிர்த்து ஆட்சியாளர்களுக்குச் சார்பாக நடந்துகொள்ள வழி செய்கிறது. அதுமட்டுமில்லாமல் இராணுவ அதிகாரிகளை பாதுகாப்பு கற்கைகள் தவிர்ந்த சிவிலியன் துறைகளிலும் உயர்கல்வி பெற வாய்ப்பளிப்பதன் மூலம் பாதுகாப்புத் துறையினர் சிவிலியன் செயற்பாடுகளுடன் தொடர்புடைய பதவிகளில் அமர்த்தப்படத் தகுதியற்றவர்கள் என்ற கருத்துருவம் தகர்க்கப்பட்டிருக்கிறது.

இலங்கையில் பாதுகாப்புச் செலவினங்கள்

| ஆண்டு | பாதுகாப்புச் செலவினம் (பில்லியன் டொலர்களில்) | பாதுகாப்புச் செலவினம்- அரச செலவினத்தின் % | பாதுகாப்புச் செலவினம் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் % |
|---|---|---|---|
| 2007 | 1.05 | - | 3.26 |
| 2008 | 1.53 | - | 3.24 |
| 2009 | 1.52 | - | 3.16 |
| 2010 | 1.93 | - | 2.30 |
| 2011 | 1.75 | 12 | 2.66 |
| 2012 | 1.47 | 11.8 | 2.16 |
| 2013 | 1.60 | 14.1 | 2.25 |
| 2014 | 1.91 | 13.4 | 2.41 |
| 2015 | 2.06 | 10.3 | 2.55 |
| 2016 | 1.74 | 12.4 | 2.11 |
| 2017 | 1.87 | 10.4 | 2.12 |
| 2018 | 1.64 | 10.1 | 1.84 |
| 2019 | 1.56 | 8.6 | 2.04 |
| 2020 | 1.57 | 9.3 | 1.93 |
| 2021 | 1.56 | 11.3 | 1.80 |
| 2022 | 1.86 | 12.3 | 2.06 |

அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின்படி இலங்கையின் பாதுகாப்புச் செலவினம் பாதுகாப்புத் துறை சிப்பாய்களின் சம்பளங்களுக்காகவே செலவிடப்படுகிறதே ஒழிய உபாயரீதியில் முக்கியத்துவம் கொண்ட நாட்டிற்கு பெறுமதி சேர்க்கையை ஈட்டித்தரவல்ல நடவடிக்கைகளில் அல்ல. நாட்டில் குறித்துக் கூறத்தக்க பாதுகாப்புக் கைத்தொழில் துறை உருவாக்கப்படவோ ஏற்றுமதிகளில் ஈடுபடவோ சாத்தியப்படவில்லை.




ஆனால் யுத்தம் நடைபெற்ற காலப்பகுதியை விட அதன் பின்னரான காலப்பகுதியில் பாதுகாப்புச் செலவினங்கள் தொடர்ச்சியாக அதிகரித்துச் சென்றுள்ளன. பாதுகாப்பு அச்சுறுத்தல்கள் இல்லாத நிலையில் அப்படி ஒரு பூதம் இருப்பதாகச் சோடித்துக் கொண்டு தொடர்ச்சியாக பாதுகாப்புச் செலவினங்களை உயர்மட்டத்தில் வைத்து பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்தவல்ல வளங்களை வீணடிப்பது ஆட்சியாளர்களின் இருப்பையும் பாதுகாப்பையும் உறுதிப்படுத்த வேண்டிய ஒரே காரணத்தாலன்றி மக்களின் பாதுகாப்புத் தேவைக்காக அல்ல.

இதையே மேற்கண்ட பாடலில் பாணினி இடித்துரைத்துள்ளாள். பரிசாகவே இருந்தாலும் தம்மால் யானையைக் கட்டி தீனி போட்டு சமாளிக்க முடியாது என்பதே அந்த பாடலில் பொதிந்துள்ள பொருளாகவுள்ளது. அந்த பாணினிக்கு இருந்த தெளிவுகூட ஆட்சியாளர்களுக்கு இல்லை என்பதே உண்மை.



# மாவீரர் நாளுக்குப் பின்னரான சிந்தனைகள்

- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார்

மாவீரர் நாள் இம்முறை தாயகமும் உட்பட உலகம் பூராகவும் பரவலாக அனுஷ்டிக்கப்பட்டுள்ளது. தாயகத்தில் அரசாங்கம் முதலில் செயற்பாட்டாளர்களை அச்சுறுத்த முயற்சித்தது. எனினும் மக்கள் பின்வாங்கவில்லை. கட்சிகளும் பின்வாங்கவில்லை. செயற்பாட்டாளர்களும் பின்வாங்கவில்லை. அதனால் ஒரு கட்டத்தில் அரசாங்கம் தடுப்பதைக் கைவிட்டது. அதனால் அண்மை ஆண்டுகளோடு ஒப்பிடுகையில் மிகப்பெரிய அளவில் மாவீரர் நாள் தாயகத்தில் அனுஷ்டிக்கப்பட்டிருக்கிறது. இவ்வாறு ரணில், மாவீரர் நாளை ஒப்பீட்டளவில் தடுக்காமை குறித்தும், அந்நாளில் திரண்ட மக்கள் தொகையை வைத்தும் சமூக வலைத்தளங்களில் நிகழும் உரையாடல்களில் முக்கியமான இரண்டைப்பற்றி இன்று இக்கட்டுரையில் பார்க்கலாம்.

முதலாவது, ரணிலின் லிபரல் ஜனநாய அணுகுமுறை தொடர்பான எதிர்பார்ப்புக்கள். இரண்டாவது மாவீரர் நாளில் திரண்ட மக்கள் தொகை.

பொதுவாக ரணிலின் காலத்தில் நினைவு கூரும் வெளி ஒப்பீட்டளவில் அதிகந்தான். இம்முறையும் அதுவே நடந்தது. அவர் அவ்வாறு நினைவு கூர்தலை ஒரு கட்டத்துக்கு மேல் தடுக்க முற்படாமைக்கு காரணங்கள் உண்டு. அவர் தமிழ்த் தரப்புடன் பேச்சுவார்த்தைக்கு வரஇருக்கிறார். எனவே தனது நல்லெண்ணத்தைக் காட்ட வேண்டும். இது முதலாவது காரணம். இரண்டாவது காரணம், அது ஒரு மக்கள் கூட்டத்தின் கூட்டுரிமையும் பண்பாட்டு உரிமையும் ஆகும். அக்கூட்டு உரிமையை நிராகரித்து விட்டு ரணில் விக்ரமசிங்க வெளி உலகத்திற்கு தனது லிபரல் முகமூடியைக் காட்ட முடியாது. எனவே அவர் அதை அனுமதிக்க வேண்டியிருக்கிறது. மூன்றாவது காரணம், அண்மையில் ஜேவிபி தன்னுடைய தியாகிகள் தினத்தை கொண்டாடியது. ஜேவிபி அவ்வாறு தன் தியாகிகளை நினைவுகூர முடியும் என்றால், ஏன் தமிழ் மக்களும், தமிழ்க் கட்சிகளும் அப்படிச் செய்ய முடியாது? நாலாவது காரணம், துக்கத்தை கொட்டித் தீர்க்க விட்டால் அது வடிந்துவிடும். மாறாக அது அழுது தீர்க்கப்படாத விடத்து அது உள்ளுக்குள்ளேயே தேங்கி நின்று கோபமாக ஆவேசமாக மாறும். அது பின்னர் ஓர் அரசியல் சக்தியாகவும் மாற முடியும். ரணில் விக்கிரமசிங்க அதைத் தவிர்க்க விரும்புகிறார். எனவே அவர் மேற்கண்ட காரணங்களை முன்வைத்து நினைவு கூர்தலை ஒப்பீட்டளவில் அனுமதித்திருக்கிறார் என்பதே உண்மை.

இதை வைத்துக்கொண்டு ரணில் விக்கிரமசிங்க தமிழ் மக்களுக்கு எல்லாவற்றையும் தந்து விடுவார் என்று கற்பனை செய்யத் தேவையில்லை. இதை இன்னொரு விதமாகச் சொன்னால், நினைவு கூர்தல் பொறுத்த அவருடைய லிபரல் முகம்தான் தீர்வு விடயத்தில் தமிழ் மக்களுக்கு பாதகமானதும்கூட. ஏனென்றால் அவரிடம் ஒரு சமஸ்ரித் தீர்வு இல்லை என்று தெரிகிறது. கஜேந்திரகுமார் அண்மையில் நாடாளுமன்றத்தில் கேட்டதுபோல சமஸ்டிக்கு ஆதரவான ஒரு கூட்டு உளவியலை சிங்கள மக்கள் மத்தியில் உருவாக்க வேண்டிய பொறுப்பு அங்குள்ள சிங்கள கட்சிகளுக்கு உண்டு. ஆனால் யாரும் அதைச் செய்யவில்லை. எல்லாருமே சமஸ்டியை ஒரு பிரிவினை கோரிக்கையாக ஒரு கெட்ட சொல்லாக தென்னிலங்கையில் உருவகித்து வைத்திருக்கிறார்கள். இப்பொழுது திடீரென்று சமஸ்டியை நியாயப்படுத்தி தலைகீழாக கதைக்க அவர்களால் முடியாது.

ரணில் விக்ரமசிங்கவால் மட்டுமல்ல சஜித் பிரேமதாசாவாலும் முடியாது. சஜித் பிரேமதாச கட்சித் தலைவராக வந்ததிலிருந்து ஒரு விடயத்தை தொடர்ச்சியாக வற்புறுத்தி வருகிறார். அது என்னவெனில் இனப்பிரச்சினைக்கு தீர்வு 13வது திருத்தத்தை முழுமையாக அமல்படுத்துவது என்பதுதான். அவர் தேர்தல் காலத்தில் யாழ்ப்பாணத்துக்கு வந்த பொழுதும் அதைத்தான் வலியுறுத்தினார். கடந்த வாரம் நாடாளுமன்றத்திலும் அவர் அதைத்தான் திரும்ப கூறினார். அந்த உரையாடல் நடந்தபொழுது நாடாளுமன்றத்தில் மஹிந்த ராஜபக்ஷவும் இருந்தார். அவர் கூறுகிறார் 13 பிளஸ் தருவதற்கு தான் தயார் என்று. இப்படிப் பார்த்தால் எதிர் தரப்பில் சஜித்தும் மகிந்தவும் கிட்டத்தட்ட ஓரிடத்தில் நிற்கிறார்கள். இவர்களை எதிர்த்துக்கொண்டு ரணில் ஒரு சமஸ்டி தீர்வை முன் வைக்க வேண்டும். அதற்கு வேண்டிய துணிச்சலும் அரசியல் திட சித்தமும் மக்கள் ஆணையும் அவருக்கு உண்டா?

நினைவு கூர்தலில் அவர் ஒப்பீட்டளவில் லிபரலாக நடந்து கொண்டதை வைத்துக்கொண்டு அவர் தீர்வு விடயத்திலும் அவ்வாறு நடந்து கொள்வார் என்று தமிழ் மக்கள் எதிர்பார்க்கக் கூடாது.

இரண்டாவது உரையாடல், மாவீரர் நாளில் திரண்ட மக்கள் தொகையின் அடிப்படையிலானது. தன்னியல்பாக மக்கள் திரண்டார்கள். எனவே ஒரு பொதுஜன வாக்கெடுப்பை நடத்தினால், தமிழ்மக்கள் அதில் பிரிவினைக்கு ஆதரவாக வாக்களிப்பார்கள் என்ற ஒரு உரையாடல். அது உண்மை. அதனால்தான் உலகசமூகம் தமிழ்மக்கள் மத்தியில் ஒரு பொதுஜன வாக்கெடுப்பை நடத்துவதற்கு தயாராக இல்லை. ஒரு பொதுஜன வாக்கெடுப்பு எனப்படுவது ஒரு மக்கள் கூட்டத்தின் விருப்பத்தை பிரதிபலிப்பது. ஆனால் அதே சமயம் ஒரு பொதுஜன வாக்கெடுப்பை நடத்த வேண்டுமா இல்லையா என்பதனை ஒரு மக்கள் கூட்டத்தின் விருப்பம் மட்டும் தீர்மானிக்காது. அதனை புவிசார் மற்றும் பூகோள அரசியல் நலன்கள்தான் இறுதியிலும் இறுதியாக தீர்மானிக்கின்றன.

ஒரு பொதுஜன வாக்கெடுப்பை தமிழ் மக்கள் மத்தியில் நடத்துவதற்கு இலங்கை அரசாங்கம் என்றைக்குமே தயாராக இருக்காது. இந்தியாவும் தயாராக இருக்காது. மேற்கு நாடுகளும் இன்று வரை தயார் இல்லை. ஏனென்றால் ஒரு பொதுஜன வாக்கெடுப்பில் தமிழ் மக்கள் பிரிவினைக்கு கிட்ட வரும் ஒரு தீர்வுக்கு வாக்களிப்பார்கள். இதற்கு முன்நடந்த பல பொதுசன வாக்கெடுப்புகள் முன்னுதாரணங்கள் ஆகும். செழிப்பான ஜனநாயக பண்பாடு நிலவும் நாடுகளில் பொதுஜன வாக்கெடுப்புகள் நடக்கும் பொழுது மக்கள் சேர்ந்து இருப்பதற்கு ஆதரவாக வாக்களிப்பது உண்டு. உதாரணம் கியூபெக் மற்றும் ஸ்கொட்லாந்து. அதே சமயம் ஜனநாயகம், இனநாயகமாக சீரழிந்து காணப்படும் நாடுகளில், இன முரண்பாடுகள் ரத்தம் சிந்தும் ஒரு வளர்ச்சியை அடைந்த நாடுகளில், பொதுஜன வாக்கெடுப்புக்களில் மக்கள் பிரிவினைக்கு ஆதரவாகவே வாக்களித்திருக்கிறார்கள். உதாரணம் தென் சூடான், கிழக்குத் தீமோர் போன்றனவாகும். எனவே இலங்கை போன்ற இனநாயகம் நிலவும் நாடுகளில் ஒரு பொதுஜன வாக்கெடுப்பை நடத்தினால் அது பிரிவினையில் தான் முடியும் என்பது எல்லாருக்கும் தெரியும். அதனால் ஒரு பொதுஜன வாக்கெடுப்பை நடத்தும் முடிவு என்பது தமிழ் மக்களை பிரிந்து போக அனுமதிப்பதுதான் என்று இந்தியாவுக்கும் தெரியும், மேற்கு நாடுகளுக்கும் தெரியும். அதனால்தான் ஒரு பொதுஜன வாக்கெடுப்பை தமிழ் மக்கள் மத்தியில் நடத்துவதற்கு உலக சமூகம் இன்று வரையிலும் தயார் இல்லை.

ஒரு மக்கள் கூட்டத்தின் மத்தியில் பொதுஜன வாக்கெடுப்பை நடத்துவதா இல்லையா என்ற முடிவை அந்த மக்கள் கூட்டத்தின் மத்தியில் அதற்கு இருக்கும் ஆதரவை வைத்து உலக சமூகம் தீர்மானிப்பது இல்லை. மாறாக அந்த பொதுஜன வாக்கெடுப்பின் விளைவுகள் தங்களுக்கு சாதகமாக வருமா இல்லையா என்பதனை பார்த்துத்தான் உலக சமூகம் அதற்கு ஒப்புக்கொள்கிறது.

இந்த அடிப்படையில் சிந்தித்தால் இலங்கை தீவில் மாவீரர் நாளில் மக்கள் கூடுவதை பார்த்தோ அல்லது பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையிலுமான பேரணிகளில் மக்கள் திரள்வதைப் பார்த்தோ உலக சமூகம் ஒரு பொதுஜன வாக்கெடுப்புக்கு சம்மதிக்க போவதில்லை. மாறாக நாடுகளின் புவிசார் மற்றும் பூகோள அரசியல் நலன்களின் நோக்கு நிலைகளில் இருந்தே ஒரு பொதுஜன வாக்கெடுப்பை நடத்துவதா இல்லையா என்ற முடிவு எடுக்கப்படுகிறது. இலங்கை தீவில் அவ்வாறான ஒரு முடிவை எடுப்பதற்கு மேற்கு நாடுகள் இன்று வரை தயார் இல்லை. இந்தியாவும் அதை அனுமதிக்கும் நிலையில் இல்லை.

இப்பொழுது ரணில் விக்கிரமசிங்க ஒரு தீர்வுக்கு தயார் என்று கூறுகிறார் தமிழ் மக்கள் எதைக் கேட்க வேண்டும் என்பதில் தமிழ் தேசிய நிலைப்பாட்டை கொண்ட கட்சிகள் ஒன்றுபட்டு ஒரு முன்மொழிவை முன்வைக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு கூடிக்கதைத்துக் கொண்டிருக்கின்றன. இவ்வாறான ஒரு பின்னணியில் சமஸ்டிக் கோரிக்கையை முன்வைக்க முதல், தமிழ் மக்கள் ஒரு பொதுஜன வாக்களிப்பை கேட்க வேண்டும் என்ற ஆலோசனை புலம்பெயர்ந்த தமிழ் அமைப்புகள் சிலவற்றினால் முன்வைக்கப்பட்டு வருகின்றது.


எனினும், ரணில் விக்ரமசிங்க தமிழ்க் கட்சிகளை நோக்கி அழைப்பு விடுத்த பின்னரான அண்மை வாரங்களில் நடந்து வரும் உரையாடல்களைத் தொகுத்துக் கவனித்தால் ஒரு விடயம் தெளிவாகத் தெரிகிறது. தமிழ்க் கட்சிகள் மத்தியில் சர்வசன வாக்கெடுப்பு என்று தெரிவு இதுவரை ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை என்பதே அதுவாகும். ஒரு பொதுஜன வாக்கெடுப்பை நோக்கி உலக சமூகத்தின் கருத்தை உருவாக்குவதற்குத் தமிழ் மக்கள் இப்பொழுதை விடக் கடுமையாக உழைக்க வேண்டியிருக்கிறது.

எனவே மாவீரர் நாளில் திரண்ட மக்களை வைத்துக்கொண்டு, அரசாங்கம் அதை ஒப்பீட்டுளவில் தடுக்கவில்லை என்பதை வைத்துக்கொண்டு, தமிழ் மக்கள் யதார்த்தத்திற்கு வெளியே போய் அளவுக்கு மிஞ்சிக் கற்பனை செய்யக் கூடாது. தமிழ் மக்களின் கூட்டுத்துக்கம் இப்பொழுதும் வலிமையாகத்தான் இருக்கிறது. ஆனால் அக்கூட்டுத்துக்கத்தை கூட்டு அரசியல் ஆக்கசக்தியாக மாற்றுவதற்கான நிகழ்ச்சி நிரல் தமிழ் கட்சிகளிடம் இல்லை என்பதுதான் தமிழ் மக்கள் உடனடியாக உரையாட வேண்டிய ஒரு விடயம் ஆகும். 13 ஆண்டுகளின் பின்னும் காயங்கள் அறவில்லை. துக்கமும் தீரவில்லை. ஆனால் காலம் ஒரு சிறந்த மருத்துவன். காலப்போக்கில் துக்கம் ஆறமுடியும். காயங்களும் மாறக்கூடும். எனவே, அந்தத் துக்கத்தையும் காயத்தையும் அரசியல் ஆக்க சக்தியாக மாற்ற வேண்டிய ஒரு மக்கள் கூட்டம் கடந்த 13 ஆண்டுகளில் என்ன செய்திருக்கிறது என்ற கேள்வியை தமிழ் மக்கள் தங்களைத் தாங்களே கேட்டுக் கொள்ள வேண்டிய நேரம் இது.


## வீணாவின் கவிக்கணை



ஆண் என்றும்
பெண் என்றும்
இல்லாத ஒரு ஜாதி,
சிவனுமில்லை
சக்தியுமில்லை,
இருவரையும் கலந்து
செய்த மகாசக்தியான
அர்த்தநாரீஸ்வரர்,
அவர் கடவுள் என்றால்
கைகூப்பும் உள்ளத்திற்கு
திருநங்கையவளைக்
கண்டதும் கேலி எதற்கோ?



எவரும் மனிதன் என்ற
உணர்வு இருந்தால்,
இன்னமும் உன்னுள்
மனிதம் வாழ்ந்தால்,
சக மனிதரை மனிதராய்
மதித்திடு போதும்!




பண்டைய காலத்து ஐந்து நிலங்களும்
கொண்ட கருப்பொருளில் ஒன்றான பூக்கள்

என்றுமே சிறப்புக்கு உரியன என்பதை - அந்நிலங்கள்
கொண்ட பெயர்களால் அறியலாம்

குறிஞ்சிக்குரியது குறிஞ்சியும் காந்தளும் வேங்கையும்
பிடவமொடு முல்லையும் தோன்றியும் முல்லைக்காம்

நெய்தலும் தாழையும் நெய்தலுக்காம்
பாலைக்கு உரியதாம் குரவமும் பாதிரியும் - என

நிலங்களுக்கும் பூக்களுக்கும் நெருங்கிய
தொடர்பிருக்கு - இன்றும்
நாடுகள் ஒவ்வொன்றும் தமக்கென

தேசியப் பூக்களைக் கொண்டிருக்க - எம்
தமிழ் ஈழதேசமும் கொண்டது காந்தளை.

பூக்களில் பலவகை பலருக்குத் தெரியும்
காந்தள் மலரின் தன்மைகள் தெரியுமா?

கார்த்திகை மாதத்தில் முகிழ்விடும் காந்தள்
கார் காலத்திலே பூர்த்துக் குலுங்குமாம்

கொடியாய் படரும் காந்தள் - நெருப்புச்
சுடர் போல் இருக்கும் பார்க்க

காந்தளுக்கென்று எத்தனை பெயர்கள் அத்தனையும் - அதன்
தன்மைகள் பார்த்தே வந்ததாம் என்பர்

தீக் கொழுந்து போல் இருப்பதால்
'அக்கினிச்சலம்' ஆனதாம்

கிழங்கு , கலப்பை போல் இருப்பதால்
'கலப்பை, இலாங்கிலி' ஆனதாம்

இலைகள் முனை சுருண்டு இருப்பதனால்
'தலைச்சுருளி' என்றும் பற்றி ஏறுவதால் - இது

'பற்றி' எனப்பட்டதோடு வளைந்திது பற்றுவதால் 'கோடல், கோடை
என்றுமாச்சாம்.

கார்த்திகையில் பூர்ப்பதால் 'கார்த்திகைப்பூ' என்றும் காந்தள் - இது

மாரிக்கு முதலே முகிழொடு தோன்றுவதால் - இன்னொரு
பெயரது கொண்டதாம் தோன்றி என்றும்

நாட்டு மருத்துவத்தில் இதற்குப் பெயர்
'வெண்தோண்டி' என்பதுவாம்

இவ்வாறே பல பெயர்கள் கொண்ட காந்தள் - பெரும்
பொல்லாத நச்சு வேரைக் கொண்டதுவாம்

இதன் பாகம் எதையேனும் உண்டுவிட்டால்
உடன் துஞ்சுதற்கும் வாய்ப்பு உண்டாம்

நஞ்சுக்கும் ஒரு தன்மையுண்டாம் துரத்துவது - இதை
நெஞ்சார நாம் அறிந்தது புராணத்தில் - எம்

தேசியப்பூவை கசக்கியதாலோ என்னவோ - எம்
தேசத்தில் அவ்விடம் துரத்துகிறது சிலரை

அதற்கும் இனி எங்கள் நஞ்சுகொண்ட கண்டர்
ஆலாலகண்டரே வரவேண்டும் போலும்.

-- உமா மோகன் - Montreal- Canada --

# பீகாரில் ஒரு வாலிபருக்காக 5 காதலிகள் ஒருவரையொருவர் தலைமுடியைப் பிடித்து இழுத்து சண்டை



ஒரு வாலிபருக்காக 5 காதலிகள் ஒருவரையொருவர் தலைமுடியைப் பிடித்து இழுத்தும், ஆடைகளை பிடித்து இழுத்தும், சண்டை போட்டுக்கொண்டனர்.

பஞ்சாபில் 4 பணக்காரப் பெண்கள் ஒரு வாலிபரை கடத்தி சென்ற பாலியல் பலாத்காரம் செய்த சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. இதே போன்ற இன்னொரு சம்பவம் பீகாரில் நேற்று நடந்துள்ளது. ஒரு வாலிபருக்காக 5 பெண்கள் கட்டிப்புரண்டு சண்டை போட்டுள்ளனர் அதுவும் நடுரோட்டில். அதுகுறித்த வீடியோ வைரலாகி உள்ளது.

பீகார் மாநிலம் சோன்பூரில் இளைஞர் ஒருவர் தன்னுடைய காதலியுடன் அங்கு நடந்த கண்காட்சி ஒன்றுக்கு சென்று உள்ளார். இதை அந்த இளைஞரின் இன்னொரு காதலி பார்த்துவிட்டார். அதுகுறித்து இளைஞரிடம் தகராறு செய்ய ஆரம்பித்துவிட்டார். இதை அந்த இளைஞரின் இன்னொரு காதலி பார்த்துவிட்டார். அவரும் ஆவேசமாக வந்து சண்டை போட்டார். இப்படியே மொத்தம் 5 காதலிகள் ஒரே இடத்தில் எதிர்பாராமல் வந்துவிட்டனர்.

சினிமாவில் இடம் பெறும் மன்மத லீலை போல் நிஜமாகவே இந்த சம்பவம் நடந்துள்ளது. 5 பேரையும் காதலிப்பதாக இளைஞர் சாமர்த்தியமாக ஏமாற்றி வந்துள்ளார்.

கண்காட்சிக்கு வந்த இடத்தில் மன்மதனின் குட்டு அம்பலமானதால், 5 பெண்களும் ஒருவரையொருவர் தலைமுடியைப் பிடித்து இழுத்தும், ஆடைகளை பிடித்து இழுத்தும், கண்காட்சியிலேயே சண்டை போட்டுக்கொண்டனர். இவர்கள் சண்டைபோட்டதை அங்கிருந்த பொதுமக்கள் நின்று வேடிக்கை பார்த்ததுடன், சிரித்துக் கொண்டே வீடியோ எடுத்தனர்.

ஆனால், யாரையுமே தடுக்க முடியவில்லை.. "அவன் என் லவ்வர், அவன் என்னுடைய பாய்பிரண்ட்" என்று 5 பேரும் மாற்றி மாற்றி சரமாரியாக தாக்கிக் கொண்டார்கள். இந்த வீடியோவை பார்த்ததுமே பல நெட்டிசன்கள், வழக்கம்போல் தங்கள் பாணியில் கலாய்த்து வருகிறார்கள்.

# சீனாவுடன் கூட்டு: யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் கடும் எதிர்ப்பு

- எமது யாழ்ப்பாணம் செய்தியாளர்


University Students' Union
University of Jaffna

இலங்கை அரசு தமிழர் தாயகப் பகுதிகளான வடக்கு மற்றும் கிழக்கிலுள்ள வளமான நிலங்கள் மற்றும் கடற்பரப்புகளைச் சீனாவிற்கு அளிப்பதற்கு யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்கள் கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள வளமான விவசாய நிலங்களையும் கடற்பரப்பையும் சீனாவுக்கு விற்பதற்கு இலங்கை அரசாங்கம் ஏற்கனவே சீனாவுடன் இரகசிய ஒப்பந்தம் செய்து கொண்டதாக நாங்கள் சந்தேகிக்கிறோம் என்று பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் - யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் திங்கட்கிழமை (28) வெளியிட்ட அறிக்கையில் கூறியுள்ளனர்.

"எமது நிலங்களையும் கடலையும் மக்களின் விருப்பத்திற்கு மாறாக சீனாவிற்கு விற்கப் பல புரிந்துணர்வு ஒப்பந்தங்களை அரசாங்கம் செய்து வருகிறது".

அண்மையில் சீன பல்கலைக்கழகத்துடன் கைச்சாத்திட இருந்த ஒப்பந்தத்தை இரத்து செய்த துணை வேந்தர் பேராசிரியர் சிவக்கொழுந்து சிறீசற்குணராஜா அவர்களுக்கு தமது நன்றியைத் தெரிவித்துக் கொள்வதுடன், அரசியல் நிர்ப்பந்தத்திற்காக எமது நிலத்தையும் கடலையும் வேறு நாடுகளுக்கு விற்க வேண்டாம் என இலங்கை அரசாங்கத்திடம் வேண்டுகோள் விடுப்பதாக யாழ் மாணவர் ஒன்றிய அறிக்கை கூறுகிறது.

தமது கடலையும், நிலத்தையும் காப்பாற்றக் குரல் கொடுக்குமாறும் அந்த மாணவர் அமைப்பு சிவில் சமூகங்கள் மற்றும் அனைத்து மக்களிடமும் வேண்டுகோள் விடுத்துள்ளன. அந்த கடமையிலிருந்து அவர்கள் தவறினால் எதிர்காலத்தில் தாங்கள் அனைவரும் சொந்த நாட்டிலேயே அகதிகளாக்கப்படும் அபாயம் உள்ளது என்று அவர்கள் மேலும் எச்சரித்துள்ளனர்.



# மலேசிய பத்துமலையில் திருமுறை விழாக்கோலம்




**ப**த்துமலை, நவ.27:

பத்துமலை தமிழ்ப் பள்ளி வகுப்பறைகள் எங்கும் திருமுறைப் பாடல்கள் ஒலித்தன் அதேவேளை, பள்ளியைச் சுற்றிலும் திருமுருக திருத்தல வளாகத்திலும் பெரியவர்கள் உட்பட சிறுமியரும் சிறாரும் பண்பாட்டு உடையில் வலம் வந்தக் காட்சி மனதை அள்ளுவதாக இருந்தது.

மலேசிய இந்து சங்கத்தின் சமய நிகழ்ச்சிகளில் திருமுறை விழாவிற்கு எப்போதும் முதலிடம் உண்டு. ஆறு சமயக் கொள்கைகளில் சைவ சமயத்தின் மறைப் பெட்டகமான திருமுறைப் பாடல்களை ஓதுவது இவ்விழாவின் நோக்கம்.

அந்த வகையில் சிலாங்கூர் மாநிலப் பேரவையின் 44-ஆவது திருமுறை விழா இன்று நவம்பர் 27-ஆம் நாள் பத்துமலை தமிழ்ப் பள்ளியில் நடைபெற்றது.

காலை 8:00 மணி அளவில் பதிவு நடவடிக்கையுடன் தொடங்கிய இவ்விழாவில், வட்டாரப் பேரவைகளின் சார்பில் போட்டியாளர்கள் கலந்து கொண்டு திருமுறைப் பாடல்களை பண்ணிசையுடன் பாடினர்.









நண்பகல் வரை போட்டி நடைபெற்றபின், உணவிற்கு பிந்திய இரண்டாவது அங்கத்தில் தலைவர்களின் உரை, திருவிழாவிற்கு துணை நின்றவர்களுக்கு சிறப்பு செய்தல், போட்டியில் வென்றவர்களுக்கு பரிசளிப்பு ஆகிய அங்கங்கள் இடம்பெற்றன.



மாநிலச் செயலாளர் தொண்டர்மணி ரவிச்சந்திரனின் வரவேற்புரையைத் தொடர்ந்து மாநிலத் தலைவர் தொண்டர்மாமணி முனியாண்டி தலைமை உரையாற்றினார்.



கொரோனா தொற்று பரவலால் கடந்த ஈராண்டுகளாக திருமுறை விழா நடைபெறாமல் இருந்த நிலையில், இப்பொழுது நடைபெறும் 44-ஆம் ஆண்டு திருமுறை விழாப் போட்டியில் கலந்து கொண்ட மாணவ-மாணவியர், பெற்றோர், இந்து சங்க உறுப்பினர்கள் உள்ளிட்ட அனைத்துத் தரப்பினரும் குடும்பம் குடும்பமாக ஆயிரக் கணக்கில் கலந்து கொண்டுள்ளனர். இவ்விழா இனிதே நடைபெற அருள் வழங்கிவரும் பரம்பொருள் சிவபெருமானை வணங்குவதாக முனியாண்டி தன்னுரையில் குறிப்பிட்டார்.



இந்த விழாவிற்கு சிலாங்கூர் மாநில சார்பில் 20 ஆயிர வெள்ளி கொடையளித்த ஆட்சிமன்ற உறுப்பினர் கணபதி ராவிற்கும் நிகழ்ச்சி சிறக்க துணைநின்ற அனைவருக்கும் நன்றி தெரிவிப்பதாகவும் முனியாண்டி பேசினார்.

அவரையடுத்து சிறப்புரையாற்றிய கிள்ளான் நாடாளுமன்ற உறுப்பினருமான கணபதி ராவ், மலேசிய இந்து சங்கத்தில் மறுமலர்ச்சி ஏற்பட்டுள்ளதற்கு மகிழ்ச்சி தெரிவித்தார். போட்டி போட்டு கோபுரங்களை எழுப்புவதைக் காட்டிலும் வழிபாட்டு முறையை செம்மைப் படுத்துவது-தான் பல இன மக்கள் வாழும் இந்த நாட்டில் நம்முடைய இந்து சமயம் மேலும் வளர துணைபுரியும். அந்த வகையில், இதுபோன்ற திருமுறை விழாக்கள் தொடர்ந்து நடைபெற வேண்டும் என்றார்.

தொடர்ந்து, மலேசிய இந்து சங்க தேசியத் தலைவர் "சங்கபூஷன்"-"சிவநெறிச் செல்வர்" தங்க கணேசன் ஆற்றிய சிறப்புரையில் திருமுறை நெஞ்சம் தீமைக்கு அஞ்சும் என்னும் ஆன்றோர் பெருமக்களின் நல்வாக்கிற்கு இணங்க திருமுறை சிந்தனையை தத்தம் உள்ளத்தில் சுமந்து இங்கேக் குழுமியிருக்கின்ற சிறியவர்கள் பெரியவர்கள் உள்ளிட்ட அனைவரையும் மலேசிய இந்து சங்க தேசியப் பேரவையின் சார்பில் வரவேற்பதாகவும் பாராட்டுவதாகவும் குறிப்பிட்டார்.

ஆதியும் அந்தமும் இல்லாத நம் இந்து சமய எல்லையில் திருமுறை என்னும் சீர்முறையை அன்றாட வாழ்வில் ஓதி உணர்ந்து வாழ்பவர்களின் உள்ளத்தில் ஆன்ம நேயமும் அன்பு நெறியும் என்றென்றும் குடிகொண்டிருக்கும் என்றார்.

அத்தகைய திருமுறையை வளரும் இளந் தலைமுறையினர்தம் உள்ளத்தில் பதிய வைக்கவும் பெரியவர்தம் எண்ணத்தை சிவனடி நோக்கி பயணிக்க வைக்கவும் ஆண்டுதோறும் திருமுறை விழாக்களை இந்து சங்கம் நடத்தி வருவதாக தங்க கணேசன் சொன்னார்.

இந்த விழா சீரோடும் சிறப்போடும் நடைபெறுவதற்காக பாடுபட்ட மாநில திருமுறை விழாக் குழுவினரையும் அவர்களுக்கு உதவி தோள்கொடுத்த மாநிலப் பேரவை நிருவாகத்தினரையும் பாராட்டிய அவர்,

திருமுறையை ஓதுவோர்க்கு போட்டி நடத்துவது, அவர்களை உற்சாகப்-படுத்தி ஊக்குவிக்கத்தானேத் தவிர போட்டியில் வென்றவர்களுக்கும் மற்றவர்களுக்கும் இடையே அடிப்படையில் எந்த பேதமும் இல்லை நம் அன்றாட வாழ்வில் வாய்ப்பு கிட்டும்போதெல்லாம் சிவனருளை நாடி, திருமுறையை ஓதுவதுதான் முக்கியம் என்று கூறி தங்க கணேசன் தன்னுடைய உரையை நிறைவு செய்தார்.

பத்துமலை தமிழ்ப் பள்ளி தலைமை ஆசிரியர் திருமதி. சரசுவதி த.்.பெ செங்கல்வராயன், சிலாங்கூர் மாநில தமிழ்ப் பள்ளிகள் மற்றும் பாலர் பள்ளிகளின் துணை அமைப்பாளர் மணிசேகரன், சிலாங்கூர் தமிழ்ப் பள்ளிகளின் தலைமை ஆசிரியர் மன்றத் தலைவர் பாண்டியன், இந்து சங்க பத்துமலை வட்டாரப் பேரவைத் தலைவர் கோ.கோபால் உட்பட கல்வியாளர்களும் சமய சார்பாளர்களும் கலந்துகொண்ட இந்த விழாவின் சிறப்பு அங்கமாக போட்டியாளர்களுக்கு சிறப்பு செய்த நிகழ்வும் இடம்பெற்றது.

**நக்கீரன் -** Nakkeeran **013-244 36 24**



# திருவண்ணாமலை | கார்த்திகை தீபத் திருவிழா அமைதியாகவும், பாதுகாப்பாகவும் நடைபெற காவல்துறை நடவடிக்கை: டிஜிபி



திருவண்ணாமலை கார்த்திகை தீபத் திருவிழா அமைதியாகவும், பாதுகாப்பாகவும் நடைபெறுவதற்கு தேவையான அனைத்து முயற்சிகளையும் காவல்துறை செய்து வருகிறது என டிஜிபி சைலேந்திர பாபு தெரிவித்துள்ளார். திருவண்ணாமலை அண்ணாமலையார் கோயிலில் கார்த்திகை தீபத் திருவிழா நடைபெற்று வருகிறது. டிசம்பர் 6ம் தேதி பரணி தீபம் மற்றும் மகா தீபம் ஏற்றப்பட உள்ளது.

இதையொட்டி, அண்ணாமலையார் கோயிலில் மேற்கொள்ள வேண்டிய பாதுகாப்பு பணிகள் குறித்து டிஜிபி சைலேந்திர பாபு, வியாழன் அன்று மாலை ஆய்வு செய்தார். விஜபிக்கள் மற்றும் விவிஜபிக்கள் வந்து செல்லும் வழித்தடம், அவர்கள் அமரும் இடங்கள், அவர்களுக்கு வழங்க வேண்டிய பாதுகாப்பு குறித்து அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினார்.மேலும், பாஸ் வைத்துள்ளவர்களை அனுமதித்தல் மற்றும் வெளியே செல்லும் பாதை குறித்து கேட்டறிந்தார்.

அப்போது அவர் செய்தியாளர்களிடம் கூறும்போது, “கரோனா தொற்று பரவல் காரணமாக 2020 ம மற்றும் 2021ம் ஆண்டுகளில் கார்த்திகைத் தீபத் திருவிழா பக்தர்கள் வரவில்லை. இதனால், இந்தாண்டு, டிசம்பர் 6ம் தேதி நடைபெற உள்ள கார்த்திகைத் தீபத் திருவிழாவுக்கு 30 லட்சம் பக்தர்கள் வருவார்கள் என எதிர்பார்க்கிறோம்.


2,700 பேருந்துகள், 12 ஆயிரம் கார் உள்ளிட்ட வாகனங்கள் வரக்கூடும். சிறப்பு ரயில்களும் இயக்கப்பட உள்ளன. நான்கு பிரதான சாலைகள் வழியாக வாகனங்களை நிறுத்த, 52 இடங்கள் தயார் நிலையில் உள்ளன. பாதுகாப்பு காரணங்களுக்காக வாகனங்களை தணிக்கை செய்யும் பணி தொடங்கப்பட்டுள்ளன.ஐஜி கண்ணன் தலைமையில் 4 டிஐஜிக்கள், 27 எஸ்பிக்கள் உட்பட 12 ஆயிரம் காவல்துறையினர் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட உள்ளனர். குற்ற தடுப்பு காவல்துறையினர் பணியை தொடங்கி உள்ளனர்.

சந்தேகிக்கும் நபர்களை கைது செய்து வருகின்றனர். திருவண்ணாமலையில் வசிக்கும் மக்களின் பாதுகாப்பாக, வெளிநாடு உட்பட பிற இடங்களில் இருந்து வந்தவர்கள் உட்பட 2 ஆயிரம் பேரின் முழு விவரங்கள் சேகரித்துள்ளோம். பாஸ் வைத்துள்ள பக்தர்கள் தங்கு தடையின்றி கோயில் உள்ளே வந்து சுவாமி தரிசனம் செய்யவும், மகா தீபத்தை பார்க்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன.அனுமதி இல்லாதவர்கள், அங்கீகாரம் இல்லாதவர்கள் வருவதை தடுக்க, மாவட்ட நிர்வாகம் உட்பட அனைத்து துறைகளுக்கும் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளன. அமைதியாகவும், பாதுகாப்பாகவும் விழாவை நடைபெறுவதற்கு தேவையான அனைத்து முயற்சிகளையும் காவல்துறை செய்து வருகிறது.பரணி தீபம் மற்றும் மகா தீபத்துக்கு, கோயில் உள்ளே ஏற்கெனவே ஒவ்வொரு ஆண்டும் அனுமதிக்கப்பட்டுள்ள எண்ணிக்கையின் அடிப்படையில், இந்தாண்டும் பக்தர்கள் அனுமதிக்கப்படுவார்கள்.

கோயில் உள்ளே குறிப்பிட இடம்தான் உள்ளன. இது தொடர்பாக ஆட்சியர் மற்றும் இந்து சமய அறநிலையத் துறை முடிவெடுக்கும்.ஆன்லைனில் பதிவு செய்தவர்கள், பாஸ் வைத்துள்ளவர்கள் அனுமதிக்கப்படுவார்கள். கோயில் உள்ளே தேவையின் அடிப்படையில் மட்டுமே, பாதுகாப்பு பணியில் காவல்துறையினர் ஈடுபடுத்தப்படுவார்கள். அவசர தேவைக்கு மட்டும், மாட வீதி உட்பட நகரின் முக்கிய பகுதிகளில் காவல்துறை வாகனம் இயக்கப்படும். காவலர்களை ஏற்றி வரும் வாகனங்கள், பார்க்கிங் இடத்தில் நிறுத்தி வைக்கப்படும். டிசம்பர் 9ம் தேதி வரை காவல்துறையின் பாதுகாப்பு தொடரும்” என்றார்.

முன்னதாக, மாவட்ட எல்லைகளில் ஆய்வு செய்தார். ஆய்வின்போது ஐஜி கண்ணன், டிஐஜி சத்தியபிரியா, ஆட்சியர் பா.முருகேஷ், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் கார்த்திகேயன் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

# மீனவர் பிரச்சினையில் கடிதம் எழுதுவதை தவிர ஆக்கபூர்வ நடவடிக்கை இல்லை: திமுக அரசு மீது சீமான் சாடல்



“தமிழக மீனவர்கள் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வுகாண உச்சநீதிமன்றத்தில் உள்ள வழக்கினை விரைவுப்படுத்தி, கட்சத்தீவினை மீட்க தமிழக அரசு விரைந்து நடவடிக்கை வேண்டும்“ என்று நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் கூறியுள்ளார்.


இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், “தமிழக மீனவர்கள் 24 பேரை இலங்கை கடற்படையினர் அத்துமீறி கைது செய்து சிறைப்படுத்தியிருப்பது அம்மீனவர்களின் குடும்பத்தினரிடையே அச்சத்தையும், கவலையையும் ஏற்படுத்தியிருக்கிறது. கடந்த சில நாட்களுக்கு முன்பு ராமேஸ்வரம் மீனவர்கள் மீது கொடுந்தாக்குதல் நடத்தி விரட்டியடித்த இலங்கை ராணுவம் தற்போது, மீண்டும் புதுக்கோட்டை மாவட்ட மீனவர்கள் 24 பேரை கைது செய்திருப்பதோடு, அவர்களது 5 படகுகளையும் பறிமுதல் செய்திருப்பது வன்மையான கண்டனத்திற்குரியது.

தமிழக மீனவர்கள் தொடர்ச்சியாக கைதுசெய்யப்படுவதும், தாக்கப்படுவதும், உடைமைகள் பறிக்கப்படுவதும், சுட்டுக்கொலை செய்யப்படுவதுமென இலங்கை கடற்படையினரின் அத்துமீறிய கொடுமைகளும், அட்டூழியங்களும் தொடர்ந்து வருவது ஆளும் அரசுகளின் கையாலாகாத்தனத்தையே காட்டுகிறது.தமிழக மீனவர்கள் மீது இலங்கை ராணுவம் நடத்தி வரும் தொடர் வன்முறைத் தாக்குதல்களும், தமிழர் படகுகளைப் பறித்து அரசுடைமையாக்கிக் கொள்ளும் அநீதியும், வலையறுப்பு நிகழ்வுகளும், மீன்பிடிக்கச் செல்லும் தமிழக மீனவர்களை நடுக்கடலிலே வைத்து தாக்குவது, ஆயுதத்தைக் கொண்டு துன்புறுத்துவது, அவர்களது உடைமைகளைப் பறித்துக்கொள்வது, படகுகளைச் சேதப்படுத்துவது, மீனவர்களைச் சிறைப்பிடிப்பது, துப்பாக்கிச்சூடு நடத்துவது என இலங்கை கடற்படை அரங்கேற்றிவரும் கொடுமைகளும் சொல்லி மாளக்கூடியதல்ல. இலங்கை ராணுவம் ஈவிரக்கமற்று தொடர்ச்சியாக தமிழக மீனவர்களைச் சிறைப்படுத்தி வருவது தமிழர்கள் மீதான வன்மத்தின் வெளிப்பாடேயாகும்.

இலங்கை கடற்படையினரின் தாக்குதலின் மூலம் இதுவரை பல்லாயிரக்கணக்கான மீனவர்கள் உடல் உறுப்புகளைச் சிதையக் கொடுத்து, முடமாகி நிற்கிறார்கள். 800க்கும் மேற்பட்ட மீனவர்கள் நடுக்கடலிலே கொலைசெய்யப்பட்டிருக்கிறார்கள். தமிழக மீனவர்களின் கோடிக்கணக்கான சொத்துக்கள் சூறையாடப்பட்டிருக்கிறது. இருந்தபோதிலும், இதுவரை தமிழக மீனவர்கள் மீதான இக்கோரத் தாக்குதல்களுக்கும், அநீதிகளுக்கும் எதிராக இந்திய ஒன்றிய அரசு கண்டனம் தெரிவித்ததுமில்லை. எதிர்வினையாற்றி எச்சரித்ததுமில்லை. இதன்விளைவாகத்தான், இலங்கை ராணுவம் தமிழக மீனவர்கள் மீது தாக்குதல்களைத் தொடுப்பது என்பது தொடர்கதையாக மாறி வருகிறது.தமிழக மீனவர்கள் மீதான இத்தாக்குதல்களுக்கு மறைமுக ஆதரவளிக்கும்

இந்திய ஒன்றியத்தை ஆளும் பாஜக அரசின் செயலானது தமிழர்களுக்குச் செய்யும் பச்சைத் துரோகமாகும். பெருமளவு அந்நியச் செலாவணியை ஈட்டித்தரும் தமிழக மீனவர்களின் மீதான தாக்குதல்களை இந்திய பெருநாடு வெட்கமின்றி வேடிக்கைப் பார்ப்பது எட்டுகோடி தமிழர்களின் உணர்வுகளைச் சீண்டிப் பார்ப்பதாகவே உள்ளது. தமிழ்நாட்டில் மீண்டும் ஆட்சிக்கு வந்த பிறகு தமிழக மீனவர்கள் மீதான தாக்குதல் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதை தடுக்க இந்திய ஒன்றிய அரசிற்கு கடிதம் எழுதுவதை தவிர, எவ்வித ஆக்கபூர்வமான நடவடிக்கையும் எடுக்காத திமுக அரசின் அலட்சியப்போக்கு தமிழக மீனவர்களிடையே மிகுந்த வேதனையை ஏற்படுத்தியுள்ளது.ஆகவே, இந்திய ஒன்றிய அரசு இலங்கை கடற்படையால் கைது செய்யப்பட்டு, சிறையிலடைக்கப்பட்டுள்ள புதுக்கோட்டை மாவட்டத்தைச் சேர்ந்த மீனவர்கள் 24 பேரையும் விடுவிக்க உடனடி நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென வலியுறுத்துகிறேன். மேலும், தமிழக மீனவர்கள் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வுகாண உச்ச நீதிமன்றத்தில் உள்ள வழக்கினை விரைவுப்படுத்தி, கட்சத்தீவினை மீட்க விரைந்து நடவடிக்கை வேண்டுமென தமிழ்நாடு அரசினை நாம் தமிழர் கட்சி சார்பாக கேட்டுக்கொள்கிறேன்” என்று அவர் கூறியுள்ளார்.

# தூத்துக்குடி துப்பாக்கிச்சூட்டுக்கு காரணமானவர்கள் தண்டனையின்றி தப்புவதை அரசு அனுமதிக்கக்கூடாது : ராமதாஸ் வலியுறுத்தல்



“சாத்தான்குளம் காவல்நிலைய மரணத்தில் சம்பந்தப்பட்ட காவலர்கள் கைது செய்யப்பட்டு கொலை வழக்கை எதிர்கொண்டு வருகின்றனர்.

ஆனால், அதைவிட கொடுமையான தூத்துக்குடி துப்பாக்கிச்சூட்டுக்கு காரணமானவர்கள் தண்டனையின்றி தப்பிப்பதை அரசு அனுமதிக்கக்கூடாது” என்று பாமக நிறுவனர் ராமதாஸ் கூறியுள்ளார்.இதுதொடர்பாக அவர் தனது ட்விட்டர் பக்கத்தில், “தூத்துக்குடி ஸ்டெர்லைட் ஆலைக்கு எதிராக போராடியவர்கள் மீது துப்பாக்கிச்சூடு நடத்தி 13 பேரை கொலை செய்த காவலர்கள் மீது துறை சார்ந்த நடவடிக்கைகள் மட்டுமே எடுக்கப்படும்; குற்றவியல் நடவடிக்கை எடுக்கப்படாது என்று தமிழக அரசு அறிவித்திருப்பது அதிர்ச்சியளிக்கிறது.

திட்டமிட்டு நிகழ்த்தப்பட்ட இந்தக் கொடூரத்தை கொலைக்குற்றமாகவும், கூட்டு சதியாகவும் பார்க்க வேண்டும். அதற்கான தண்டனை வழங்க வேண்டும். ஆனால், இதை சாதாரண விதிமீறலாக மட்டும் கருதி துறை சார்ந்த நடவடிக்கையை மட்டும் அரசு மேற்கொள்வதை ஏற்க முடியாது. சாத்தான்குளம் காவல்நிலைய மரணத்தில் சம்பந்தப்பட்ட காவலர்கள் கைது செய்யப்பட்டு கொலை வழக்கை எதிர்கொண்டு வருகின்றனர். ஆனால், அதை விட கொடுமையான தூத்துக்குடி துப்பாக்கிச்சூட்டுக்கு காரணமானவர்கள் தண்டனையின்றி தப்பிப்பதை அரசு அனுமதிக்கக்கூடாது.

எனவே, தூத்துக்குடி துப்பாக்கிச்சூட்டில் தொடர்புடைய காவலர்கள் மீது குற்றவியல் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். துப்பாக்கிச்சூட்டில் இறந்தவர்களின் குடும்பங்களுக்கு தலா ரூ.50 லட்சம், காயமடைந்தோருக்கு தலா ரூ.10 லட்சம் வீதம் இழப்பீடு வழங்கவும் அரசு முன்வர வேண்டும்“ என்று பதிவிட்டுள்ளார்.

# இவ்வார ராசிபலன்

**02-12-2022 வெள்ளி தொடக்கம் 08-12-2022 வியாழன் வரையும்**




ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது! என்ற உறுதியோடு உங்கள்

'ராஜயோகம்'

Dr. K. RAM.Ph.D (USA)

தொடர்புக்கு: 0091-9840160068 / 9940431377





**மேஷம்:** மங்கையர் சிலருக்கு மகப்பேறு கிடைக்கும் வாரம். பணியில் கவனம் தேவை. கலைஞர்களுக்கு திருப்புமுனையான காலம். தொழிலாளர்களுக்கு வாய்ப்புக்கள் கிடைக்கும். வியாபாரிகளுக்கு லாபம் அதிகரிக்கும். கூட்டுத்தொழில் சுமாராக இருக்கும். முற்போக்கு சிந்தனைகள் உருவாகும். புதிய கடன் வாங்க நேரிடும். கணவன், மனைவி அன்யோன்யம் அதிகரிக்கும். மனக்குழப்பம் தீரும். பொருளாதார நிலை உயரும். தொட்டக் காரியம் ஜெயமாகும். வார்த்தைகளில் நிதானம் நல்லது. நீண்ட நாளைய நோய் விலகும். பணவரவு திருப்தி தரும். மனமகிழ்ச்சி அதிகரிக்கும். இல்லத்தில் அமைதி கூடும். சுமூகமான சூழ்நிலை பெருகும். தேகப்பலம் கூடும். உடல்நலம் சீராகும். குடும்பத்தில் குழப்பங்கள் நீங்கும். உத்தியோகத்தில் உயர்வு உண்டு. சுபக்காரியம் கைக்கூடும். தொழில் முயற்சி வெற்றி தரும். வறுமைகள் அகலும். வெளியூர்ப் பயணம் உண்டு. தந்தையின் உடல் நலத்தில் கவனம் தேவை. வாகனங்களில் முதலீடு உண்டாகும். பங்குச்சந்தை லாபம் தரும். மனதில் உற்சாகம் அதிகரிக்கும். இடமாற்றத்தால் இனிய தகவல் உண்டு. எதிர்பார்த்த பதவி உயர்வு கிட்டும். பிள்ளைகளின் தொல்லைகள் அகலும். நண்பர்களால் நன்மையுண்டு. விரக்திகள் மறையும். பணத்தேவைகள் பூர்த்தியாகும். நியாயம் ஜெயிக்கப் போராடுவீர்கள். பேச்சில் நிதானம் தேவை. வங்கி சேமிப்பு உயரும். முத்தான வாய்ப்பு பெருகும். சுபகாரியங்கள் நடந்தேறும். திட்டமிட்ட காரியங்கள் வெற்றி முகமாகும். கல்வியில் கவனம் தேவை. கடன் வசூலாகும். புத்தி சாதுர்யம் பெருகும். வாழ்க்கைத் துணையால் வளம் பெருகும். பால்ய நண்பர் சந்திப்பு கிட்டும். அணிமணிகள் சேரும். திருமண தீபம் சுடர்விடும். பணம் புரளும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ கனக துர்க்கை அம்மன், அதிர்ஷ்ட எண்: 3,9,6,5
அதிர்ஷ்ட நிறம்: வெளிர் நீலம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Z,L




**ரிஷபம்:** மனக்கவலைகள் விலகும் வாரம். பாதகமான சூழ்நிலைகள் அகலும். கணவன், மனைவி உறவு மேம்படும். புதிய முதலீடு தவிர்க்கவும். உடல்நலம் சீராகும். சகோதரியினால் நன்மை உண்டு. அரசு வழியில் ஆதாயம் உண்டு. பிள்ளைகளால் மனக்கசப்பு வந்து நீங்கும். பதவி உயர்வு கிட்டும். வேண்டாத விஷயங்கள் விலகும். வீடு, மனை ஆசைகள் பூர்த்தியாகும். தொழில் அபிவிருத்தி அடையும். வாயில் தேடி வரன் வரும். பயணங்களால் பணம் கரையும். நினைத்த காரியம் நிறைவேறும். பெற்றோர்களின் ஆசி கிட்டும். பெண்களுக்கு வேலை பளு அதிகரிக்கும். அரசியல் ஆதாயம் தரும். உறவினர் வழியில் செலவுகள் உண்டு. பிரிந்த குடும்பம் ஒன்று சேரும். விவசாயிகள் கோரிக்கை நிறைவேறும். ஏற்றுமதி தொழில் லாபம் தரும். பெற்றோர் உடல்நலத்தில் அக்கறை தேவை. காதலர்களுக்குள் மனக்கசப்பு நீங்கும். திருப்தி பெருகும். பித்ருக்கள் சாபம் நீங்கும். பொதுப்பணிகளில் ஆர்வம் கூடும். பழைய பகை தீரும். பூர்வீகச் சொத்துக்கள் கிடைக்கும். மறைமுக எதிர்ப்புக்கள் விலகும். தர்மச் சிந்தனைகள் மேலோங்கும். உத்தியோகத்தில் மதிப்பும், மரியாதையும் உயரும். பெண்களின் ஆலோசனை பயன் தரும். நட்டமில்லாத காரியம் கூடும். புது முயற்சிகளை தள்ளி வைக்கவும். விளையாட்டில் கவனம் தேவை. மாற்று யோசனை பயன் தரும். வருமானம் திருப்தி தரும். காதலர்கள் தம்பதியாவார்கள். தொலைதூரப் பயணம் ஏற்படும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ அங்காள பரமேஸ்வரி, அதிர்ஷ்ட எண்: 5,3,2,7
அதிர்ஷ்ட நிறம்: காவிநிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: O,Z




**மிதுனம்:** கண்ணியமும் புண்ணியமும் சேரும் வாரம். மனோ பயம் அகலும். வாழ்க்கையில் பிடிப்பு அதிகரிக்கும். உறவினர் வருகை உற்சாகம் தரும். பெற்றோர்களின் அன்பு அதிகரிக்கும். குடும்பத்தில் குதூகலம் ஏற்படும். தொழில் ரகசியம் காப்பாற்றப்படும். புண்ணியக் காரியங்களில் ஈடுபடுவீர்கள். சுறுசுறுப்பு பெருகும். சொத்துக்களால் லாபம் உண்டாகும். கலவரமான சூழ்நிலை காணப்படும். வஸ்திர தானம் செய்வதால் வளங்கள் சேரும். தகுதிகள் மிகுதியாகும். விவேகமான பேச்சுக்களால் வீண் வம்பு அகலும். திறமைகள் வெளிப்படும். மன நெருக்கடிகள் தீரும். பணப்புழக்கம் அதிகரிக்கும். முதலீடுகளால் முன்னேற்றம் உண்டாகும். வீண் வம்புகள் ஒழியும். பால்ய நண்பர் சந்திப்புக் கிட்டும். பயணம் வெற்றி தரும். ஆபரணச்சேர்க்கை உண்டு. இரும்புத்தொழில் ஏற்றம் தரும். சூழ்நிலைகள் சாதகமாகும். இல்லத்தில் மேன்மை ஏற்படும். இல்லத்தில் நல்ல காரியம் நடைபெறும். வாழ்வில் வசந்தம் கூடும். கனவுகள் பலிதமாகும். குடும்ப கௌரவம் உயரும். பேச்சில் நிதானம் தேவை. வளமான சிந்தனை உதயமாகும். ஆசிரியர்களுக்கு அற்புதமான வாய்ப்பு வரும். பூமியால் லாபம் உண்டு. நூதன பொருள் சேர்க்கையுண்டு. பொல்லாதவர்கள் தொல்லை ஒழியும். குடும்பத்தில் பல வகைகளில் நன்மை ஏற்படும். நீண்ட நாள் முயற்சி நிறைவேறும். வரவுக்கு மீறிய செலவு ஏற்படும். வெளியூர் பயணம் வெற்றி தரும். வழக்குகளில் திருப்பம் ஏற்படும். பெண்களுக்கு அணிகலன் சேரும். பெருமிதம் நிறைந்த காலம். இடையூறுகள் அகலும்.

வழிபட வேண்டிய தெய்வம்: திருத்தணி முருகப்பெருமான், அதிர்ஷ்ட எண்: 2,9,8,6
அதிர்ஷ்ட நிறம்: ஆழ்ந்த சிகப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: S,K




**கடகம்:** சினத்தைத் தவிர்க்க வேண்டிய வாரம். குடும்ப ஒற்றுமை அதிகரிக்கும். மருத்துவச் செலவுகள் குறையும். பிள்ளைகள் நலனில் அக்கறை தேவை. கமிஷன் தொழில் லாபம் தரும். வியாபாரிகளுக்கு லாபம் அதிகரிக்கும். ஆன்மீகப் பயணம் மேற்கொள்வீர்கள். புதிய முயற்சிகள் பலன் தரும். போட்டி பொறாமைகள் விலகும். வருமானம் திருப்தி தரும். வாகன மாற்றம் உண்டு. மாற்று யோசனை பயன் தரும். பெற்றோர் வழியில் பிரியம் கூடும். புதிய வேலை வாய்ப்பு கிட்டும். வயிற்று சம்பந்தமான நோய் வந்து நீங்கும். மகிழ்ச்சியான செய்தி வரும். தொழில் அபிவிருத்தி அடையும். சிரமப்பட்ட காரியங்கள் நிறைவேறும். உற்சாகம் களைகட்டும். வேண்டாத உறவுகளை தவிர்க்கவும். பொதுப்பணிகளில் ஆர்வம் கூடும். புத்துணர்வோடு செயல்படுவது நல்லது. பேச்சுத்திறமை அதிகரிக்கும். ஏற்றமதி தொழிலில் கவனம் தேவை. மாணவர்கள் திறமை பளிச்சிடும். குடும்ப ஒற்றுமை பலப்படும். உதவிகள் கிடைக்கும். அரசு வாய்ப்பு தடைப்படும். சகோதர உதவி கிட்டும். இலக்கிய ஆர்வம் கூடும். முயற்சிகள் வெற்றி தரும். தாய், தந்தை உதவி உண்டு. சுபச்செலவுகள் அதிகரிக்கும். மனை வாங்கும் ஆர்வம் அதிகரிக்கும். ஆறுதலான சூழ்நிலை அமையும். திருமகள் கிருபை உண்டு. பழைய நண்பரை சந்திக்க நேரிடும். பணியில் கண்டிப்பு அவசியம். வழக்குகள் முடிவுக்கு வரும். ஏற்றமும், மாற்றமும் அதிகரிக்கும். பக்குவமான பேச்சு பயன் தரும். மற்றவர்களிடத்தில் மரியாதை உயரும். நலம் காணும் வாரம். திடீர் திருப்பம் ஏற்படும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஆதித்ய பகவான், அதிர்ஷ்ட எண்: 6,9,2,4
அதிர்ஷ்ட நிறம்: சிகப்பு (செந்நிறம்), அதிர்ஷ்ட எழுத்துக்கள்: C,Q




**சிம்மம்:** உற்சாகத்தோடு செயல்படும் வாரம். ஆடை அணிகலன் சேரும். பேச்சுத்திறமை அதிகரிக்கும். ஏற்றுமதி தொழிலில் கவனம் தேவை. உடல்நிலையில் கவனம் தேவை. எண்ணங்கள் மாறுபடும். மனைவியின் பேச்சு ஆறுதல் தரும். குடும்ப பாசம் அதிகரிக்கும். விருப்பமான தொழில் அமையும். கடன் சுமை குறையும். பணியில் ஆர்வம் ஏற்படும். பெரிய வாய்ப்புக்கள் தேடி வரும். அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் அலைமோதும். எதிர்ப்புக்கள் ஓடி ஒழியும். நீண்ட நாள் கனவு நிறைவேறும். கன்னிப்பெண்களிடம் செயல்களில் துணிவு கூடும். மகான்களின் சந்திப்பு கிட்டும். எதிரிகள் ஏமாற்றம் அடைவர். மனைவியின் பிரார்த்தனை மாற்றத்தை ஏற்படுத்தும். குடும்ப கௌரவம் உயரும். ஆலோசனை பலன் தரும். மற்றவர்களால் அனுகூலம் உண்டு. வாகன செலவு ஏற்படும். புதிய நட்பு உருவாகும். இடமாற்றம் நன்மை தரும். விருந்தினர் வருகை உற்சாகம் தரும். வீடு தேடி வெற்றி வரும். கலைத்துறையில் முன்னேற்றம் கொடுக்கும். எதிரிகள் பலம் குறையும். பொருளாதார வளம் மேம்படும். திருமண வாய்ப்பு கூடி வரும். துணிவோடு செயல்படுவீர்கள். சொத்துச் சேர்க்கை உண்டு. புதிய தொழில் வாய்ப்பு உருவாகும். வெளிநாட்டுப் பயணம் உண்டு. கணவன், மனைவி சச்சரவு ஏற்படும். முன்கோபம் தவிர்க்கவும். மாணவர்களுக்கு உற்சாகம் கூடும். பிரச்சனை முடிவுக்கு வரும். பறவைகளுக்கு உணவளித்து பலன் பெறலாம். குழந்தைகளால் பெருமை சேரும். குடும்ப அன்யோன்யம் கூடும். வீடு, மனை யோகம் உண்டு. வழக்கு வெற்றி தரும். மனதில் உற்சாகம் கூடும். மாணவர்களுக்கு மகிழ்ச்சி கூடும். மெத்தனப் போக்கு விலகும். பேச்சில் இனிமை கூடும். சான்றோர்களின் சந்திப்பு கிட்டும்.

வழிபட வேண்டிய தெய்வம்: வீரமுக ஆஞ்சநேயர், அதிர்ஷ்ட எண்: 1,4,5,9
அதிர்ஷ்ட நிறம்: வைலட், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: L,S




**கன்னி:** பெண்களால் ஆதாயம் வரும் வாரம். உடல்நலம் சீராகும். அந்தஸ்து உயரும். புதிய நட்பு ஏற்படும். விவசாயம் பலன் தரும். அரசு வழி ஆதாயம் உண்டு. குடும்ப அன்யோன்யம் கூடும். நண்பர்களால் உதவி உண்டு. சுபச்செலவு அதிகரிக்கும். கடன் பிரச்சனைகள் அகலும். கவலைகள் ஒழியும். பால் தானம் பாக்கியம் சேர்க்கும். அனுகூலமான காலம். பூமியால் லாபம் உண்டு. பதவி வாய்ப்பு வரும். பாதகமான சூழ்நிலை விலகும். கல்வியில் ஆர்வம் கூடும். குதூகலமான மனநிலை காணப்படும். புத்திரர்களால் மேன்மை உண்டு. அடுத்தவர் தலையீடு தவிர்க்கவும். ஆடம்பர சுகங்கள் கூடும். முயற்சிகள் பலன் தரும். மங்களச் செய்திகள் வரும். கமிஷன் தொழில் லாபம் தரும். மருத்துவச் செலவு உண்டு. பொன், பொருள் சேரும். பாராட்டுக்கள் குவியும். வெளியூர்ப் பயணம் வெற்றி தரும். நீண்ட நாள் கனவு நிறைவேறும். மற்றவர் உதவி கிட்டும். மனக்குழப்பம் நீங்கும். திடீர் லாபம் உண்டு. திருமண வாய்ப்புக் கூடி வரும். பேச்சில் நிதானம் தேவை. ஞாபக மறதி ஏற்படும். உறவினர் வழியில் செலவுகள் அதிகரிக்கும். உத்தியோக ஈடுபாடு குறையும். ஆபரணச் செலவுகள் கூடும். யோகமான காலமாக அமையும். கணவன், மனைவி அன்பு அதிகரிக்கும். தொழில் மேன்மை உண்டு. காதல் கசக்கும். திருத்தமான முடிவு ஏற்படும். வருத்தங்கள் மறையும். அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் கூடி வரும். பொறுப்புக்கள் சிறப்பு சேர்க்கும். திட்டம் வெற்றி பெறும். ஆக்கப்பூர்வமான எண்ணம் உதயமாகும். ஆபரணப் பொருள் களவு போகும். அனுகூலச் செய்தி வந்து சேரும். வாயில் தேடி வாய்ப்பு வரும். காரியங்கள் கைகூடும். வங்கிச்சேமிப்பு உயரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: கற்பக மூர்த்தி, அதிர்ஷ்ட எண்: 9,5,3,2
அதிர்ஷ்ட நிறம்: கிளிப்பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: R,J




**துலாம்:** பயணத்தால் அனுகூலம் தரும் வாரம். விவேகமான பேச்சுக்களால் தொல்லைகள் அகலும். திறமைகள் வெளிப்படும். ஊக்கம் அதிகரிக்கும். உடன்பிறப்புக்களால் உதவி கிடைக்கும். மன நெருக்கடிகள் தீரும். பணப்புழக்கம் அதிகரிக்கும். முதலீடுகளால் முன்னேற்றம் உண்டு. தாய்ப்பாசம் அதிகரிக்கும். பணவரவு பெருகும். வம்புதும்புகள் ஒழியும். நீண்ட நாளைய ஆசை நிறைவேறும். தொலைதூரப் பயணம் ஏற்படும். பணியாளர்களின் ஒத்துழைப்பு கிட்டும். விவசாயிகள் கோரிக்கைகள் நிறைவேறும். காதலர்களுக்கு கையிருப்பு கரையும். வியாபாரம் விருத்தியாகும். சகோதர வழியில் சந்தோஷம் கூடும். தொழில் போட்டி மறையும். உறவினரால் உதவிகள் கிட்டும். ஆபத்துக்கள் விலகும். ஆபரணச் சேர்க்கையுண்டு. திருமணப் பேச்சு முடிவிற்கு வரும். இல்லத்தில் மேன்மைகள் ஏற்படும். பொது வாழ்வில் புகழ் கூடும். மங்கள நிகழ்ச்சிகள் நடைபெறும். புதிய ஒப்பந்தம் கையெழுத்தாகும். இரும்புத்தொழில் ஏற்றம் தரும். அந்நிய தேசப் பயணம் உண்டு. அரசுத்துறையில் ஆதாயம் உண்டு. வாழ்த்துச் செய்திகள் வரும். தர்மச் சிந்தனை மேலோங்கும். விளையாட்டுத் துறையில் வெகுமதி உண்டு. பழைய பகை தீரும். கடன் அமையும். அணிமணிகள் சேரும். திருமண தீபம் சுடர் விடும். பங்குச்சந்தையில் பணம் புரளும். எதிலும் வெற்றி கிட்டும். குடும்பத்தில் மகிழ்ச்சிப் பொங்கும். ஏற்றங்கள் அதிகரிக்கும். உளுந்து தானம் சிறந்த பலன் சேர்க்கும். வாழ்க்கைத் துணையால் வளம் பெருகும். கொடுக்கல், வாங்கலில் சுமூக நிலை ஏற்படும். மனதில் தெம்பும், தைரியமும் கூடும். செய்த்தொழில் வியாபாரம் சிறக்கும். நினைத்தது நடக்கும். விலை உயர்ந்த பொருட்களில் முதலீடு உண்டாகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: வீர அண்ணாமலையார், அதிர்ஷ்ட எண்: 7,9,2,4
அதிர்ஷ்ட நிறம்: இந்திர நீலம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: K,G




**விருச்சிகம்:** வெற்றிச் செய்தி வரும் வாரம். இளைஞர்களுக்கு படிப்பிற்கு ஏற்ப உத்தியோகம் கிட்டும். நீண்ட தூரப்பயணம் லாபம் தரும். கணவன், மனைவி உறவு இனிக்கும். பங்குச்சந்தை லாபம் தரும். செய்த்தொழிலில் முன்னேற்றம் உண்டு. புதிய வாகனங்களால் முதலீடு உண்டாகும். அரசியல்வாதிகள் ஆன்மீகவாதிகள் உத்தியோகஸ்தர்கள் ஏற்றம் பெறுவார்கள். பிள்ளைகள் வழியில் மகிழ்ச்சி கிட்டும். தன்னம்பிக்கையும், துணிச்சலும் மேலோங்கும். வேண்டும் வரம் கிட்டும். நட்பு வட்டம் விரிவடையும். வெளிநாட்டுத் தொடர்பு ஆதாயம் தரும். புதுமைகள் நிறைந்த காலம். நீண்ட நாளைய நோய் விலகும். பெண்களின் விருப்பம் ஈடேறும். உள்ளம் மகிழும். வெளிவட்டாரப் பழக்கங்கள் அதிகமாகும். உல்லாசப் பயணம் இனிக்கும். எதிர்கால தேவைகள் பூர்த்தியாகும். தெளிவான முடிவுகள் உதயமாகும். மனிதநேயம் மிகுதியாகும். வயிற்று உபாதைகள் வந்து போகும். பெற்றோர்களால் பெருமை சேரும். தெய்வத் திருப்பணியில் ஆர்வம் கூடும். தடைகள் விலகும். கேட்ட இடத்தில் பணம் கிடைக்கும். தேக ஆரோக்கியம் மிளிரும். அச்சுத்தொழில் ஆதாயம் தரும். வியாபாரிகளுக்கு லாபம் அதிகரிக்கும். பங்குச்சந்தை லாபம் தரும். நண்பர்கள் சந்திப்பு நன்மை பயக்கும். கணவரிடத்தில் மதிப்பு உயரும். உழைப்பு கடுமையாக இருக்கும். விரக்திகள் விலகும். வாயில் தேடி வாய்ப்புக்கள் வரும். வரவுகள் மிகுதியாகும். சுறுசுறுப்பு அதிகமாகும். காலை நேரத்தில் இனிய செய்திகள் வரும். கமிஷன் தொழில் லாபம் தரும். புண்ணியம் சேரும். வேதனைகள் சாதனையாகும். பெண்களால் பெருமை சேரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: சிவபெருமான், அதிர்ஷ்ட எண்: 2,9,8,1
அதிர்ஷ்ட நிறம்: அடர்ந்த சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: D,T

*(தொடர்ச்சி 26 பக்கம்)*

# வடக்கு மாகாண ஆளுநருக்கு எதிராக ஜனாதிபதியிடம் முறைப்பாடு

**- எமது யாழ்ப்பாணம் செய்தியாளர்**



**வ**டக்கு மாகாண ஆளுநரால் நிறைவேற்றப்பட்ட நியதிச் சட்டம் தொடர்பில் ஜனாதிபதியிடம் முறைப்பாடு செய்யப்படுவதாக வடக்கு மாகாண அவைத்தலைவர் சி.வி. கே சிவஞானம் தெரிவித்தார்.

அவைத் தலைவரின் அலுவலகத்தில் ஞாயிறு (26) நடாத்திய ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதை தெரிவித்தார்,

வடக்கு ஆளுநர் இந்த ஆண்டு அக்டோபர் மாதம் 27ஆம் திகதி நியதிச் சட்டங்கள் என்று சொல்லப்படுகின்ற இரண்டினை வர்த்த மானியில் பிரசுரித்துள்ளார். ஒன்று வாழ்வாதாரம் தொடர்பான விடயம் இரண்டாவது சுற்றுலா தொடர்பான விடயங்கள் என்ற இரண்டு நியதிச் சட்டங்களையும் நிறைவேற்றியுள்ளார். இந்த இரண்டுமே ஆளுநருடைய அதிகார வரம்பிற்கு அப்பாற்பட்டதும் சட்டவிரோதமான விதமான முறையற்றது. இந்த விடயம் மாகாண சபைகள் சம்பந்தமான அரசியலமைப்பு மற்றும் மாகாண சபைகள் கட்டளை சட்டத்திற்கு முரணானது என்று சிவஞானம் தெரிவித்தார்.

மாகாண சபை சட்டத்தின் படி ஆளுநர் தனது அதிகாரங்களை ஜனாதிபதியின் பணிப்புரையின் பெயரால் செயல்படுத்த முடியும் என்றுள்ளது. எனவே ஆளுநருக்கு சட்டவாக்க அதிகாரம் எந்த இடத்திலும் கொடுக்கப்படவில்லை, எந்த இடத்திலும் ஆளுநர் சட்டம் இயற்றலாம் என்றும் குறிப்பிடப்படவில்லை என்பதையும் வடக்கு மாகாண அவைத்தலைவர் சுட்டிக்காட்டினார்.

"இவர் எதேச்சியதிகாரமாக இந்த இரண்டு நியதிச் சட்டங்களையும் பிரகடனப்படுத்தியுள்ளார். மாகாண சபைகளிடம் இருக்கக்கூடிய அதிகாரங்களையும் ஜனாதிபதியின் பிரதிநிதியாக ஆளுநர் பறித்தெடுக்கின்றார் என்பதே இந்த நியதிச் சட்ட உருவாக்க முயற்சியில் உள்ள விடயம். அதனை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கின்றோம். இது பாரதூரமான ஒரு விடயம் அரசியல் ரீதியாக கண்டிக்கப்பட வேண்டிய விடயம் அரசியல் ரீதியில் பாதிப்பான விடயம். எங்களுக்கு இருக்கக்கூடிய அதிகாரங்களையும் பறிக்கக் கூடிய ஒரு செயற்பாடாக காணப்படுகின்றது".

இந்த விடயத்தில் தாங்கள் விழிப்பாக இருக்க வேண்டியது மிகவும் அவசியமானது என்று வலியுறுத்திய சிவஞானம், ஆளுநர் தன்னை அதிகாரமாக கேட்பதற்கு யாரும் இல்லை என்ற நிலையில் செயற்படுகின்றார். எனவே இந்த விடயம் தொடர்பில் உடனடியாக ஜனாதிபதிக்கு தெரியப்படுத்துவதற்கு தாங்கள் தீர்மானித்துள்ளதாகவும் உடனடியாகவே ஜனாதிபதி மற்றும் உள்ளூராட்சி அமைச்சருக்கும் இந்த விடயத்தினை தெரியப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றார்.

நாட்டின் அரசியல் யாப்பு மற்றும் சட்ட நியமங்களின்படி தனக்கு அதிகாரமற்ற நிலையில் அதற்கு முரணாக ஆளுநர் நியதிச் சட்ட உருவாக்கம் தொடர்பில் வர்த்தமானி அறிவித்தல் வெளியிட்டமை அறியப்பட்டுள்ளது. அது கண்டிக்கத்தக்கது என்றார் வடக்கு மாகாண சபையின் அவைத்தலைவர்.



அரசியலமைப்பின் பிரகாரம் மாகாண நியதிச் சட்டங்களை உருவாக்கும் அதிகாரம் மக்களால் தேர்வு செய்யப்பட்ட சபைகளிற்கு உரியதே அன்றி மாகாண ஆளுநருக்கு கிடையாது. இருப்பினும் வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா 2022-10-27 அன்று வட மாகாணத்தின் வாழ்வாதார முகாமைத்துவ சேவைகள் நியதிச் சட்டம் மற்றும் சுற்றுலாப் பணியகம் நியதிச் சட்டம் என இரு நியதிச் சட்டங்களை 2303/29 இலக்க வர்த்தமானி அறிவித்தலின் மூலம் பகிரங்கப்படுத்தியுள்ளார்.

இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் அரசியலமைப்பின் 154-எ-01 இன் பிரகாரம் "ஒவ்வொரு மாகாண சபையும் 9 ஆம் அட்டவணையின் முதலாம் நிகழ்ச்சி நிரலின் (மாகாண சபை நிரல்) ஏதேனும் கருமம் தொடர்பில் எம்மாகாணத்திற்கென அச்சபைபை ஸ்தாபிக்கப்பட்டதோ அம்மாகாணத்திற்கு ஏற்புடையதான நியதிச் சட்டங்களை ஆக்கலாம்" என்றே தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது.

"ஆளுநருக்கு தனக்குரிய பணியே தெரியவில்லை. தெரியாதுவிடின் அனுபவம் உடையவர்களிடம் கேட்டுச் செயல்படலாம் அதுவும் தவறு கிடையாது. அல்லது அரசியலமைப்பைப் படித்தால் புரியும்.

மாறாக அரச சார்பற்ற நிறுவனம் ஒன்றின் இயக்குநர் கீழ் பணியாற்றும் பணியாளர்களிற்கு உத்தரவு போடுவது போன்று செயல்பட்டு ஆளுநர் பதவியைக் கொச்சைப்படுத்தக் கூடாது".

ஓர் ஆளுநர் நியதிச் சட்டத்தை நிறைவேற்றும் அதிகாரம் உண்டு என வடக்கு மாகாண ஆளுநர் விவாதிப்பாரேயானால் அது தொடர்பில் பகிரங்க விவாதத்திற்கும் தான் தயாராகவே உள்ளேன் என வடக்கு மாகாண சபையின் முன்னாள் எதிர்க்கட்சி தலைவர் சி.தவராசா விமர்சித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# மனித உரிமை ஆர்வலர்கள் மீது ஜனாதிபதி தாக்குதல்

**இ**லங்கையில் மனித உரிமைப் பாதுகாவலர்கள் என அழைக்கப்படுவோர் வெளிநாட்டுப் பணத்தில் தங்கி வாழ்பவர்கள் என ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க பாரதூரமான குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

"நம்மிடம் இருக்கும் சில பாதுகாவலர்கள் டீசலில் ஓடுகின்றனர். இந்த டிபெண்டர்களும் டீசலில் ஓடுகிறார்கள். அவர்கள் தம்மை மனித உரிமை டிபெண்டர்கள் எனக் கூறிக்கொண்டு வெளிநாட்டில் இருந்து பணம் வாங்கி வாழ்கிறார்கள். இது உண்மைதானே".

Human Rights Defenders (HRD) எனப்படும் இலங்கையில் மனித உரிமைப் பாதுகாவலர்கள் துன்புறுத்தப்படுவது குறித்து ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணைக்குழுவும் கவனம் செலுத்தியுள்ளது.

மனித உரிமைகளுக்குள் அராஜகமும் வன்முறையும் நுழைவதில்லை எனவும் அது மனித உரிமைகளுக்கு முற்றிலும் எதிரானது எனவும் கூறும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, மனித உரிமைகளைப் பயன்படுத்தி அராஜகத்தையும் வன்முறையையும் உருவாக்க முடியாது என நவம்பர் 24 வியாழக்கிழமை நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

மனித உரிமைகள் என்ற பெயரில் வன்முறை செய்தவர்களை பாதுகாக்க முடியாது.

இலங்கையின் மனித உரிமை பாதுகாவலர்களை தாம் பாதுகாத்ததாக தம்பட்டம் அடித்த ஜனாதிபதி, அவர்களே தற்போது தமக்கு எதிராக கூச்சலிடுவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

"எனக்கு இவர்களை தெரியும். இவர்களுடன் நான் பணியாற்றியுள்ளேன். நான் அவர்களை பாதுகாத்தேன். இப்போது அவர்கள் என்னை நோக்கி கத்துகிறார்கள்".

மனித உரிமை செயற்பாட்டாளர்களுக்கு எதிராக ஜனாதிபதி வாய்மொழித் தாக்குதலை ஆரம்பித்த அன்றே முல்லைத்தீவு ஊடக மையத்திற்குள் நுழைந்த இலங்கை இராணுவத்தின் 591ஆவது படைப் பிரிவின் உறுப்பினர்கள் அங்கிருந்த செயற்பாட்டாளர்களின் விபரங்களை கேட்டறிந்தனர்.

நாடு கடும் நிதி நெருக்கடியில் சிக்கித் தவிக்கும் வேளையில் கல்வி மற்றும் சுகாதாரத்தை விடவும் நாட்டின் பாதுகாப்பிற்காக 410 பில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ள ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, இலங்கையின் மனித உரிமை பாதுகாவலர்களின் நிலைப்பாடு தொடர்பான காணொளியை கீழே காணலாம்.

# தாயகத்திலும் புலம் பெயர் தேசத்திலும் மாவீரர்களிற்கு அஞ்சலி



**- தாயகத்திலிருந்து நடராசா லோகதயாளன்**



**வி**டுதலைப் போரில் தமது இன்னுயிரை ஆகுதியாகிய வீரவித்துக்களை மாவீரர் தினத்தன்று தமிழ் மண்ணும் மக்களும் உணர்வெழுச்சியுடன் நினைவு கூர்ந்ததனர்.

எனினும் முல்லைத்தீவில் பொலிசார் சில கெடுபிடிகளை ஏற்படுத்தி, சிவப்பு - மஞ்சள் கொடிகள் மற்றும் மாவீரர் தினம் தொடர்பில் வைக்கப்பட்டிருந்த பதாதைகளை பிடிங்கி வீசி, அஞ்சலிக்கான ஏற்பாடுகளைச் செய்ய வந்திருந்த தமிழர்களை மிரட்டியும், படம் பிடித்த காணொளிகள் சமூக ஊடகங்களில் தீயாகப் பரவின.




1982 ஆம் ஆண்டு முதல் இறுதிப்போர் வரை விடுதலைப் போராட்டத்தில் தமது உயிர்களைத் தியாகம் செய்தவர்களை தாயகத்திலே வடக்கு கிழக்கின் சகல மாவட்டங்களிலும் நினைவேந்தியதோடு புலம் பெயர் தேசங்களிலும் தமிழ் மக்கள் உணர்வெழுச்சியோடு கடைப்பிடித்தனர்.

வடக்கு கிழக்கில் துயிலுமில்லங்கள், தனித்த நினைவிடங்கள், அரசியல் கட்சி அலுவலகங்கள், பல்கலைக்கழகம், விசேடமாக ஏற்பாடு செய்த இடங்கள் என தாயகத்தில் மட்டும் 50ற்கும் மேற்பட்ட இடங்களில் சுடர்கள் ஏற்றி அஞ்சலி செலுத்தப்பட்டன.

மாவீரர்களின் பெற்றோர் மாலை 6.05ற்கு பிரதான சுடர் ஏற்றியதை அடுத்து மாவீரர்களின் உறவுகளும் அகவணக்கம் செலுத்தி தனித்தனியான சுடர்களையும் ஏற்றினர்.

தாய் மண்ணிற்காக தம்மையே கொடையாக கொடுத்தவர்களின் நினைவைப் போற்றும் வகையிலான உணர்வுபூர்வமான இந்த அஞ்சலி நிகழ்ச்சி யாழ்ப்பாணத்திலே கோப்பாய், கொடிகாமம், சாட்டி, உடுத்துறை எள்ளங்குளம் துயிலுமில்லங்களிலும் பல்கலைக்கழகம், நல்லூர் வீதி, தீருவில், தமிழரசு கட்சி அலுவலகம் ஆகிய இடங்களிலும் கிளிநொச்சியில் கனகபுரம், முழங்காவில் துயிலுமில்லங்களில் மிகப் பிரமாண்டமான முறையில் மக்கள் எழுச்சியுடன் இடம்பெற்றது.



ரத்தக்களறியுடன் உள்நாட்டுப் போர் முடிவுக்கு வந்த முல்லைத்தீவு மாவட்டத்தில் தேராவில், முள்ளியவளை, ஆலங்குளம், வன்னிவிளாங்குளம், அலம்பில், உள்ளிட்ட இடங்களிலும் வவுனியாவில் ஈச்சங்குளம் துயிலுமில்லத்திலும் நகர சபை உள்ளக மண்டபத்திலும் அஞ்சலிகள் இடம்பெற்றதோடு மன்னார் மாவட்டத்தில் ஆட்காட்டிவெளி மற்றும் பண்டிவிரிச்சான் துயிலுமில்லங்களிலும் இடம்பெற்றன.

தமிழர் தாயகத்தின் கிழக்கில் மட்டக்களப்பு மாவட்டத்தில் மாவடிமுன்மாரி, தரவை, வாகரை, கண்டலடி துயிலுமில்லங்களிலும் தாண்டியடியிலும் உணர்வுபூர்வமாக தமிழ் மக்கள் அஞ்சலிகளைச் செலுத்தினர்.

இதேபோன்று திருகோணமலை ஆழங்குளம் மற்றும் அம்பாறை மாவட்டத்தின் கஞ்சிகுடிச்சாறு துயிலுமில்லங்களிலும் நினைவுகூரல் நிகழ்வுகள் நடைபெற்றன.

இவ்வாறு இடம்பெற்ற நினைவேந்தலில் கிளிநொச்சி கனகபுரம் துயிலுமில்லத்தில் மிக அதிக உறவுகள் கலந்துகொண்டிருந்தனர். இதேநேரம் முல்லைத்தீவு மாவட்டத்தில் இறுதியுத்த காலத்தில் அதிக துயிலுமில்லங்கள் ஏற்பட்ட நிலையில் அனைத்து இடங்களிலும் நினைவேந்தல்கள் இடம்பெற்றன.

# ஈழத்துத் திருக்கோவில்கள் 1025



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி.வசந்தா நடராசன் B.A.,
(416) 332-0269 vasantha@rogers.com



## ஆரையம்பதி ஸ்ரீ பரமநயினார் (ஐயனார்) கோயில் மட்டக்களப்பு

"கரந்தைபுனை கண்ணுதலுங் கண்ணன் றானும்
களிப்புடனே கலந்துதவு காரி தன்மேல்
உரந்தரு பொன்னூஞ்சலிசை ஓதுதற்கு
உம்பல்முகத் துடனுதித்தெய் வுலகு முய்யப்
புரந்தரன்பூ சனையியற்றப் பொன்னி யாற்றைப்
பூங்காவில் வரச் செய்த புனிதன் றன்னை
நிரந்தரமா யுயிர்தோறும்தம் நிறைந்து நிற்கும்
நின்மலனாய் ஐங்கரன்றாள் நினைகுவாமே."

காவும் பொழிலும் கழிமுகமும், புள்ளணிந்து ஏரியும், இலங்கையின் சீரார் குணதிசையில், ஏரால் இயன்ற செந்நெல் இன்சுவை, தெங்கின் இளநீரும் தீம்பலாவின் கனிகளும் எங்கும் குறையாது வழங்கும் நன்னாடு எனப் பல்லோராலும் போற்றப்படும் தகமை சான்ற திருநாடு மட்டக்களப்பு. இத்தகைய இயற்கை எழில்சூழ் மட்டக்களப்புத் திருநாட்டின் தென்பால், ஆரையம்பதி என்னும் அழகிய கிராமம் காணப்படுகின்றது. ஆரையம்பதியின் எல்லைகளாக தெற்கே தாழங்குடாவும், மேற்கே வாவியும், கிழக்கே கடலும், வடக்கே காத்தான்குடியும், அமைந்துள்ளன.

ஆரையம்பதியின் முகத்துவாரம் தெரு சனத்தொகை கூடிய பிரதேசமாகக் காணப்படுகின்றது. ஆரையம்பதியின் முகத்துவாரமாய் விளங்கியதால் முகத்துவாரம் தெரு எனக் காரணப்பெயர் ஏற்படலாயிற்று. ஸ்ரீ பரமநயினார் கோயிலென வழங்கும் ஐயனார்கோயில் முகத்துவாரம் தெருவிலுள்ளது. பரமநயினார் என்னும் பெயரானது, எல்லாம்வல்ல இறைவன் என்னும் பொருள் கொண்டதாகக் காணப்படுகின்றது. அத்தோடு பரமநயினார் என்னும் பெயர் எல்லாம் வல்லவரான ஐயனாரைக் குறிப்பதாகவும் அமைகின்றது. இந்தியா. யாழ்ப்பாணம், முல்லைத்தீவு போன்ற இடங்களிலிருந்து கதிர்காம யாத்திரை செல்பவர்கள், மட்டக்களப்பிலுள்ள ஆரையம்பதி ஊடாகச் செல்வதை வழக்கமாகக் கொண்டிருந்துள்ளனர். ஏறக்குறைய 150 வருடங்களுக்கு முற்பட்ட காலப்பகுதியிலே, கதிர்காமம் செல்வதென்பது மிகவும் கடினமான விடயமாகக் காணப்பட்டுள்ளது. சீரற்ற பாதைகள், காட்டுவழியால் பிரயாணம், வனவிலங்குகளால் ஆபத்து, காட்டுப்பாதையால் செல்லும்போது அப்பகுதி அரசாங்க அதிபரின் அனுமதியைப் பெறவேண்டிய கட்டாயம், எனப் பலவற்றைத் தாண்டியே கதிர்காமத்தை அடைய வேண்டியிருந்தது.

இவ்வாறு செல்வோர் யாவரும் கதிர்காமத்தைச் சென்றடைவதில்லை. பலர் வழியிலுள்ள கிராமங்களிலே தங்கிப் பின்னர், அவற்றையே தமது சொந்த இடமாகக் கொள்வதும் உண்டு. கதிர்காமம் செல்லப் புறப்பட்டுச் சென்ற பலர் இவ்வாறு ஆரையம்பதியிலே தங்கி, அதனையே தமது ஊராகக் கருதி வாழ்ந்துள்ளனர். யாழ்ப்பாணத்திலிருந்து கதிர்காம யாத்திரை புறப்பட்ட ஒருவரே, இவ்வாறு தங்கி, ஆரையம்பதியில் ஐயனார் வழிபாட்டை அறிமுகம் செய்தார் என்பது ஐதீகமாகக் காணப்படுகின்றது. பரமநயினார் என்னும் பெயருள்ள ஐயனார் கோயில்கள் காலப்போக்கில் செங்கலடி, தாழங்குடா என்னும் ஊர்களிலும் உருவாக்கப்பட்டன. ஐயனார் வழிபாடு ஈழத்திலே அருகியே காணப்படுகின்றது. ஆயினும் சப்த தீவுகளுள் ஒன்றாகிய அனலைதீவிலே, மிகப்பெரிய தேரைக் கொண்ட ஐயனார் கோவில் அமைந்துள்ளது. இப்பிரதேசத்தில் ஐயனார் வழிபாடு புகழ்பெற்ற வழிபாடாகவும் காணப்படுகின்றது. ஈழத்திலே ஐயனாரை வழிபட்ட மக்கள், புலம்பெயர்ந்த நாடுகளிலும் ஐயனாரின் அவதாரமான ஐயப்பன் வழிபாட்டைத் தொடர்ந்து வருவது குறிப்பிடத்தக்கது. இதன் பிரதிபலிப்பாக ஒவ்வொரு ஆண்டும் ஐயப்பபக்தர்கள் சபரிமலை சென்று தமது வேண்டுதலை நிறைவேற்றி வருகின்றனர்.

ஆரையம்பதியிலே அமைக்கப்பெற்ற ஐயனார் கோயில், பறங்கியர் காலத்தில் மறைந்துவிட்டது. பின்னர் பிரித்தானியர் ஆட்சிக்காலத்திலே குறிப்பிட்ட இடத்தில், ஐயனார்வழிபாடு மீண்டும் ஆரம்பமாகியது. இக்காலப்பகுதியில் பந்தலொன்றினை அமைத்து, ஆண்டுதோறும் வழிபாடு நிகழ்த்தி வந்துள்ளார்கள். பின்னர் 1930 ஆம் ஆண்டளவில் ஆலயமொன்றினைக் கல்லினால் மடாலயமாகக் கட்டி வழிபாடு செய்து வந்துள்ளனர். இம்மடாலயம் இரு மண்டபங்களைக் கொண்டதாகக் காணப்பட்டுள்ளது. இம் மண்டபங்களில் ஒன்று கருவறையாகப் பயன்படுத்தப்பட்டது. இங்கு அமைக்கப்பட்ட பீடமொன்றில் சூலம் அமைந்திருந்தது. நாள்தோறும் பிற்பகலில் ஊரவர் பரமநயினாருக்கு அவல், கடலை, ரொட்டி முதலியவற்றைப் படைத்து வழிபடுவது வழக்கமாகும். வெள்ளிக்கிழமைகளில் மட்டும் வழிபாடுகளும், பஜனைகளும் மிகச் சிறப்பாக நடைபெறும்.

1955 ஆம் ஆண்டு மடாலயமாக இருந்த பரமநயினார் ஆலயம் இடிக்கப்பட்டு, நித்திய, நைமித்திய கருமங்கள் செய்யத்தக்க முறையில், மக்கள் கொடுத்த நிதியின் உதவியுடன் ஆலயமொன்று அமைக்கப்பட்டது. கர்ப்பக்கிருகம், அர்த்த மண்டபம், மகா மண்டபம், தம்ப மண்டபம் ஆகிய அம்சங்களைக் கொண்டதாகப் பரமநயினார் கோயில் கட்டி முடிக்கப்பட்டது. 20 அடி உயரம் கொண்டதாகக் கர்ப்பக்கிருகம் அமைக்கப்பட்டது. இது சதுர வடிவில் ஒற்றைத் தளமாக அமைந்த, சிறிய விமானத்தைக் கொண்டுள்ளது. அதன் கிழக்குப் புறத்திலே வள்ளி தெய்வானை சமேத முருகப்பெருமானும், தெற்கிலே யோக தட்சிணாமூர்த்தியின் வடிவமும், அமைந்துள்ளன. மேற்கிலே கருடாரூட மூர்த்தியான மகாவிஷ்ணுவும், வடக்கிலே சிவபெருமானும், விநாயகரும் எழுந்தருளியள்ளனர். நாகதம்பிரான், வைரவர், சண்டேசுவரர், நவக்கிரகங்கள் ஆகிய பரிவார தேவர்களுக்கும், இங்கு ஆலயங்கள் அமைக்கப்பட்டுள்ளன. விநாயகர், வள்ளி தெய்வயானை சமேதரரான சுப்ரமணியர், சந்திரசேகரர், கண்ணகி ஆகியோரின் பஞ்சலோகத்தினாலான எழுந்தருளி விக்கிரகங்களும் இவ்வாலயத்திலே காணப்படுகின்றன.

கர்ப்பக்கிரகத்திலே அமைந்துள்ள பரமநயினாரின் வடிவம், ஆசனநிலையில் இடக்காலை உட்புறமாக மடித்து, வலக்காலைத் தொங்கவிட்ட கோலத்தில் அமைந்துள்ளது. ஒரு கரம் வரதஹஸ்தமாகவும், மறுகரம் செண்டினைத் தாங்கிய நிலையிலும் அமைந்துள்ளது. பரமநயினாரின் வலப்பக்கத்திலே பூரணையும், இடப்பக்கத்திலே புட்கலையும் குவளை மலர் ஏந்திய நிலையில் அமைந்துள்ளனர். பரமநயினாரின் எழுந்தருளி வடிவத்திலே, அவர் ஆசன நிலையிலும், தேவியர் ஸ்தானகநிலையிலும், இருப்பதைக் காணலாம். சுந்திர சேகரர், விநாயகர், முருகன் ஆகியோரின் எழுந்தருளி வடிவங்கள் ஸ்தானக நிலையிலே உள்ளன. 1982 ஆம் வருடம் சிவலிங்கம், மற்றும் உமாதேவியாரின் திருவுருவங்கள் முறையே மகாமண்டபத்தின் கிழக்கிலும், மேற்கிலும் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளன. இக்கோவிலில் வசந்த மண்டபமும் அமைந்துள்ளது. பரமநயினார், பூரணை, புட்கலை, உமாதேவியார் ஆகியோரின் பஞ்சலோக விக்கிரகங்களும் இக்காலப்பகுதியிலே உருவாக்கப்பட்டுள்ளன.

***வளரும்...***

## இவ்வார ராசிபலன்

*(24 பக்கத் தொடர்ச்சி)*




**தனுசு:** தந்தை வழி உறவுகளால் பெருமை சேரும் வாரம். குடும்ப ஒற்றுமை அதிகரிக்கும். புதிய பொருள் சேர்க்கையுண்டு. இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறும். தெய்வ நம்பிக்கை அதிகரிக்கும். வாழ்வில் வசந்தம் உண்டு. வியாபாரத்தில் வேகம் கூடும். வாயில் தேடி வரன் வரும். ஆசைகள் நிறைவேறும். பணமும், பாராட்டும் சேரும். மங்கள நிகழ்ச்சிகள் நடைபெறும். வெளியூர் பயணம் வெற்றி தரும். சொத்துக்கள் வில்லங்கம் விலகும். கனிவான பேச்சு அவசியம். மருத்துவச் செலவு குறையும். மதிநுட்பம் மாபெரும் வெற்றித் தரும். புதிய ஒப்பந்தம் கையெழுத்தாகும். எதிர்பார்த்த உதவியால் ஏற்றம் உண்டு. ஆசிரியர்களுக்கு அற்புதமான காலம். நூதன பொருள் சேர்க்கையுண்டு. போட்டி, பொறாமைகள் விலகும். சமுதாய விழிப்புணர்ச்சியோடு செயல்படுவது நல்லது. உடல்நலம் சீராகும். பொல்லாதவர்கள் தொல்லை ஒழியும். வரவுக்கு மீறிய செலவு ஏற்படும். புண்ணிய காரியங்களில் ஈடுபடுவீர்கள். நம்பிக்கை துளிர்விடும். வருமானம் திருப்தி தரும். காதலர்களுக்குள் கையிருப்பு கரையும். பணியாளர்களின் ஒத்துழைப்புக் கிட்டும். வியாபாரம் விருத்தியாகும். வாழ்க்கையில் பிடிப்பு ஏற்படும். இன்றைய பிரார்த்தனை நன்மையைக் கூட்டும். மங்களச் செய்தியால் மனம் மகிழும். நண்பர்களால் பாராட்டு கிடைக்கும். சிந்தனை மேலோங்கும். பாகப்பிரிவினை ஏற்படும். பழைய பாக்கிகளும் வசூலாகும். ஏற்றுமதி தொழிலில் லாபம் தரும். பொது விஷயங்களில் நாட்டம் ஏற்படும். பித்ருக்கள் சாபம் நீங்கும். குடும்பத்தினர்களின் அனுசரிப்பு கிட்டும்.
வழிபட வேண்டிய தெய்வம்: மீனாட்சி அம்மன், அதிர்ஷ்ட எண்: 9,5,4,3
அதிர்ஷ்ட நிறம்: ஊதா நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: G,L




**மகரம்:** மகிழ்ச்சி செய்தி வரும் வாரம். இடமாற்றம் நன்மை தரும். பெரியோர்களின் வாழ்த்து கிடைக்கும். உடன்பிறப்புக்களால் உதவி உண்டு. பணவரவு திருப்தி தரும். பொது வாழ்வில் புகழ் கூடும். செயல்பாட்டின் தீவிரம் கூடும். உரிய நேரத்தில் உதவிகள் கிடைக்கும். புதிய முதலீடுகளில் கவனம் தேவை. இனம் புரியா சந்தோஷம் மனதில் குடிக்கொள்ளும். கூட்டுப் பிரார்த்தனை நன்மை தரும். எதிரிகள் உதிரியாவார்கள். தொட்டக்காரியம் ஜெயமாகும். நீண்ட நாளைய நோய் விலகும். சேமிப்பு வளரும். தொழிலாளர்களுக்கு மனநிறைவு உண்டு. வியாபாரம் வெற்றி தரும். வெளியூர் பயணம் உண்டு. மாணவர்களுக்கு கல்வியில் ஆர்வம் கூடும். நியாயம் ஜெயிக்கப் போராடுவீர்கள். பேச்சில் நிதானம் தேவை. பொருளாதார நிலை உயரும். வரவுகள் அதிகரிக்கும். நல்லவர் நட்பு கிட்டும். தோற்றப் பொலிவு கூடும். பணத்தட்டுப்பாடு ஏற்படும். சகோதர உதவி கிட்டும். பேச்சுத்திறமை அதிகரிக்கும். பொறியியல் துறை லாபம் தரும். மாணவர்கள் திறமை பளிச்சிடும். அயல்நாட்டு பயணம் உண்டு. ஆன்மீகப் பயணம் மேற்கொள்வீர்கள். புதிய முயற்சிகள் பலன் தரும். கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவீர்கள். பழைய பாக்கிகள் வசூலாகும். நல்லோர்களின் சந்திப்பு கிட்டும். பெரியோர்களின் பாராட்டுக் கிடைக்கும். பெண்களுக்கு பெருமை சேரும். யோக பலன் கூடும். வம்பு வழக்குகள் தீரும். எண்ணங்கள் வண்ணமயமாகும். புதிய முயற்சிகளை தள்ளி வைக்கவும். பெற்றோர் வழியில் பிரியம் கூடும். தாய்வழி உறவில் விரிசல் ஏற்படும். கலவரமான சூழ்நிலை காணப்படும்.
வழிபட வேண்டிய தெய்வம்: அதிதேவதை, அதிர்ஷ்ட எண்: 6,9,5,4
அதிர்ஷ்ட நிறம்: குங்கும கலர், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: F,P




**கும்பம்:** பணவரவு அதிகரிக்கும் வாரம். காதலர்களுக்குள் மனக்கசப்பு ஏற்படும். பொது விஷயங்களில் நாட்டம் ஏற்படும். அரசு வழியில் கவனம் தேவை. ஏற்றுமதி தொழிலில் லாபம் அதிகரிக்கும். எதிரிகள் உதிரியாவார்கள். வேண்டாத உறவுகளை தவிர்க்கவும். பிரிந்த குடும்பம் ஒன்று சேரும். உறவினர் வழியில் செலவுகள் அதிகரிக்கும். மாற்றங்கள் ஏற்படும். கலைஞர்களுக்கு வாய்ப்பு வரும். கணவன், மனைவி வாக்குவாதம் ஏற்படும். பழைய நண்பர்களை சந்திப்பீர்கள். புதிய தொழில் வாய்ப்பு வரும். மனக்கசப்பு நீங்கும். பெண்களுக்கு வேலைப்பளு அதிகரிக்கும். கூட்டுப் பிரார்த்தனை மாற்றம் தரும். செல்வாக்கு மேம்படும். விளையாட்டுத் துறையில் லாபம் தரும். நிதானத்தோடு செயல்பட வேண்டும். மங்களச் செய்திகள் வரும். பித்ருக்கள் சாபம் நீங்கும். பெண்களின் ஆலோசனைகளால் ஆதாயம் பெருகும். முன் கோபத்தை குறைக்க வேண்டும். தொழில் முயற்சி வெற்றி தரும். இல்லம் தேடி வாய்ப்பு வரும். குடும்பத்தில் குழப்பங்கள் நீங்கும். பிள்ளைகளின் தொல்லைகள் அகலும். ஆக்கப்பூர்வ எண்ணம் உதயமாகும். தொழிலாளர்களுக்கு மன நிறைவு உண்டு. கடன் பிரச்சனைகள் நீங்கும். புத்தி சாதுர்யம் பெருகும். செய்த்தொழில் லாபம் சிறக்கும். பணத்தேவைகள் பூர்த்தியாகும். மன ஆரோக்கியம் சிறக்கும். வாழ்க்கைத்துணையால் வளம் பெருகும். கட்டிடத் தொழிலாளர்களுக்கு லாபம் அதிகரிக்கும். பயண முயற்சி பலன் தரும். உத்தியோகத்தில் நல்லபெயர் கிட்டும். தெய்வப்பணிகளில் ஈடுபாடு கூடும்.
வழிபட வேண்டிய தெய்வம்: குபேர பகவான், அதிர்ஷ்ட எண்: 2,9,4,6
அதிர்ஷ்ட நிறம்: இந்திர நீலம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: X,H




**மீனம்:** பணியில் பாராட்டு கிடைக்கும் வாரம். வாகனச் செலவு ஏற்படும். புதிய முயற்சியில் ஈடுபடலாம். அலைச்சல் குறையும். மன நிம்மதி குறையும். தன சேர்க்கை உண்டு. கூட்டுத்தொழில் லாபம் தரும். உயர்வுகள் தாமதமாகும். ஆதாயம் பெருகும். உத்தியோகத்தில் நற்பெயர் கிட்டும். நண்பகலில் நல்ல தகவல் வரும். வேலைப்பளு அதிகரிக்கும். அத்தியாவசிய செலவுகள் அதிகரிக்கும். தான தர்மங்கள் பலன் தரும். வழக்குகள் தள்ளிப்போகும். உடல்பொலிவு கூடும். புதிய முதலீடு தவிர்க்கவும். செல்வாக்கு உயரும். வரவு திருப்தி தரும். உடன்பிறப்புக்களால் ஆதாயம் உண்டு. முயற்சிகள் பலன் கொடுக்கும். ஆரோக்யம் சீராக இருக்கும். பூமியால் நன்மை உண்டு. வியாபாரிகளுக்கு லாபம் அதிகமாகும். எதிர்ப்புக்கள் தவிடுபொடியாகும். திட்டமிட்ட காரியம் வெற்றி பெறும். பாராட்டுக்கள் கூடும். மாலை நேரத்தில் கவனம் தேவை. அத்தியாவசிய தேவைகள் பூர்த்தியாகும். நீண்ட கால எண்ணம் நிறைவேறும். உதவிகள் குவியும். வாழ்க்கைத் தரம் உயரும். பொன், பொருள் சேரும். கலக்கமான மனநிலை காணப்படும். கண்ணாடிப் பொருட்கள் சேதம் தரும். அணிகலன் சேர்க்கை ஏற்படும். புதிய சிந்தனை உதயமாகும். சேமிப்பு அதிகரிக்கும். கலைஞர்களுக்கு திருப்புமுனையான காலம். தொழிலில் ரகசியம் காப்பது நல்லது. பணியில் மாற்றம் ஏற்படும். முயற்சியில் வளர்ச்சியடையும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். நல்லச்செய்திகள் நாடி வரும். குடும்ப அன்யோன்யம் சிறக்கும். செல்வாக்கு உயரும். வீடு தேடி வெற்றி வரும். ஆழமான மேன்மைகள் தொடரும். சந்தர்ப்பங்கள் சாதகமாக அமையும். சந்தோஷம் அதிகரிக்கும்.
வழிபட வேண்டிய தெய்வம்: அனுமன், அதிர்ஷ்ட எண்: 3,9,7,2
அதிர்ஷ்ட நிறம்: கறுப்பு (கருமை), அதிர்ஷ்ட எழுத்துக்கள்: I,P

# அன்பின் தொனி - 673

பாஸ்டர் அல்பிரட் சொருபிம் (மீட்பர் கிறிஸ்து சபை - பிரம்டன்)

**படைப்புகளை வணங்காதே** - Worship not the Creations

**உன்னை படைத்தவரை வணங்கு** - Worship your Creator

**12. முழங்கால் முடங்கவும் முத்தஞ்செய்யவும்** - Kissing and bowing

ஆனாலும் பாகாலுக்கு முடங்காதிருக்கிற முழங்கால்களையும், அவனை முத்தஞ்செய்யாதிருக்கிற வாய்களையுமுடைய ஏழாயிரம்பேரை இஸ்ரவேலிலே மீதியாக வைத்திருக்கிறேன் என்றார்.
**- 1 ராஜாக்கள் 19: 18**

இப்போதும் அவர்கள் அதிகமதிகமாய்ப் பாவஞ்செய்து, தங்கள் வெள்ளியினால் வார்ப்பித்த சுரூபங்களையும், தங்கள் புத்திக்கேற்க விக்கிரகங்களையும் தங்களுக்கு உண்டுபண்ணுகிறார்கள், இவைகளெல்லாம் தட்டாருடைய வேலை, மனுஷரில் பலியிடுகிறவர்கள் கன்றுக்குட்டிகளை முத்தமிடலாமென்று இவைகளைக்குறித்துச் சொல்லுகிறார்கள்.
**- ஓசியா 13: 2**

**13. இறந்தவர்களின் ஆவியிடம் குறிகேட்குதல்** - Consult with the spirit of the dead

மந்திரவாதியும், சன்னதக்காரனும், மாயவித்தைக்காரனும், செத்தவர்களிடத்தில் குறிகேட்கிறவனும் உங்களுக்குள்ளே இருக்கவேண்டாம். இப்படிப்பட்டவைகளைச் செய்கிறவன் எவனும் கர்த்தருக்கு அருவருப்பானவன், இப்படிப்பட்ட அருவருப்புகளின் நிமித்தம் உன் தேவனாகிய கர்த்தர் அவர்களை உன் முன்னின்று துரத்திவிடுகிறார். **- உபாகமம். 18: 11**

அவர்கள் உங்களை நோக்கி: அஞ்சனம் பார்க்கிறவர்களிடத்திலும், முணுமுணென்று ஓதுகிற குறிகாரரிடத்திலும் விசாரியுங்கள் என்று சொல்லும்போது, ஜனங்கள் தன் தேவனிடத்தில் விசாரிக்கவேண்டியதல்லவோ? உயிருள்ளவர்களுக்காகச் செத்தவர்களிடத்தில் விசாரிக்கலாமோ?
**- ஏசாயா 8: 19**

**14. பேய்களை வணங்குதல்** - satan worship

அஞ்ஞானிகள் பலியிடுகிறவைகளை தேவனுக்கு அல்ல, பேய்களுக்கே பலியிடுகிறார்களென்று சொல்லுகிறேன், நீங்கள் பேய்களோடே ஐக்கியமாயிருக்க எனக்கு மனதில்லை. நீங்கள் கர்த்தருடைய பாத்திரத்திலும் பேய்களுடைய பாத்திரத்திலும் பானம்பண்ணக்கூடாதே, நீங்கள் கர்த்தருடைய போஜனபந்திக்கும் பேய்களுடைய போஜனபந்திக்கும் பங்குள்ளவர்களாயிருக்கக்கூடாதே. **- 1 கொரிந்தியர் 10: 20-21**

அவர்கள் தேவனுக்குப் பலியிடவில்லை, தாங்கள் அறியாதவைகளும், தங்கள் பிதாக்கள் பயப்படாதவைகளும், நூதனமாய்த் தோன்றிய புது தெய்வங்களுமாகிய பேய்களுக்கே பலியிட்டார்கள். **- உபாகமம் 32: 17**

அவர்கள் தங்கள் குமாரரையும் தங்கள் குமாரத்திகளையும் பிசாசுகளுக்குப் பலியிட்டார்கள். அவர்கள் கானான்தேசத்து விக்கிரகங்களுக்குப் பலியிட்டு, தங்கள் குமாரர் குமாரத்திகளுடைய குற்றமில்லாத இரத்தத்தைச் சிந்தினார்கள், தேசம் இரத்தத்தால் தீட்டுப்பட்டது. **- சங்கீதம் 106: 37-38**

**15. பண்டிகைகள்** - Feasts

யூதாவில் ஆசரிக்கப்படும் பண்டிகைக்கொப்பாக எட்டாம் மாதம் பதினைந்தாம் தேதியிலே யெரொபெயாம் ஒரு பண்டி கையையும் கொண்டாடி, பலிபீடத்தின்மேல் பலியிட்டான், அப்படியே பெத்தேலிலே தான் உண்டாக்கின கன்றுக்குட்டிகளுக்குப் பலியிட்டு, தான் உண்டுபண்ணின மேடைகளின் ஆசாரியர்களைப் பெத்தேலிலே ஸ்தாபித்து, தன் மனதிலே தானே நியமித்துக்கொண்ட எட்டாம் மாதம் பதினைந்தாம் தேதியிலே பெத்தேலில் தான் உண்டாக்கின பலி பீடத்தின்மேல் பலியிட்டு, இஸ்ரவேல் புத்திரருக்குப் பண்டிகையை ஏற்படுத்தி, பலிபீடத்தின்மேல் பலியிட்டுத் தூபங்காட்டினான்.
**- 1 ராஜாக்கள் 12: 32-33**

பின்பு ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் தேசாதிபதிகளையும், அதிகாரிகளையும், தலைவரையும், நியாயாதிபதிகளையும், பொக்கிஷக்காரரையும், நீதிசாஸ்திரிகளையும், விசாரிப்புக்காரரையும், நாடுகளிலுள்ள உத்தியோகஸ்தர் யாவரையும் நேபுகாத்நேச்சார் ராஜா நிறுத்தின சிலையின் பிரதிஷ்டைக்கு வந்து சேரும்படி அழைத்தனுப்பினான். அப்பொழுது தேசாதிபதிகளும், அதிகாரிகளும், தலைவரும், நியாயாதிபதிகளும், பொக்கிஷக்காரரும், நீதிசாஸ்திரிகளும், விசாரிப்புக்காரரும், நாடுகளிலுள்ள உத்தியோகஸ்தர் யாவரும், ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் நிறுத்தின சிலையின் பிரதிஷ்டைக்கு வந்து சேர்ந்து, நேபுகாத்நேச்சார் நிறுத்தின சிலைக்கு எதிராக நின்றார்கள்.
**- தானியேல் 3: 2-3**

**விக்கிர ஆராதனைக்காரரின் முடிவு**

மேலே கொடுக்கப்பட்ட விக்கிரக ஆராதனைக்காரருடைய வழிபாடுகளையும், வழிபாட்டு முறைகளையும் பார்தீர்கள். வழிபாடு என்ற பெயரில் நடத்தப்படும் இச் செயல்களில் சில எவ்வளவு அலங்கோலமும் அசிங்கமும் அருவருப்பானதும் என்பதை நீங்களே வாசித்து அறிந்திருக்கிறீர்கள். உண்மையான ஜீவனுள்ள தேவனை மறுதலித்து, விக்கிரகங்களுக்கும் மனிதர்களுக்கும் இப்படிப்பட்ட வணக்கங்களை செலுத்துவதை கர்த்தராகிய தேவன் வெறுப்பதுமல்லாமல் அதை செய்பவர்களையும் வெறுக்கிறார். மேலும் பொய் தேவர்களை வழிபடுபவர்களுடைய முடிவு எப்படி இருக்கும் என்பதை பரிசுத்த வேதாகமம் விளக்கமாக விபரித்துக் காட்டுவதை நாம் பார்ப்போம்:

அநியாயக்காரர் தேவனுயைட ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லையென்று அறியீர்களா? வஞ்சிக்கப்படாதிருங்கள், வேசி மார்க்கத்தாரும், விக்கிரகாராதனைக்காரரும், விபசாரக்காரரும், சுயபுணர்ச்சிக்காரரும், ஆண்புணர்ச்சிக்காரரும், திருடரும், பொருளாசைக்காரரும், வெறியரும், உதாசினரும், கொள்ளைக்காரரும் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லை. உங்களில் சிலர் இப்படிப்பட்டவர்களாயிருந்தீர்கள், ஆயினும் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலும், நமது தேவனுடைய ஆவியினாலும் கழுவப்பட்டீர்கள், பரிசுத்தமாக்கப்பட்டீர்கள், நீதிமான்களாக்கப்பட்டீர்கள்.
**- 1 கொரிந்தியர் 6: 9-11**

*தொடரும்...*



கடன் அட்டைத் தொல்லைகளிலிருந்து விடுதலை

NEW LIFE FRESH START

வங்கிக் கடன்களில் 80% வரையிலான கழிவு

Reduce your debts upto 80%

கடன் அட்டை, வங்கிக் கடன்களுக்கு விதிக்கப்பட்ட சகல வட்டிகளும் நிறுத்தப்படும்
Stop all interest on your debts

கடன் தொடர்பாக விடுக்கப்படும் தொலைபேசி அழைப்புகள், சம்பளப் பறிமுதல் போன்ற சட்ட நடவடிக்கைகள் நிறுத்தப்படும்.
Stop collection calls, Court action & Wage garnishments

உங்கள் சொத்துகள், முதலீடுகள் பாதுகாக்கப்படும்
Protect all your assets (House, Car, RRSP, RESP, TFSA, GIC)

மாதாந்த ரீதியில் ஒரே கட்டுப்பணத்தில் எல்லாக் கடன்களையும் தீர்க்க வசதி செய்தல்
Make one monthly payment to all of your creditors

வங்குரோத்துக்கு செல்லாமல் தீர்வு ஏற்பாடு செய்யப்படும்
Give you solutions without Bankruptcy



Suren Sornalingam
Post Graduate Diploma in Business Management
Government Registered (BIA) Insolvency Counsellor
Member of Canadian Insolvency Foundation

crc
CREDIT RECOVERY CANADA
10 Milner Business Court -Unit 300
Scarborough ON M1B 3C6

Tel: 647-274-2832
Fax: 416-332-0914
www.creditrecoverycanada.com

மொன்றியல் நகரில் உதயன்
விளம்பரங்கள், மரண அறிவித்தல்கள், பிறந்ததின வாழ்த்துக்கள், உள்ளூர்ச் செய்திகள் மற்றும் அறிவித்தல்களைக் கையளிக்க நாடுங்கள்.
FRUITS HABY
5925 Victoria Montreal, QC H3W 2R9
514-342-4229
514-865-0519

TRAFFIC TICKETS! Peter Joseph
Legal Representative / Paralegal
Careless Driving, Speeding, Accidents, Red lights, Stop sign, Seat Belts, Fail to Remain / Stop at the Scene, Stunt Driving (Racing), No Insurance Etc....
416-757-7707
Cell : 416-575-8797
Fax : 1-866-516 0689
E-mail: legalservice.pj@gmail.com

Keith Sanmugathas Broker
Sun Sanmugathas Broker of Record
PROPERTY MAX Realty Inc. Brokerage
SANMUGATHAS TEAM
6888 14th Ave Markham, On L6B 1A8
416-666-9464 www.iselldreamcondos.ca
416-291-0005 www.iselldreamhomes.ca

26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN உதயன்

இவ்விடத்தில் விளம்பரம் செய்ய எம்மை அழையுங்கள்
416-752-1524

உதயம் 1391 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday December 2, 2022

# "FINDER" திரைப்படத்திற்கான பூஜைகள் கனடா, தமிழகம் மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் கடந்த திங்கட்கிழமையன்று சிறப்பாக நடைபெற்றன





கனடாவில் இயங்கிவரும் "ஆரபி புரடக்ஷன்ஸ்" அதிபர் ரஜீவ் சுப்பிரமணியம் அவர்களும் தமிழ்நாட்டைச் சேர்ந்த திரைப்பட இயக்குனர் வினோத் அவர்களும் இணைந்து தயாரிக்கும் ''FINDER'' திரைப்படத்திற்கான பூஜைகள் கனடா, தமிழகம் மற்றும் எமது தாயகமான யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் கடந்த திங்கட்கிழமையன்று சிறப்பாக நடைபெற்றன. (தொடர்ச்சி 9ம் பக்கம்)

# வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்தினால் மன்னக்குளம் மாதர்கிராம அபிவிருத்தி சங்கத்திற்கு ரூபா 100,000 நிதி

வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்தினால் ரூபா 100,000 நிதி அன்பளிப்பின் மூலம் மன்னக்குளம் மாதர்கிராம அபிவிருத்தி சங்கத்தினால் தமது பிரதேசத்தை சேர்ந்த மாங்குளம் மகா வித்தியாலயம், கனகராஜன்குளம் மகா வித்தியாலயம் மற்றும் யோகபுரம் மகா வித்தியாலயம் ஆகிய பாட-சாலைகளில் கல்விகற்று வரும் பொருளாதார ரீதியாக பின்தங்கிய குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு தற்போதையமழைக்காலத்தில் பாடசாலை சென்று வருவதற்கான மழைக்கவசங்களை தந்துதவுமாறு கடிதம் மூலம்கேட்டுக்கொண்டதற்கு இணங்க 50 மாணவர்களுக்கு தலா ரூபா 2,000 பெறுமதியான மழைக்கவசங்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது



# கனடா தமிழ்க் கலைக் கல்விச்சாலை நடத்திய இவ்வாண்டிற்குரிய "மருதம்" பல்சுவைக் கலைவிழா சிறப்பாக நடைபெற்றது



ஸ்காபுறோவில் திருமதி மகேந்திரன் அவர்களின் நிர்வாகத்தின் கீழ இயங்கும் "கனடா தமிழ்க் கலைக் கல்விச்சாலை" நடத்திய இவ்வாண்டிற்குரிய "மருதம்" பல்சுவைக் கலைவிழா அண்மையில் கனடா கந்தசுவாமி ஆலய கலாச்சார மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது.

மேற்படி விழாவில் இங்குள்ள பல்வேறு நுண்கலை ஆசிரிய ஆசிரியைகள் தங்கள் மாணவர்களின் இசை நடன மற்றும் வாத்திய இசை நிகழ்ச்சிகளை மேடையேற்றினர். (தொடர்ச்சி 9ம் பக்கம்)

# கனடாவில் TikTok நட்சத்திரம் என்று அழைக்கப்பெற்ற மேஹா தக்குர் வாகன விபத்தில் மரணத்தைத் தழுவினார்





கனடாவில் TikTok நட்சத்திரம் என்று அழைக்கப்பெற்ற மேஹா தக்குர் வாகன விபத்தொன்றின் காரணமாக திடீ-ரேன மரணத்தைத் தழுவினார் என அவரது குடும்பத்தினர் இணையத்தளங்கள் மூலமாகவும் சமூக ஊடகங்கள் மூலமா-கவும் அறிவித்துள்ளனர். இவர் **Western University** மாணவி என்னும் குறிப்பிடதக்கது.
(தொடர்ச்சி 4ம் பக்கத்தில்)

# TUMS என்னும் வர்த்தக் குறியீட்டைக் கொண்ட மாத்திரைகள் கனடாவில் விற்பனையிலிருந்து திரும்பப் பெறப்படுகின்றன




கனடாவின் மருந்துச் சந்தைகளிலிருந்து அவசரமாக மாத்திரையொன்று மீளப் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது என கனடாவின் சுகாதாரத் திணைக்களம் அறிவித்துள்ளது.

**TUMS** என்னும் வர்த்தக் குறியீட்டைக் கொண்ட நெஞ்சு எரிவிற்கு பயன்படுத்தப்படும் மாத்திரைகளே இவ்வாறு கனடாவில் மக்கள் பாவனையிலிருந்து திரும்பப் பெற்றுக்கொள்ளப்படுகின்றது. என அறிவிக்கப்பட்டுள்ளது (தொடர்ச்சி 4ம் பக்கத்தில்)

புலம்பெயர் உறவுகளே! தாயகம் செல்லுகையில் இங்கு தங்கிப் பாருங்கள்..
தமிழர் நிர்வாகத்தில் இயங்கும் தரமான நட்சத்திர விடுதி
MaRadha HOTEL
COLOMBO - SRI LANKA
SALES@MARADHA.LK
+94112550136